லாச்சப்பலில்....
உங்களுக்குத் தேவையான அனைத்து மீன், இறைச்சி, கோழி வகைகளுக்கும்
கோபால் அண் கோ
சுப்பர் மார்சே
64, Rue Louis Blanc, 75010 Paris.
Tel: 01 40 05 04 50
Fax: 01 40 05 09 90

France: 10FFrs. Germany: 2.50DM Swisse: 2.50SFrs. GB: 90P
# ஈழமுரசு
Eelamurasu Weekly
முரசு: 3 06 - 12 பெப்ரவரி 1997 முழக்கம்: 108

லாக்குர்நெவில்....
உங்களுக்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களுக்கும்
KOPAL & CO
CASH & CARRY
39 Rue Maurice La Chatre,
93120 La Courneuve.
Tel: 01 48 37 00 43

# பா.ம.க.வின் ஈழத்தமிழர் பாதுகாப்புப் பேரணி

★ வெல்லட்டும் வெல்லட்டும் கருப்புலிகள் வெல்லட்டும்
★ தோற்காது தோற்காது தம்பியின் படை தோற்காது
★ எச்சரிக்கை எச்சரிக்கை சந்திரிகாவுக்கு எச்சரிக்கை

## பல இலட்சம் மக்கள் கோசம் - சென்னை நகரமே அதிர்ந்தது

கடந்த 02.02.97 ஞாயிற்றுக் கிழமை டாக்டர் ராமதாஸ் நடத்திய பாட்டாளி மக்கள் கட்சியின் ஈழத் தமிழர் பாதுகாப்புப் பேரணியில் 'வெல்லட்டும், வெல்லட்டும் கரும் புலிகள் வெல்லட்டும்', 'தோற்காது, தோற்காது, தம்பியின் படை தோற்காது', 'எச்சரிக்கை, எச்சரிக்கை, சந்திரிகாவுக்கு எச்சரிக்கை' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு கட்சியினர் ஊர்வலமாகச் சென்றனர்.

பல இலட்சக் கணக்கான மக்கள் பங்கெடுத்துக்கொண்ட இந்தப் பேரணியில், ஈழத் தமிழர்களுக்கு குரல் கொடுப்போம் 'தனி ஈழம் அமைக்கப் பாடுபடுவோம்' விடுதலைப் புலிகளை ஆதரிப்போம் போன்ற கோஷங்களும் எழுப்பப்பட்டன.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

## தேசியத் தலைவரின் விருதினைப் பெற்றவர் தாய்லாந்தில் சர்வதேச விருது பெற்றார்

அகில உலக உணவு விவசாய ஸ்தாபனம் தனது 50-வது ஆண்டு நிறைவு நாளில், தமிழ்முக் குடிமகன் திரு. கந்தையா முத்துக்குமாருக்கு சிறந்த நெற் செய்கையாளன் என்ற விருதினை வழங்கி கௌரவித்துள்ளது.

தாய்லாந்து நாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், அந்த ஸ்தாபனத்தால் மூன்று விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறந்த கடல் தொழிலாளிக்கான விருதினை பிலிப்பைன்ஸ் நாட்டினைச் சேர்ந்த திருடொனாலோ அவர்களும், சிறந்த பால் பண்ணையாளருக்கான விருதை தாய்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஒரேநாளில் இரு பெரிய தாக்குதல்கள்

## 1 இராணுவ முகாம் நிர்மூலம் - 6 காவலரண்கள் தகர்ப்பு

கடந்த 02.02.97 ஞாயிற்றுக் கிழமை கிழக்கிலும், வடக்கிலும் இரு பெரிய தாக்குதல்களை விடுதலைப்புலிகள் நடத்தியுள்ளனர். இவ் இரு தாக்குதல்களிலும் 50ற்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாவடிவேம்பு இராணுவ முகாம் மீது ஞாயிறு இரவு 12.10க்கு விடுதலைப் புலிகள் நடத்தினர். 20 நிமிடங்கள் நடந்த இத் தாக்குதலில் அந்த முகாமிலிருந்த 30 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயமடைந்தவர்களுடன் ஓடித் தப்பிக் கொண்டனர்.

முகாமை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுதங்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு முகாமை குண்டுவைத்து தகர்த்துவிட்டுச் சென்றனர்.

புலிகளின் தாக்குதலுக்கு உள்ளான இச் சிறிய இராணுவ முகாம் மிகவும் பாதுகாப்பான பகுதியில் இருந்ததாகவும் இந்த முகாம் மீதான தாக்குதல் இடம் பெற்றபோது அருகிலிருந்த சித்தாண்டி முகாமிலிருந்து மேலதிக படையினர் உதவிக்கு வரா திருக்க விடுதலைப் புலிகள் அந்த முகாம் மீதும் மோட்டார்த் தாக்குதலை நடத்தியதாகவும் கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது. இத் தாக்குதலின்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## தமிழ்நாடு மண்டபம் முகாமில் 15 ஈழத் தமிழ் இளைஞர்கள் கைது

தமிழ் நாட்டிலுள்ள மண்டபம் அகதி முகாமில் தங்கியிருந்த 15 ஈழத் தமிழ் இளைஞர்கள் தமிழக பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 27.01.97 திங்கட்கிழமை திடீரென கைது செய்யப்பட்ட இவர்கள் போராளிகள் என்ற சந்தேகத்தில் தடுத்து வைக்கப்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## ஐந்து மாகாண முதல்வர்களும் அரசுக்கு எதிராக வழக்கு தொடர முடிவு

எதிர்வரும் மார்ச் மாதம் சிறிலங்கா அரசு உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்துமுகமாக தற்போதைய உள்ளூராட்சி சபைகளை கலைத்துவிட்டதாக கடந்தவாரம் அறிவித்துள்ளது.

அரசின் இந்த ஒருதலைப்பட்ச எதேச்சாதிகாரமான நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்த மாகாணசபை முதல் அமைச்சர்கள் இந்தக் கலைப்புக்கு எதிராக நீதிமன்றத்தில் தாம் வழக்குத் தொடரத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இவ்விதம் கலைக்கப்பட்ட ஐந்து முதலமைச்சர்களும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்கள். உள்ளூராட்சி சபைகளை கலைத்த செய்கை அரசியல் யாப்புக்கு முற்றிலும் முரணான செய்கை என தெரிவித்திருக்கும் இம் முதல்வர்கள், ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்காவைச் சந்தித்து எடுக்கப்பட வேண்டிய மேல

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

KUMARS SHOP
S. A. R. L.
80, Bld. Barbes, 75018 Paris. M°: Marcadet Poissonniers
Tél: 01 42 59 35 10 / Fax: 01 42 59 35 00



K.T.C. Jewels
193, Rue du Fg. St.Denis,
75010 Paris.
M°: Gare du Nord / La Chapelle
Tél: 01 42 05 41 36

ஈழமுரசு
Eelamurasu Weekly

"EELAMURASU"
JOURNAL TAMOUL
HEBDOMADAIRE

**Siege Social**
18 à 26, Rue Perdonnet,
75010 Paris.

**RCS PARIS**
B 399 673 110 (95B01491)

**Directeur de la publication:**
P. Velupillai

**Redacteur:**
P. Sivaguru

**Impression:**
IMPRIMERIE MEAULLE

திர்வாகி:
ப. வேலுப்பிள்ளை
ஸ்தாபக ஆசிரியர்:
அமரர் க. கஜேந்திரன்
ஆசிரியர்:
பி. சிவகுரு

தபால் தொடர்புகளுக்கு:
EELAMURASU
22, Rue Perdonnet,
75010 Paris, France

விளம்பர விநியோக தொடர்புகட்கு
பாரிஸ்:
Tel.: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

ஜேர்மனி:
அருந்தவராஜா:
Tel: 02 151 39 73 83

டென்மார்க்:
S.E. MAHENDRAN
SPURVE VEJ-20,
7200 GRINSTED.
Tel + Fax: 75310546

சுவிஸ்: மக்கள் கடை
Tel: 01-271 7374

லண்டன்:
ஜெயந்தன்: - Tel: 0956908145

இத்தாலி:
S. தில்லைவாசன்
VIA DANTE - 296, PALARMO
Tel: 03473358290

நோர்வே:
JAFFNA FOOD -
Tel: 22425527

நெதர்லாந்து:
தாருவஸ்தன்
Tel: 0223 680462



லாச்சப்பலில்
சகலவிதமான அச்சுத் தேவைகளுக்கும்
**தமிழ் அச்சகம்**
Tel: 01 42 09 60 64


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஒரேநாளில்...

போது கொல்லப் பட்ட படையினரைத் தவிர 15 பேர் காயமடைந்திருப்பதாகவும் அதில் பலரது நிலை மோசமாக இருப்பதாகவும் அந்தச் செய்தி மேலும் தெரிவிக்கின்றது.

இத்தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் 18 போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதே தினம் வெற்றிலைக் கேணி புல்லாவெளிப் பகுதியில் ஆறு முன்னணிக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 15 இராணுவத்தினர் கொல்லப் பட்டுள்ளனர். 4 பேர் படுகாயமடைந்துள்ளனர். காவலரண்கள் அனைத்தும் நிர்மூலம் செய்யப்பட்டுள்ளன. அங்கிருந்த அனைத்து ஆயுத தளபாடங்களும் விடுதலைப் புலிகளால் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இத் தாக்குதல் இதே பகுதியில் வீரமரணமடைந்த இரு போராளிகளின் நினைவாக மேற்கொள்ளப்பட்டதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இவை இவ்வாறிருக்க 01.02.97 சனிக்கிழமை கிளிநொச்சி திருவையாறு பகுதியில் ஏற்பட்ட திடீர் மோதலில் 3 சிங்கள இராணுவத்தினர் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளனர். ஒரு போராளி வீரமரணமடைந்துள்ளார்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## தேசியத் தலைவரின்...

லாந்தைச் சேர்ந்த திரு. சாக்பன் தாஜோ அவர்களும், சிறந்த நெற் செய்கையாளனுக்கான விருதினை தமிழீழத்தைச் சேர்ந்த திரு. முத்துக்குமாரு அவர்களும் பெற்றுக்கொண்டனர்.

அகில உலக உணவு ஸ்தாபனத்தின் 50வது ஆண்டு நிறைவு கொண்டாடப்படும் நாளில் தமிழீழ மண்ணின் மைந்தன் கௌரவிக்கப்பட்டமை உலகத்தில் வாழும் அனைத்துத் தமிழரும் பெருமைப்படும் விடயமாகும். இதேவேளை தேசிய விடுதலைப் போராட்டம் நடைபெறும் ...ங்களிலேயே, அந் நிதான் சகல கட்டுமானங்களையும் உருவாக்கி தனது நேரடி வழிகாட்டலினை தீவிரப்படுத்தும் எமது தேசியத் தலைவர், எமது சுயசார்பு பொருண்மிய கட்டுமானத்தில் திறமையான உற்பத்தியாளர்களை இனம் கண்டு ஊக்கப் படுத்தி 1994ம் ஆண்டு வைகாசி மாதம் சான்றிதழ்களையும் விருதுகளையும் வழங்கி கௌரவித்தமை, அனைவரும் அறிந்ததே. தேசியத் தலைவரிடம் இருந்து, வேளாள மன்னன் என்ற விருதினையும், தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்ட பெருமையும் திரு. கந்தையா முத்துக் குமாருக்கு உரியது. திரு. கந்தையா முத்துக்குமாரு வவுனியா மாவட்டத்திலுள்ள, நெடுங்கேணி கிராமத்தின் ஒரு நெற்செய்கையாளர். 3 ஏக்கர் வயலில் புதிய விளைச்சலைத் தரும் நெல்லினத்தைப் பயிரிட்டு, 4 தொன் விளைவினைப் பெற்றிருக்கிறார். 1994ம் ஆண்டு வட மாகாண நெற்பயிர் போட்டியில் தங்கப் பதக்கத்தை இவர் ஏற்கெனவே வென்றுள்ளார்.


**வீடு வாடகைக்கு**

பாரிஸ் 8 இல் Métro: rome அல்லது Europe க்கு மிகவும் அருகாமையில் நல்ல நிலையில் உள்ள Studio Room (28M²) இடவசதி கொண்ட வீடு வீட்டுத் தளபாடங்களுடன் வாடகைக்கு உண்டு.

அத்துடன் Ascenseurs/ Gardien உண்டு. வாடகை 3200Frs

சகல தொடர்புகளுக்கும்: சிவா
Tel: 01 46 71 66 91
Mobile Tel: 06 09 91 12 66
(மாலை 6.00 மணி - 10.00 மணி)


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஐந்து...

இக நடவடிக்கை குறித்தும் ஆலோசித்துள்ளனர்.

இதேவேளை கலைக்கப் பட்ட உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தை மாநகரசபை ஆணையாளர்களும், பிரதேச சபை செயலாளர்களும் பொறுப் பேற்றுள்ளனர். இவர்களின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு தாம் ஒத்துழைக்கப் போவதில்லை எனவும் ஐ.தே.கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உள்ளூராட்சித் தேர்தல்களை முறையாக நடத்தவே தாம் அந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ள போதிலும், இது ஒரு அரசியல் நோக்கோடு மேற்கொள்ளப்பட்டதாக ஐ.தே.க குற்றஞ்சாட்டியுள்ளது.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்நாடு...

பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இதேவேளை ஏராளமான ஈழத் தமிழர்கள் அகதிகளாக தமிழ் நாட்டிற்கு வந்தவண்ணம் இருப்பதாக தமிழகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த 27.01.97 அன்று சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் உட்பட 119 ஈழத் தமிழ் மக்கள் அகதிகளாக இராமேஸ்வரம் வந்தடைந்ததாகவும், அவர்கள் அனைவரும் மண்டபம் முகாமில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது.




**COMPUTER CLASSES**
**IDP**

நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொம்பியூட்டர் வகுப்புக்களுடன் புதிய கொம்பியூட்டர் வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன

| | |
|---|---|
| Programmation Windows | : VISUAL BASIC 3.0 TURBO C++ 3.0, JAVA |
| Base de Données | : DBASE, ACCESS |
| Publication Assistée Par Ordinateur | : PAGEMAKER CORELDRAW |
| Bureautique | : WINDOWS 95, WORD 7 |

PUBLISHER, EXCEL7, IMAGE, PHOTOSHP

ஆரம்பிப்பவர்களுக்கு DOS, PCTOOLS வகுப்புகளும், Computer Hardware Software repair and Computer Assemble வகுப்புகளும், பிரான்ஸ் பல்கலைக்கழக(DUT) பட்டத்திற்கு அமைய கற்பிக்கப்படும்

விரிவுரையாளர்
JAFFNA IDP யின் பிரபல கொம்பியூட்டர் விரிவுரையாளர்

**MR . T . SOORIYAKUMAR**

(இவர் Parisல் கடந்த 6 வருடங்களாகவும் Jaffna IDPயில் 4 வருடங்களாகவும் விரிவுரையாளராக கடமையாற்றியவர் குறிப்பாக யாழ்பல்கலைக்கழக மாணவர்களுக்கு)
தமிழ் வழித்துணை மாணவர்கள் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ளலாம்

வகுப்புகள் 15/02/97-16/02/97 திகதிகளில் ஆரம்பமாகும்

கொம்பியூட்டர் வகுப்புக்கள் சனி, ஞாயிறு கிழமைநாட்களிலும் நடைபெறும்

மேலதிக தொடர்புகளுக்கு
**Tel : 01 . 42 . 09 . 37 . 54**

வகுப்புகள் நடைபெறும் இடம்
A.I.D.P
41, Rue De La CHAPELLE,
75018 PARIS.

M°: Porte de la CHAPELLE
41 - AIDP
Rue de la CHAPELLE
M°: Marx Dormoy

Metro : Marx Dormoy or Porte De La CHAPELLE
Bus N° : 60, 65, 350


## மரண அறிவித்தல்



பிறப்பு 01-06-1915 இறப்பு 06-01-1997

### திருமதி அல்பிரட் மார்க்கிரட்

சுவக்கின் அல்பிறட் அவர்களின் அன்பு மனைவியும் காலம் சென்ற சந்தியாப்பிள்ளை சூசைபபிள்ளையின் சகோதரியும், காலம் சென்ற மோசேஸ் மேரிப்பிள்ளையின் சகோதரியுமான அல்பிறட் மார்க்கிரட் காலமாகிவிட்டார்.

இவர் திரு. அல்பிறட் கிறிஸ்ரியன், திருமதி யேசுதாசன் மொனிக்கா, திருமதி ஞானப்பிரகாசம் அக்கினஸ், திருமதி பிரசாத் கொன்சியசிந்தா, திருமதி வோல்டர் றெஜீனா யெயறுட், திருமதி சுரேஸ்குமார் லூமீனா ஆகியோரின் அன்புத் தாயாரும், மோசேஸ் சிசிலியா, மோசேஸ் அமலதாஸ், மோசேஸ் யோசப், மோசேஸ் அலோசியஸ், மோசேஸ் கிறேஸ் மணி ஆகியோரின் பெரிய தாயாரும், கிறிஸ்ரியன் கொலஸ்ரிக்காவின் மாமியாரும் ஆவார்.

தகவல்: கிறிஸ்ரியன் கொலஸ்ரிகா
மற்றும் பேரப்பிள்ளைகள்


லாச் சப்பலில் குறைந்த செலவில் நிறைந்த பிரயாண சேவை

**Errances Travels**

Fax: 01 42 09 53 39 - Li: 075 95 01 37
55, Rue Louis Blanc, 75010 Paris.
M°: La Chapelle ou Louis Blanc
தொடர்புகளுக்கு: நாதன் (தமிழில்)

Tél 01 42 09 70 00

à partir de

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Bombay | - | 3,900Frs | Londres | - | 790Frs |
| Delhi | - | 3,900Frs | New york | - | 2,400Frs |
| Bangkok | - | 3,700Frs | Montreal | - | 2,260Frs |
| Colombo | - | 3,950Frs | Oslo | - | 2,010Frs |
| Singapour | - | 3,700Frs | Toronto | - | 2,260Frs |
| Kualalumpur | - | 3,400Frs | Nepal | - | 4,820Frs |
| Madras | - | 3,800Frs | | | |

மற்றைய நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது

ஈழமுரசு
Eelamurasu Weekly

# கனவான்களின் சுதந்திரம்

இலங்கைக்கு சுதந்திரம் வழங்கியது என்ற கேலிக்கூத்தை பிரித்தானியர்கள் அரங்கேற்றியதன் 50-வது வருட நிறைவு 04.02.1998 அன்று வர இருக்கிறது. அதை ஒரு பெரிய விழாவாகக் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளையும், கொழும்பில் ஆட்சியிலுள்ள சிங்கள அதிகார வர்க்கம் செய்து கொண்டிருக்கிறது.

1833-ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 18-ஆம் திகதி இலங்கை முழுவதையும் ஒன்றிணைத்து 'சிலோன்' என்ற ஒற்றையாட்சி அமைப்பின் கீழ் பிரித்தானியர்கள் கொண்டுவருவதற்கு முன்பு அங்கே யாழ்ப்பாண அரசு, கண்டி அரசு, கோட்டை அரசு என்ற மூன்று அரசுகளும், அவற்றுக்கென தனியான நீதி நிர்வாக அலகுகளும் இருந்தன. அதே போல் இனம், மொழி பண்பாட்டு அடிப்படையிலும் இவ்வரசுகளுக்கிடையில் தனித் தன்மையும் அதே நேரம் வேறுபாடுகளும் இருந்தன.

1833-ஆம் ஆண்டு பிரித்தானிய காலனிய அரசு தன்னுடைய நிர்வாக வசதிக்காக தன்னுடைய ஆட்சி நலனுக்காக இந்த மூன்று அரசுகளும் ஒன்றிணைந்தபோது அதற்கான அதிகாரத்தையோ, உரிமையையோ இலங்கைத் தீவிலிருந்த தமிழ் மக்களோ, சிங்களமக்களோ ஒரு போதும் வழங்கவில்லை. துப்பாக்கி முனையிலும், பீரங்கி முனையிலும் இந்த ஆட்சிகளைக் கைப்பற்றியவர்கள் என்ற ஒரே உரிமை மட்டும்தான் அவர்களுக்கு இருந்தது.

1947-இல் இரண்டாம் உலக யுத்தத்தின்பின் ஏற்பட்ட நெருக்கடிகள் அரசியல் மாற்றங்கள் காரணமாக இந்தியாவை விட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபோது, இந்தியாவைக் கண்காணிப்பதற்கான காவலனாக இருந்த (சென்றி பொயின்ட்) இலங்கையை வைத்திருக்கத் தேவையில்லையென்று ஏற்பட்ட நிலைப்பாட்டின் காரணமாக இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது என்ற நாடகம் 04.02.1948 நடந்தேறியது.

உண்மையில் பிரித்தானிய அரசு, நியாயபூர்வமான முறையில் இலங்கை மக்களுக்கு சுதந்திரத்தை அளிக்கத் தீர்மானித்திருந்தால், தான் ஆட்சியைக் கைப்பற்றியபோது இருந்த அடிப்படையில் யாழ்ப்பாண அரசு, கண்டி அரசு, கோட்டை அரசு என்ற மூன்று அரசுகளுக்கும் தன்னாட்சி உரிமையை வழங்கி விட்டுச் சென்றிருக்க வேண்டும்.

ஆனால் அது கபடத்தனமான முறையில் இலங்கையை தொடர்ந்து தனது புதிய காலனித்துவ ஆட்சி முறையின் கீழ் வைத்திருப்பதற்காக தன்னால் செயற்கையாக உருவாக்கப்பட்ட வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறையின் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தை கண்டிய சிங்களக் கனவான்களிடம் கையளித்து விட்டுச் சென்றது.

இந்த வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி அமைப்பு என்பது இலங்கைக்கு எந்த விதத்திலும் பொருத்தமில்லாதது என்பதை இதே அமைப்பு முறையை ஏற்றுக் கொண்ட கண்டிய சிங்களக் கனவான் பண்டாரநாயக்காவே ஒரு முறை ஒத்துக்கொண்டிருக்கிறார்.

1958 இனக் கலவரத்தின்பின் சிறீலங்கா பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது இலங்கையில் தமிழர்கள், கண்டியச் சிங்களவர்கள், கரையோரச் சிங்களவர்கள் என்ற இந்த மூவரும் ஒரு போதும் ஒன்று சேர்ந்து வாழமுடியாதவர்கள் என்று அவர் கூறியிருக்கிறார்.

இலங்கை மக்கள் எவரும் வெஸ்ட் மினிஸ்டர் மாதிரி அமைப்பு முறையின் படி நாங்கள் இலங்கையர்கள் என்று சிந்தித்தது கிடையாது. இலங்கைத் தேசியம் என்ற ஒன்று அங்கே ஒரு போதும் இருந்ததில்லை. தமிழ் தேசிய இனம், சிங்களத் தேசிய இனம் என்ற இரண்டு தேசிய இனங்களே அங்கிருந்து வந்திருக்கிறது.

கண்டிய சிங்களக் கனவான்கள் இந்த வெஸ்ட் மினிஸ்டர் அமைப்பு முறையை தொடர்ந்து தங்கள் கைகளில் தக்க வைத்துக் கொள்வதற்காக பௌத்த சிங்கள இனவாதத்தை துணைக்கு அழைத்து வந்திருக்கிறார்கள்.

உண்மையில் இந்த அதிகார வர்க்கத்தின் நோக்கம், ஒரு பக்கத்தில் பௌத்த சிங்கள தேசியவாதிகள் தங்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை; சிங்கள பௌத்தர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிறது என்று கூச்சல் போட்டுக் கொண்டு இருக்கும்படி செய்து கொண்டு; மறுபுறத்தில் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக, தன்னுடைய விடுதலைக்காக போராடுகின்ற தமிழ் தேசிய இனத்தை நசுக்கி அழிக்க யுத்தம் ஒன்றைக் கட்டவிழ்த்து விடுவது. பின்பு, இரு தரப்பாரையும் சமாதானப்படுத்துவது போல் இந்த வெஸ்ட் மினிஸ்ட்டர் ஆட்சி முறையின் கீழேயே பிரச்சினைக்குத் தீர்வு காணப்போவதாகப் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருப்பதே.

உண்மையில் இலங்கைத் தீவில் நிரந்தர சமாதானம் வர வேண்டுமானால் முதலில் இந்த வெஸ்ட் மினிஸ்டர் ஆட்சி முறை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். தமிழீழம், சிறீலங்கா என்ற இரண்டு நாடுகளும் தன்னாட்சியுடைய நாடுகளாக ஆகவேண்டும். அது நடைபெறாமல் எந்த அரசியல் தீர்வும், அங்குள்ள எந்தப் பிரச்சினைக்கும் தீர்வாக ஆகாது.

# ஈழம் என்பது கிடையாது இது சிங்கள துவீபம்

**- காமினி ஈரியக்கொல்லை -**

தமிழர் மீது முழுமையான போர் தொடுத்து நாம் இந்த நாட்டை காப்பாற்றிக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு சும்மா ஒரு பகுதியையேனும் தாரை வார்த்துக்கொள்ள முடியாது. அன்றை காலனித்துவ வாதிகள் சிங்களவர்களின் காணிகளை கொள்ளையடித்தார்கள். இன்று தமிழர்கள் கொள்ளை அடிக்கின்றார்கள்.

இவ்வாறு காமினி ஈரியக்கொல்லை சிங்கள இணைக்குழுவின் முன் சாட்சியமளிக்கையில் தனது இனவாதத்தினைக் கக்கியுள்ளார். ஓய்வுபெற்ற நீதியரசர் என். டபிள்யு வல்லிம்பட தலைமையில் பௌத்த சிங்கள மக்களின் குறைகளை கண்டறியும் முகமாக சிங்களப் பேரினவாதிகளால் நிறுவப்பட்ட சிங்கள ஆணைக்குழுவின் விசாரணைகள் கண்டியில் கடந்த சனியன்று ஆரம்பமாயின. மல்வத்தை மகாநாயக்கரான ரம்புக்வெல்லவிபஸ்தி தேரோ ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்துவைத்து உரையாற்றும் போது,

'சிங்கள மக்களாகிய நாம் மௌனமாக இருக்கும் ஒவ்வொரு வினாடியும் ஆபத்தானது. இவ்வாறு இருந்தால் பௌத்த மதமும், சிங்கள மொழியும் அழிந்து அந்நியர்கள் இங்கு புகுந்துவிடுவார்கள். எனவே நாம் விழித்தெழுவது அவசியம் எனக் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து சாட்சியமளித்த காமினி ஈரியக்கொல்லை, இங்குள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர்' இன்று சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் பிரஜா உரிமையை பெறுகின்றார்கள். இதற்கெல்லாம் எமது தலைவர்கள் கொடுத்த சட்டதிட்டங்களே காரணம். இச்சட்டங்களை முதலில் ஒழிக்க வேண்டும். இதற்காக போராட வேண்டும். இது முழுச் சிங்களவர்களின் நாடு. ஈழம் என்பது கிடையாது. அதுவும் சிங்கள துவீபம் தான். இதை இந்த நாட்டுத் தலைவர்கள் உணர்வதாயில்லை. ஒரு பகுதி நிலத்தை தாரைவார்த்துக் கொடுக்கவே அவர்கள் திட்டமிடுகின்றார்கள். இதற்கெதிராக சிங்களவர்கள் அனைவரும் போராட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

(1ம் பக்கத் தொடர்ச்சி)

## 4 போராளிகள் வீரமரணம்

30.01.1997 அன்று புல்லாவெளியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் லெப். பிரகலாதன், 2ம் லெப். கலைச்செல்வன் ஆகியோரும்,

01.02.1997 அன்று புல்லாவெளியில் நடந்த மோதலில் லெப். இனியவனும்,

01.02.97 அன்று கிளிநொச்சியில் நடந்த மோதலில் லெப். குயிலனும் வீரமரணத்தை தழுவிக்கொண்டார்கள்.

# பா.ம.க.வின்...

பேரணி சென்னை சைதாப்பேட்டை மறைமலை அடிகள் பாலத்திலிருந்து மாலை 3 மணிக்கு தொடங்கியது.

பாட்டாளி மக்கள் கட்சியின் வடசென்னை மாவட்ட செயலாளர் வி. ஞானம் பேரணியை தொடங்கி வைத்தார். தென் சென்னை செயலாளர் ஏ.கே. மூர்த்தி பேரணிக்கு தலைமை [illegible] சென்னை [illegible] தேவன் பேரணியை நடத்திச் சென்றார். பாண்டு வாத்தியம் முழங்க ஊர்வலம் புறப்பட்டது. பாட்டாளி மக்கள் கட்சி தொண்டர்களும், மகளிர் அணியினரும் அதைத் தொடர்ந்து தொழிற் சங்கத்தின் பல்வேறு பிரிவினரும், இளைஞர் அணியினரும் அணிவகுத்துச் சென்றனர்.

அதைத் தொடர்ந்து ஆட்டோக்கள், வான்கள், பஸ்கள், லாரிகளில் தொண்டர்கள் வந்தனர். ஆயிரக்கணக்கான வாகனங்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டன.

தலைவர்கள் ஊர்வலத்தைப் பார்வையிட படகு போன்று மேடைஅமைக்கப்பட்டிருந்தது. அது தண்ணீரில் மிதப்பது போல அமைக்கப்பட்டிருந்தது. அதற்காக மோட்டார்மூலம் தண்ணீர் இறைக்கப்பட்டது.

அந்த மேடையிலிருந்து பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ், தலைவர் பேராசிரியர் தீரன், பொதுச் செயலாளர் தலித் எழில்மலை, கட்சித் தலைமை நிலைய செயலாளர் முத்துக்குமாரு சமதா கட்சித் தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஜார்ஜ் பெர்னாண்டஸ், ஆப்பிரிக்க நாட்டு தமிழர்கள் தலைவர் கோ.மு. வீரபத்திரன், மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சி தலைவர் ஆனைமுத்து சுவிட்சர்லாந்து நாட்டு தமிழ் ஈழ ஒற்றுமை தொடர்பு மைய இணைச் செயலாளர் மதலின் மைக்கேல், பஞ்சாப் மனித உரிமை குழு தலைவர் நீதிபதி அஜித்சிங் பெய்ன்ஸ் ஆகியோர் பார்வையிட்டனர்.

உளுந்தூர்பேட்டை ஒன்றியம் சார்பாக வந்தவர்கள் தனித் தமிழ் ஈழத்தை ஆதரி, இல்லாவிட்டால் தனித் தமிழ்நாடு உருவாகும். எச்சரிக்கை! என்று எழுதப்பட்டிருந்த பதாகைகளை கொண்டு சென்றனர்.

தேனாம் பேட்டையில் அமைக்கப்பட்ட மேடையை நோக்கி வரும்போது சிலர் கையில் கற்பூரத்தைக் கொளுத்தி பூசணிக்காய் காட்டி உடைத்தனர். அதைக் கண்டு ராமதாஸ் சிரித்தார்.

தீரன் சின்னமலை மாவட்டத்தைச் சேர்ந்த சிறுவர்கள் சிலர் கோவணம் கட்டியபடி கையில் கட்சிக் கொடியை ஏந்தியபடி ஊர்வலமாக வந்தனர். தர்மபுரி தெற்கு மாவட்டம் சார்பில் வந்தவர்கள் தங்களது வண்டியில் 10 தலை ராவணன், அனுமான் போன்று வேஷமிட்டு வந்தனர்.

'கோட்டை ஏறும் வரைக்கும் கூடாதப்பா உறக்கம்' என்ற வரிகளுடன் ஆரம்பித்த பாடல்கள் ஒலிபெருக்கியின் மூலம் ஒலிபரப்பப்பட்டன.

'காப்பாற்று, காப்பாற்று ஈழத் தமிழனைக் காப்பாற்று' என்ற கோஷத்தைத் தவிர வேறு எதையும் சொல்லக்கூடாது என்று மைக் மூலம் ராமதாஸ் அறிவித்தார்.

ஊர்வலத்தில் ஆட்டோ, வேன், லொறி, பஸ் உட்பட மொத்தம் 914 வாகனங்கள் வந்திருந்தன. யானை கட், அவுட் சுமந்தபடி ஒரே ஒரு மாட்டு வண்டியும் வந்தது.

ஊர்வலம் மேடையிலிருந்த தலைவர்கள் அனைவரும் கட்சி கரை வேட்டி கட்டியிருந்தனர். ராமதாஸ் மட்டும் பட்டை போட்ட கருப்பு கரை வேட்டி கட்டியிருந்தார்.

பேரணி, அண்ணாசாலை, அண்ணா மேம்பாலம், ராயப்பேட்டை, பீட்டர்ஸ் சாலை வழியாக இரவு 9.35 மணிக்கு மேல் கடற்கரை சீரணி அரங்கை அடைந்தது.

அதன் பிறகு அங்கு ஈழத் தமிழர்கள் பாதுகாப்பு மாநாடு நடைபெற்றது. மாநாட்டுக்கு கட்சித் தலைவர் தீரன் தலைமை தாங்கினார். ஜார்ஜ் பெர்னாண்டஸ் மற்றும் ஊர்வலத்தை பார்வையிட்ட தலைவர்கள் உட்பட பலர் பேசினார்கள். கட்சி நிறுவன தலைவர் டாக்டர் ராமதாஸ் மாநாட்டில் கடைசியாக நிறைவுரை நிகழ்த்தினார். தனுசு அன்பழகன் நன்றி கூறினார்.

பாட்டாளி மக்கள் கட்சியின் ஊர்வலம் கடற்கரையை சென்று அடைந்த 20 நிமிடத்தில் போக்குவரத்து சீர்படுத்தப்பட்டது

பாட்டாளி மக்கள் கட்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

சிங்கள அரசு உடனடியாக போர் யுத்தம் செய்வதுடன் அங்கு நிலைகொண்டுள்ள படைகள் அனைத்தையும் மீளப்பெறுதல் வேண்டும். எனவே போர் நிறுத்தத்தையும் படைகள் அனைத்தையும், பாரம்பரிய தமிழ் மாகாணங்களிலிருந்து விலகிக் கொள்வதையும் மேற்கொள்ளச் செய்யுமாறு இலங்கை அரசை இந்தியா அரசு வற்புறுத்த வேண்டும்.

தமிழீழ விடுதலைப்போராட்டத்தை தேசிய இனப் போராட்டமாக இந்திய அரசு அங்கீகரித்து உலகின் ஏனைய தேசிய இன போராட்டங்களை ஆதரித்தது போலவே, தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஆதரித்து பாதுகாப்பும், உதவியும் வழங்கிட வேண்டும்.

அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ள • இலங்கைத் தமிழர்களை சிறப்பு முகாங்களில் அடைத்து வைத்து சிறை வைத்துள்ள செயலானதே எந்த வகை நீதியிலும் அடங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அகதிகளை விடுவிப்பதுடன் தமிழீழ அகதிகள் அனைவருக்கும் சர்வதேச அகதிகள் பராமரிப்பு விதிகளின் படி எல்லா உதவிகளையும் தமிழக அரசும், இந்திய அரசும் செய்து தர வேண்டும். ஆகியன மேற்கொண்ட தீர்மானங்கள் ஆகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# சிங்களவருக்கு இந்நாடு மட்டுமே உள்ளது பேராதனைப் பல்கலைக் கழக உபவேந்தர்

"இந்நாடு சிங்கள மக்களுக்குரியது. அவர்கள் தமது நாயகம் என்று கூறிக்கொள்ள வேறு நாடு கிடையாது. அவர்கள் தமது தாய்நாடான இலங்கையைக் காப்பாற்றிக் கொள்ளாது போனால் சிங்கள இனம் அழிந்து போகும். சிங்கள மக்கள் என்றால் யார்? என்று சில பேராசிரியர்கள் உட்பட படித்தவர்கள் சிலர் கேட்கிறார்கள். இந் நாட்டில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருபவர்கள் சிங்கள மக்கள். அவர்கள் எப்பாடு பட்டாயினும் தமது தனித்துவத்தைக் காப்பாற்ற வேண்டும்."

இவ்வாறு அண்மையில் சிங்கள கமிஷன் முன்சாட்சியமளித்த பேராதனைப் பல்கலைக் கழக உபவேந்தர் சிளம். மத்தும பண்டார குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில் இன்று பல ஆணைக் குழுக்கள் காளான்கள் போல முளைக்கின்றன. ஆனால் சிங்கள இனத்துக்கும், பௌத்த மதத்துக்கும் நேர்ந்துள்ள அபாயங்கள் குறித்து ஆராய்வதற்கு பூரணமான ஆணைக்குழு எதுவும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

சிங்கள பௌத்தர்களுக்கு அவர்களது தாய்நாடான இலங்கையில் காணி விநியோகத்திலேயே பெரும் அநீதி நிகழ்ந்திருக்கிறது. சிங்கள மக்களுக்கு இந் நாட்டில் பிறப்பாலேயே உரிமை இருக்கிறது. ஆனால் அந்நியர் கொண்டுவந்த சட்டங்கள் அவர்களை ஒதுக்கி வைத்துள்ளன எனவும் உபவேந்தர் மத்தும தனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார்.

# கிருசாந்தி கொலை வழக்கு மீண்டும் கொழும்பில் ஆரம்பம்

சிறீலங்கா இராணுவத்தினரால் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்ட யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தியின் வழக்கு கடந்த திங்கட்கிழமை 03.02.97 அன்று மீண்டும் கொழும்பில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ் வழக்கில் கைதடி இராணுவ முகாமைச் சேர்ந்த 9 இராணுவத்தினர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அப்துல் ஹமீட் நிஸார், சமரவிக்கிரம ஆகிய இரண்டு பொலிஸார் இவ் வழக்கில் அரச தரப்பு சாட்சிகளாக மாறியுள்ளனர்.

இவர்கள் இருவரும் கிருஷாந்தி மற்றும் அவரது தாயார், சகோதரர், அவரது அயலவர் ஆகியோரது கொலையிலோ, பாலியல் வன்முறையிலோ ஈடுபடவில்லையென விசாரணையின் போது தெரிய வந்ததாகக் கூறப்படுகின்றது.

ஆயினும் கொல்லப்பட்ட நால்வரின் உடல்களையும் செம்மணி மயானத்தில் புதைப்பதற்கு உடந்தையாகவும், உதவியாக இருந்திருப்பதாலும், இச் சம்பவத்தை நேரில் கண்டவர்களாக இருப்பதாலும் இவர்களுக்கு நிபந்தனையுடனான பொது மன்னிப்பு வழங்கி இவர்களை அரச தரப்பு சாட்சிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இவர்களோடு சேர்ந்து இவ் வழக்கில் 33 சாட்சிகள் சாட்சியமளிக்கவுள்ளனர். கிருஷாந்தியின் குடும்பத்தினரின் சார்பில் சட்டத்தரணி குமார் . பொன்னம்பலம் தனது உதவியாளர் சகிதம் ஆஜராகி உள்ளார்.

# காலை வேளையிலும் நடனம் ஓய்வுபெற்ற பொலிசாரின் நிதிக்காக

சிறிலங்கா பொலிஸ் சேவையில் கடமையாற்றி ஓய்வுபெற்ற அதிகாரிகளின் வாழ்வில் பெரும் நிதி நெருக்கடி தோன்றியுள்ளதால், அவர்களுக்கு நிதி திரட்டும் முகமாக கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர தங்கு விடுதி ஒன்றின் காலை கோப்பி வேளையில் கலை நிகழ்ச்சி ஒன்றினை வைத்து நிதி திரட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது.

"நினைவுபடுத்த ஒரு காலை" என்ற பெயரிட்டு நடத்தப்படவுள்ள இந்த நிகழ்ச்சியில் நடனங்கள், பாடல் நினைவுகள் பலவும் இடம் பெற உள்ளன. இதனை பொலீஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற அல்லது கடமையின் போது கொல்லப்பட்ட பொலிசாரின் மனைவிமாரின் சங்கமே முன்னின்று நடாத்தவுள்ளது.

அரசின் நிதியுதவி பெருமளவில் கிடைக்காத காரணத்தால் இவர்கள் இவ்வாறான நிகழ்ச்சிகள் மூலம் நிதி திரட்ட முடிவு செய்துள்ளனர்.

பிரதம அதிதியாக பொலிஸ் மா அதிபர் ராஜ குருவே அந்த நிகழ்ச்சிக்கு தலைமை தாங்க அழைக்கப் பட்டிருக்கிறார். காலை வேளையில் நிதி திரட்டும் நடவடிக்கை வெற்றி பெறுமா இல்லையா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம் என ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

CALLBACK, DIAL INTERNATIONAL TELECOM

உங்கள் தொலைத் தொடர்புகட்கான
செலவை குறைக்கும் புதிய தொலைபேசித் திட்டம்

தொலைபேசிக் கட்டணம்
மாதா மாதம்
அதிகமாகப்போகிறதா?
கவலையை விடுங்கள்!!
நாங்கள் உங்களுக்கு அறிமுகப்படுத்தும் CALLBACK எனும் புதிய தொலைபேசி திட்டத்தின் மூலம் நீங்கள் உங்கள் தொலைபேசிக்கட்டண அதிகரிப்பைக் குறைத்துக் கொள்ள முடியும்.

உலகம் பூராவும் பல்லாயிரக்கணக்கான நிறுவனங்களும், மக்களும் இத்திட்டத்தின் மூலம் பலன் பெற்று வரும் வேளையில் நீங்களும் இதன் பலாபலனை பெறமுடியும். சர்வதேச ரீதியாக அங்கீகாரம் பெற்றுள்ள இத்திட்டம் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் என நம்புகிறோம்.

**இத் திட்டத்தினால் பெறக்கூடிய பலன்கள்:**

1. மாதாந்த உங்கள் தொலைபேசிக்கட்டணம் சராசரி 60 வீதத்தினால் குறைவடைகின்றது.
2. நீங்கள் தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போது பிறர் உங்கள் பேச்சை ஒட்டுக்கேட்பதற்கான வாய்ப்பு இதில் கிடையாது.
3. மாதவாடகை எதுவுமில்லை. வரிகள் எதுவும் அறவிடப்படமாட்டாது.
4. நீங்கள் கதைக்கும் நேரத்திற்கான கட்டணத்தை மட்டும் செலுத்தினால் போதுமானது.
5. Handy Telephone உடன் தொடர்பு கொள்ளும் போது ஏற்படும் செலவு சராசரி தொலைபேசிக்கட்டணத்தை விடக் குறைவானது.
6. Credit Card இல்லாதவர்கள் எமக்கு பணத்தை நேரடியாகவோ அல்லது வங்கிமூலமாகவோ அனுப்பி வைப்பதன் மூலம் இத்திட்டத்தில் பங்கேற்கலாம்.
7. நீங்கள் கதைக்கும் தொலைபேசிக்கான செலவையும் மிகுதியாக வைப்பிலுள்ள தொகையையும் உடனுக்குடன் தொலைபேசி மூலம் அறிந்துகொள்ளலாம். இதற்கான தொலைபேசிக்கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது.
8. இத் தொலைபேசிக்கான எமது நிறுவனம் சட்டரீதியாக பதிவு செய்திருப்பதனால் எதுவித மோசடிகளோ ஏமாற்றுக்களோ இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

உங்களது தமிழ், சிங்கள, ஆங்கில மொழிபெயர்ப்புக்களை ஜெர்மன் மொழியில் செய்து கொள்ள நீங்கள் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

TH. KAMALESWARAN- RUMMEL
PAPPEL WEG -1, 70839 GERLINGEN
TEL: 07156/28613 or 07156/28641 HANDY 01714217014 - Fax: 07156/28642

, விபர கொத்துக்களை தபாலில் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் 10.00DM தபால்முத்திரையை எமக்கு அனுப்பி வைப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

மீண்டும் அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க

பாரிசில்

'ஓயாத அலைகள்'

முல்லைச்சமரில் அள்ளியெடுத்த
ஒளியிழைப் பதிவு

மேலதிக தொடர்புகட்கு: 43 58 11 42

மொழிபெயர்ப்புச் சேவை

* உங்கள் அனைத்து மொழிபெயர்ப்புகளுக்கும்,
(கடிதத் தொடர்புகள் 1 பக்கம் மொழிபெயர்க்க - 60Frs)
* தொலைநகல் (Fax) சேவைக்கும்
(35Frs வெளிநாடுகளுக்கு)
* கறுப்பு வெள்ளை / வர்ண
Photo Copie எடுக்கவும்
எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்

Copies la Chapelle
32, Rue Philippe de Girard, 75010 Paris. Tel: & Fax: 42 09 60 94

வீடு வாடகைக்கு

பாரிஸ் 11ல் Métro: Crimée ற்கு அருகாமையிலும் வியாபார ஸ்தாபனங்களுக்கு அருகாமையிலும் 2F வீடு வாடகைக்கு உண்டு.
வாடகை 4000Frs / Mois.
விற்பனைக்காயின் 300,000Frs
தொடர்புகளுக்கு: BELHADJ
Tel: 01 43 52 90 30
01 40 05 07 86

வீடு வாடகைக்கு

Aulnay s/Bois வில் Atac கடைக்கு முன்பாக 4F (78M²) கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. வீடு சகல திருத்த வேலைகளும் செய்யப்பட்ட நிலையில் உள்ளது. வாடகை 4500Frs / Mois.
தொடர்புகளுக்கு: நந்தன்
Tel: 01 43 15 06 72

ORIENT TEXTILIEN & SCHMUCK

KOENIGSWALL 16 (AM FBF), 44137 DORTMUND - TEL: 0231-162377 - FAX: 49-231-147836

* ஜேர்மனியில் தங்க நகைகளின் தரத்திற்கும், தேர்விற்கும் தனிச் சிறப்பு பெற்ற ஸ்தாபனம் சிங்கப்பூர் விலையில் S D 146,
* ஆடைகளின் நிரந்தர மலிவு விலைகள்: பனாறிஸ் சாறி 79; மைசூர் சில்க் 85; பட்டபிளை சாறி 25; குப்தா சாறி DM25; பஞ்சாபி DM 26; பட்டுவேட்டி DM 35, * கன, தரம் மிக்க எவர்சில்வர் பாத்திரங்கள், * புத்தம் புதிய டிசைன்களில் அலங்கார ஆபரணங்கள், பரதநாட்டிய ஆபரண செட் ab DM 119, * உங்கள் பழைய பவுணிற்கு குறைந்த கூலியில் உடனடியாகவே புதிய நகைகள் மாற்றிப் பெறுவதற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்! உரிமையாளர்: ச.ஜெகதீஸ்

தரம்! உத்தரவாதம்!! அதிக தேர்வு!!! மலிவு!!!!

தரமான பொருட்களை தரமற்ற பொருட்களுடன் ஒப்பிடாதீர்கள்

# சிறுவர் பாலியல் குற்றங்கள் பற்றி குழந்தைகள் என்னிடம் கேட்கிறார்கள்

## சந்திரிகா

இந்த நாட்டில் அதிகரித்து வரும் சிறுவர் பாலியல் குற்றங்களை எனது குழந்தைகள் பத்திரிகையில் படித்துவிட்டு "உங்கள் அரசு இதற்கு என்ன செய்கிறது?" என்று கேட்கிறார்கள் என ஜனாதிபதி சந்திரிகா அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பரவலாக அதிகரித்து வரும் துர் நடத்தைகளைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதியான பல நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகிலேயே கூடுதலாக குடிப்பழக்கம் உள்ள நாடாகவும் இலங்கை திகழ்கிறது எனக் குறிப்பிட்ட சந்திரிகா, இந்நிலையை மாற்றுவதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி தான் நியமித்த குழுவின் அறிக்கை இப்போது கிடைத்திருப்பதாகவும் விரைவில் அதனை அமுல்படுத்த இருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

1977-ற்கு முன்பு மூன்று கிராமங்களுக்கு ஒரு கசிப்பு விற்பனை நிலையம் இருந்தது. ஆனால், அது தற்போது பத்துப்பதினைந்தாக அதிகரித்து விட்டது எனவும் குறிப்பிட்ட சந்திரிகா, அதிகரித்துச் செல்லும் குழந்தைகள் பாலியல் குற்றங்கள் குறித்து தனது கவலையை தெரிவித்தார். இது பற்றி எனது மகனும் மகளும் என்னிடமே கேள்வி கேட்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை பேருவளையிலுள்ள விஜித சிறுவர் இல்லத்தில் இருந்த நான்கு சிறுமியர் பாலியற் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகியமை ருகுணு பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. வயதான இந்த நால்வரும் 14 வயதிற்கு உட்பட்டவர்கள் அதில் ஒரு சிறுமி எட்டு வயதானவர். இதில் இரு சிறுமியரின் கர்ப்பப் பைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

# கொழும்பு மேயர் கணேசலிங்கம் ஐ.தே.கட்சியிலிருந்து இராஜினாமா

முன்னாள் கொழும்பு மாகாண மேயர் கே.கணேசலிங்கம் ஐ. தே. கட்சியிலிருந்து இராஜினாமா செய்துள்ளார். இவர் தனது இராஜினாமாக் கடிதத்தை ஐ. தே. கட்சிச் செயலாளர் காமினி அத்துக் கொறளையிடம் கடந்த புதன்கிழமை கையளித்துள்ளார்.

ஐ. தே. கட்சியின் நீண்டகால உறுப்பினராகவும் பொருளாளராகவும் திரு. கணேசலிங்கம் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சுயேட்சைக் குழுவுக்குத் தலைமைதாங்கி கொழும்பு நகர மக்களுக்கு சேவை புரியும் விதத்திலேயே தான் இராஜினாமா செய்திருப்பதாகவும், ஐ.தே.கட்சியால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியவில்லை எனவும், ஆனால் சந்திரிகா அரசு வைத்திருக்கும் தீர்வுப்பொதி தமிழ் மக்கள் பிரச்சினையை தீர்க்கும் எனவும் திரு.கணேசலிங்கம் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை இவரது இராஜினாமாவை கொழும்புத் தமிழ்க் குழுக்கள் வரவேற்றிருப்பதுடன் தமது ஆதரவையும் அவருக்கு தெரிவித்துள்ளனர். கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் தான் சுயேட்சையாக போட்டியிட இருப்பதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

# 21ம் நூற்றாண்டை நோக்கி கடற்படையை அழைத்துச் செல்வேன்

## புதிய தளபதி

சிறிலங்கா கடற்படைக்கு புதிய தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் ரியர் அட்மிரல் சிசில் திசெர கொழும்பு பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் விரைவில் கடற்படையினை மீள் அமைப்புச் செய்யப்போவதாக தெரிவித்துள்ளார்.

வருடாந்தம் 2000 பேரை புதிதாக கடற்படைக்கு சேர்ப்பதோடு புதிய கடற்படைத் தளங்களையும் திறக்கவும் தான் திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கும் வகையில் புதிய தந்திரோபாயங்களையும், யுக்திகளையும் தான் பிரயோகிக்கப் போவதாகவும் 21ம் நூற்றாண்டிற்குரிய தகுதியோடு விரைவில் கடற்படையினரை அழைத்துச் செல்லப் போவதாகவும் பேட்டியில் குறிப்பிட்ட புதிய தளபதி இதுவரை காலமும் கடற்படையிடம் மிகுந்த பழைய சாதனங்களே பாவிப்பில் இருந்து வந்ததையும் கடுமையாக சாடும் தொனியில் சுட்டிக் காட்டியுள்ளார்.


வாடகைக்கு

Villiers sur Marne SNCF
இற்கு அருகாமையில்
110M² வீடும் 35M²
கடையும் வாடகைக்கு
உண்டு
வாடகை: 4500Frs
தொடர்புகளுக்கு: பபி
06 03 07 10 75
01 34 19 21 00



BAIL A CEDER

Boutique Vitrine 13m²
Bail 3/6/9 50m²
Loyer: 6703Frs (C.C)
Tous commerces sauf rest.
Prix: 250,000Frs
(பேசிக் குறைக்கலாம்)
55, Bld Barbes,
75018 Paris.
Tel: 01 42 23 02 27


# தமிழீழச் செய்தித் தொகுப்பு

### வீடு பார்க்கச் சென்றோர் தடுத்துவைப்பு

கிளிநொச்சி உருத்திரபுரம் பகுதியில் வீடு பார்க்கச் சென்றவர்களில் நான்கு பேர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேற்படிப் பகுதிக்குள் நேற்று முன்தினம் வந்திருந்த இராணுவத்தினரே 12 பேரைக் கைது செய்தனர். பின்னர் அதில் 8 பேர் விடுவிக்கப்பட்டனர். மிகுதி நான்கு பேர் முகாமுக்குள் கொண்டு செல்லப்பட்டனர் என விடுவிக்கப்பட்டவர்கள் கூறினர்.

### அம்பாறையில் சிப்பாய் பலி

அம்பாறை மாவட்டம் தாளம்பன் குளம் பகுதியில் சிறீலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம் பெற்ற எதிர்பாராத நேரடி மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். கடந்த 26ம் திகதி காலை 8.30 மணியளவில் ஏற்பட்ட இத்திடீர் மோதலின்போது ஏற்பட்ட சேத விபரங்கள் தெரிவிக்கப்படவில்லை.

யாழ்மாவட்டத்தில் மீசாலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் கால் நடையாக ரோந்து சென்ற இராணுவத்தினரில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒரு சிப்பாய் காயமடைந்தார்.

### விதவைகள் நலன்புரி நிலையம் உதவி

சிறீலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்கள் காரணமாக தமது கணவர்களை இழந்த விதவைப் பெண்களுக்கும் அவர்களின் பிள்ளைகளுக்கும் அக்கராயனில் அமைந்துள்ள விதவைகள் நலன்புரி நிலையம் அவர்களுக்கான உறைவிடங்களை அமைத்துக்கொடுக்க முன்வந்துள்ளது.

### இராணுவக் கண்ணி காலைப் பறித்தது.

நல்லூர் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரால் விதைத்து வைக்கப்பட்ட கண்ணி வெடியில் சிக்கி 16 வயது இளைஞன் ஒருவன் தனது காலொன்றை இழந்துள்ளார். அவரது வீட்டு வளவில் புதைத்து வைக்கப்பட்ட கண்ணி வெடியினாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

### மதறு ஓயாவில் கண்ணிவெடி

27.01.97 அன்று மதறு ஓயாப் பகுதியில் வந்துகொண்டிருந்த இராணுவ டிரக் வண்டி ஒன்று கண்ணி வெடியில் சிக்கி சிதறியது. இதில் இரண்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலபேர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர். விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

### பொது மக்கள் படுகொலை

இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள யாழ் குடாநாட்டில், சிறீலங்கா படையினரால், பல பொது மக்கள் கண்டபடி சுட்டுக் கொல்லப்படுவது, கடந்த சில நாட்களாக அதிகரித்து வருகின்றது. அண்மையில் யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த இராசலிங்கம் இரத்தினசிங்கம் என்ற 43 வயதுடைய நபரொருவர் வேலை முடிந்து மாலை வீடு திரும்பும் வழியில், படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 23.01.97 அன்று சுழிபுரம் பகுதியிலும் அப்பாவிப் பொதுமகனொருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, அவரது சடலம் யாழ் வைத்தியசாலையில் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### பாதுகாப்பு நிலையம்மீது தாக்குதல்

மட்டக்களப்பு சிறீலங்கா விமானப் படைப்பாதுகாப்பு நிலையம் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியதாகத் தெரிய வருகின்றது. 31 ஆம் திகதி காலை இடம் பெற்ற இத்தாக்குதலின்போது, விமானப் படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டதாகத் தெவிக்கப்பட்டுள்ளது.

### வைத்திய அதிகாரிகள் விசனம்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முதலாவது காலாண்டுக்கு தேவையான ஒரு தொகுதி மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன. வைத்தியசாலைக்குத் தேவையான அளவு மருந்து அனுப்பிவைக்கப்படாமல் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், இவை போதுமானவை அல்ல எனவும், வைத்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வாகரைப்பகுதி மக்களுக்கான வைத்திய சேவைக்கு சிறீலங்கா இராணுவம் தடைவிதித்து வருகின்றது. இதனால் வாகரைப்பிரதேசத்தில் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் பெரும் இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். வைத்தியசாலை இல்லாத இம் மக்களுக்கு ICRC, MSF ஆகிய தொண்டர் நிறுவனங்களே உதவி செய்கின்றன.


KBM கே.பி.எம் நகை மாளிகை KBM

அனைத்து நாடுகளுக்கான
குறைந்த விலை தொலை
பேசிச் சேவை
Telephone Cabine
53410863 53410865
53410864 53410855
தொலை பேசிச் சேவைத்
தொடர்புகளுக்கு

தொலை பேசி: 01 42.59.31.74
5, Rue Labat, 75018 Paris
Métro: Marcadet Poissonniers
KBM நகை மாளிகை
உங்கள் விருப்பம் போல் தங்க நகைகளை வடிவமைத்துத் தருபவர்கள்

# பலியான இராணுவத்தினரின் தொகையை மறைப்பதுபோல் அல்ல நீர்த்தேக்க நிலைமை

## மின்சாரசபை பொறியியலாளர்கள்

சிறிலங்கா மின்சார சபை பொறியியலாளர்களுக்கும் சக்தி வள, பிரதி பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தைக்கும் இடையேயான இழுபறி நிலை தொடர்ந்து வருகிறது. மின்சாரசபை பொறியியலாளர்கள் சங்கம் நாட்டில் ஏற்பட்டுள்ள மழை வீழ்ச்சியின் பற்றாக்குறை காரணமாக உடனடியாக தினசரி குறைந்தது அரை மணித்தியாலமாவது மின் வெட்டு அமுல்படுத்த வேண்டுமென கோரிக்கை விடுத்த போதும் அமைச்சர் ரத்வத்தை, பொறியியலாளர்களின் கோரிக்கையை நிராகரித்ததுடன் மின் வெட்டிற்கு எதிர்ப்பும் தெரிவித்துள்ளார்.

அமைச்சருக்கு நீர் நிலையிலுள்ள நீர் மட்ட அளவு உண்மையிலேயே தெரியாதா அல்லது நடிக்கின்றாரா தெரியவில்லை எனக் கூறிய பொறியியலாளர் ஒருவர் வடக்கிலோ அல்லது கிழக்கிலோ கொல்லப்படும் படையினரின் தொகையை மறைப்பது போல நீர் மட்டத்தின் நிலைமையை அவர் மறைக்க முடியாது எனவும் சீற்றமாகக் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடக்கவிருக்கும் இந்த வேளையில் மின் வெட்டினை அமுல் செய்தால் மக்களின் எதிர்ப்பினை சம்பாதிக்க வேண்டும் என கருதியே அமைச்சர் மின் வெட்டிற்கு கடும் எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளார். ஆனாலும் மின்சாரசபை பொறியியலாளர்களோ மின் வெட்டின் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றார்.

# எனது கணவரை பிரேமதாசா கொலை செய்தார்

## - சந்திரிகா -

சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா, தனது கணவரான விஜய குமாரணதுங்கவை முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவும், முன்னால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினவும் கூட்டாக சதி செய்து கொலை செய்ததாக உள்நாட்டு, வெளிநாட்டு பத்திரிகையாளர் முன்நிலையில் தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல்களை முன்னிட்டு மீண்டுமொரு அனுதாப அலையினை சிங்கள மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் முகமாக தனது கணவரது கொலையினை பிரச்சார தந்திரத்திற்கு அவர் பயன்படுத்துவதன் ஒரு பிரதியாகவே இப்பேட்டி வழங்கப்பட்டுள்ளது.

அவரது இப் பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது, எனது கணவர் 1988-ம் ஆண்டு மாசி மாதம் 16-ம் திகதி பிரேமதாசா, ரஞ்சன் குழுவினரது நேரடிப் பணிப்பின் பேரில் படுகொலை செய்யப்பட்டார். இவரது கொலைக்கு முன்னாள் ஐ.தே.க. அமைச்சரான காமினி லொக்குகேயின் கைத்துப்பாக்கியே பயன்படுத்தப்பட்டது.

1989-ம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் எனது கணவர் ஒரு வேட்பாளராக வந்து விடக் கூடாது என்ற காரணத்தாலேயே இக்கொலை செய்யப்பட்டது. இதற்கு உடந்தையாக இருந்த பல பொலிஸ் உயரதிகாரிகள் ஓய்வு பெற்று விட்டார்கள். ஆனாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கொலையாளி கூட கொலை செய்த சில மணித்தியாலத்தில் மத்திய கிழக்கு நாடொன்றுக்கு தப்பிச் செல்ல வழிவகுக்கப்பட்டது எனவும் அவர் அப்பேட்டியில் குற்றஞ் சாட்டியுள்ளார்.

# வெதுப்பக ஊழியர்கள் இருவர் புக்காரா குண்டு வீச்சுக்குப் பலி

உடையார் கட்டிலுள்ள வெதுப்பகம் (பேக்கரி) ஒன்றின் இரு ஊழியர்கள் சிறிலங்கா விமானப் படையினரின் புக்காரா விமானங்களிருந்து வீசப்பட்ட குண்டுகள் காரணமாக உடல் சிதறிப்பலியானார்கள். இன்னுமொரு பெண் படு காயமடைந்து ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 30-ம் திகதி வியாழக்கிழமை மாலை 5.30 மணியளவில் விரைந்து வந்த புக்காரா விமானம் ஒன்று; வெதுப்பகத்தினை இலக்காக வைத்து தனது குண்டு வீச்சுத் தாக்குதலை நடாத்தியது. அச்சமயத்தில் அங்கு கடமையாற்றிக் கொண்டிருந்த கந்தையா ராஜகுமார் (31), விஷ்ணுகுமார் வேல்மயில் (40) ஆகியோர் உடல் சிதறி அவ்விடத்திலேயே பலியானார்கள். சரோஜாதேவி (27) என்னும் யுவதியே படுகாயமடைந்தவராவார்.

இதேவேளை இவ் புக்காரா விமானங்கள் இச்சம்பவம் நடப்பதற்கு முதல் நாளன்று உடையார் கட்டுப் பகுதியிலுள்ள வயற்பகுதிகளை இலக்காக வைத்துத் தாக்குதலை நடாத்தின. இதன் காரணமாக அறுவடைக்குத் தயாரான நிலையிருந்த நெறபயிர்கள் யாவும் பாழடிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அப்பகுதியில் காணப்பட்ட கால் நடைகளும் கொல்லப்பட்டுள்ளன.

# திருமலை சந்தை குத்தகை இடை நிறுத்தம் சந்திரிகாவின் உத்தரவு

திருமலை மரக்கறிச் சந்தை குத்தகை தமிழர் ஒருவருக்கு வழங்கப்பட்டமை தொடர்பாக சிங்களவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருவதால் சந்தைக் குத்தகையை இடை நிறுத்தம் செய்வதற்கான சந்திரிகாவின் உத்தரவினை, ஜனாதிபதி செயலக அதிகாரிகள் திருமலை நகர சபை தலைவரிடம் தெரிவித்துள்ளனர்.

கடந்த வாரம் திருமலை நகர சபைத் தலைவரை நேரடியாக ஜனாதிபதி செயலகத்திற்கு அழைத்த அதிகாரிகள், அவரிடம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளளனர். சந்தைக் குத்தகையை தமிழர்களிடமிருந்து பறிக்கும் வரை ஓயமாட்டோம் என பௌத்த பிக்குகள் சபதம் எடுத்ததுடன் தமது அறிவிப்பினை சந்திரிகாவிற்கு வெளியிட்டதைத் தொடர்ந்தே இம் முடிவு எடுக்கப்பட்டதாக தெரிய வருகிறது.

இதேவேளை போயா தினங்களில் சந்தையை மூட அனுமதிக்க மாட்டோம் என நகர சபைத் தலைவர் திட்ட வட்டமாக அந்த வேளையில் தெரிவித்தாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## மரண அறிவித்தல்

தோற்றம்: 15 03 1927



மறைவு: 27 01 1997

### திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை

பளை- தம்பகாமத்தைப் பிறப்பிடமாகவும், வத்திராயன்- தாளையடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா கணபதிப்பிள்ளை 27.01.97 திங்கட்கிழமை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (இலங்கை), காலம் சென்ற இந்திராணி, காலம் சென்ற அம்பிகாவதி, காலம் சென்ற பகவதியம்மா, பாலச்சந்திரன் (நோர்வே) திருஞானசம்பந்தன் (நோர்வே) பாலசுந்தரம் (டென்மார்க்), மகேஷ்வரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும்;

சிவலட்சுமி, குணபாலசிங்கம், இராசகுரி, சாந்தி, செல்வதி, ஜெயந்தி, தவராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும்;

துஷ்யந்தி, சிவாஜினி, விக்கினேஸ்வரன், அருணிதா, நிலானி, நிரோஜன், நிரோஜினி, ஜெனுஷன் ஆகியோரின் அப்பம்மாவும்;

நந்தினி, பிரபாகரன், சுகந்தினி, சார்ள்ஸ், சாளினி, சாந்தியன், ரஜீத், பிரசாத், தினேஷ் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் திருகோணமலையில் 30.01.97 வியாழக்கிழமை நடைபெற்றன. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்: தவராஜா (மருமகன் - ஜேர்மனி)
தொலைபேசி: 0261/804607

## மரண அறிவித்தல்

### திருமதி. கந்தையா செல்வச்சிரஞ்சீவி

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த கந்தையா சிரஞ்சீவி 28.01.97 அன்று நீர்வேலியில் காலமானார்.

அன்னார் திரு. வைத்திலிங்கம் கந்தையாவின் அன்பு மனைவியும், சசிகலாதேவி (கனடா), சந்திரகுமார் (கனடா), கலா (கனடா), இந்திரகுமார் (சுவிஸ்), ஆகியோரின் அன்புத்தாயாரும் பழனிப்பிள்ளை, ரேனுகா, இரட்ணசிங்கம், சறோ ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

இத் தகவலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: இந்திரகுமார் (சுவிஸ்),
சந்திரகுமார் (கனடா)
T.P. 0319720234

## மரண அறிவித்தல்

மலர்வு: 02 12 1935



உதிர்வு: 31 01 1997

### திருமதி கிறிஸ்தோபர் கிறிஸ்ரீனா

யாழ்ப்பாணம் நாரந்தனை வடக்கை பிறப்பிடமாக கொண்ட திருமதி கிறிஸ்தோபர் கிறிஸ்ரீனா (வேவி) கொழும்பில் காலமானார்.

இவர் மிக்கேல் ஹூர்துவின் அன்பு மகளும், றோஸ்மலர், செல்வமலர் (கொழும்பு) பாக்யலீலா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானசீலன் (இலங்கை) ஞானதீபன் (பாலன்) (பிரான்ஸ்), ஞானசீலி (இலங்கை), சுசில்டா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், றதி, பபி, பீற்றர், அமிர்தநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும், வினி, ஜெனி, சாமினி, நெல்சன், கமல், அனோஜன், வெனிஸ்சன், வினோதன், விபிர்ஷன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமக் கிரியைகள் கொழும்பில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்
தொலைபேசி இலக்கம்: 01 46 70 62 90 (பாரிஸ்)
221 700 47 98 (ஜேர்மனி)

# இரண்டாம் மாதம் இரண்டாம் நாளில் இரு தாக்குதல்கள்

கொழும்பிலிருந்து தமிழரசன்

இவ்வருட ஆரம்பத்தில் இருந்து படையினர் மீதான தாக்குதல்களை தமிழீழ விடுதலைப் புலிகள் உக்கிரப்படுத்தி வருகின்றனர். தினமும் வடக்கிலோ, கிழக்கிலோ படையினருக்கு உயிரிழப்பை ஏற்படுத்தி வருகிறார்கள். கடந்த ஜனவரி மாதத்தில் பரந்தன், ஆனையிறவு இராணுவ முகாம்கள் மீதான தாக்குதல்கள், கெப்பித்திக்கொல்லாவ பொலிஸ் காவல் நிலையத் தாக்குதல் ஆகியன படையினர் தரப்பில் பாரிய உயிர் சேதத்தையும் ஆயுத இழப்பையும் ஏற்படுத்தி விட்டன.

இவ்வருடத்தில் இரண்டாம் மாதம் பிறந்த இரண்டாவது நாளில் கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மாவடி வேம்பு, வடக்கில் உள்ள வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ நிலைகள் மீது ஞாயிறு அதிகாலை தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதல்களினால் 50க்கும் அதிகமான இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டு விட்டார்கள். இருபத்தியொரு இராணுவ வீரர்கள் மரண காயங்களுக்கு உள்ளானார்கள்.

மாவடி வேம்பு இராணுவ முகாம் மட்டக்களப்பு _வாழைச்சேனை பிரதான பாதையில் அமைந்துள்ளது. ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 130 மணியளவில் பெரும் எண்ணிக்கையிலான விடுதலைப் புலிப் போராளிகள் முகாமைச் சூழ்ந்து நான்குபுறமும் தாக்குதல் நடாத்தினார்கள். நாற்பத்தி ஐந்து நிமிடத்தில் முகாம் புலிகளிடம் வீழ்ச்சிகண்டது. அதனை

மாவடிவேம்பு இராணுவ முகாம் தாக்குதலுக்கு இலக்காகிக் கொண்டிருந்த பதினைந்தாவது நிமிடத்தில் அதாவது அதிகாலை 145 மணிக்கு வடக்கில் வெற்றிலைக்கேணி இராணுவ முன்னணிக் காவல் அரண்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தினர். புலிகளின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் படையினர் அங்கிருந்து தப்பி ஓடினர். இத்தாக்குதலில் 18 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். நான்கு பேர் காயமடைந்தனர். காவல் அரண்களைக் கைப்பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் அங்கிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றிக்கொண்டு அவ்

அடுத்து முகாமில் இருந்த அனைத்து ஆயுதங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றினர். பின்னர் மோட்டார் குண்டு தாக்குதல் நடாத்தி முகாமை நிர்மூலம் செய்தனர். இந்த மோதலில் இருபத்தி நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டார்கள். பதினேழு பேர் படுகாயமடைந்தனர். பல இராணுவ வீரர்களைக் காணவில்லை என்றும் கூறப்படுகிறது.

அரண்களை நிர்மூலமாக்கி விட்டுச் சென்றனர்.

மாவடி வேம்பு இராணுவ முகாமின் முன்னணி காவல் அரண்கள் மீது கடந்த புதன்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகள் நடாத்திய பிறிதொரு தாக்குதலில் இரண்டு படைவீரர்கள் கொல்லப்பட்டனர்.

மாவடி வேம்பு இராணுவ முகாம் தாக்குதலின் போது அருகில் உள்ள இராணுவ முகாம்களில் இருந்து உதவிக்கு வருவதைத் தடுப்பதற்காக சித்தாண்டி இராணுவ முகாம் மீதும், ஏறாவூர் முகாம் மீதும் புலிகள் மோட்டார் தாக்குதல்களை நடத்திக்கொண்டிருந்தனர்.

கடந்த திங்கட்கிழமை புதிய கடற்படைத் தளபதியாக வைஸ் அட்மிரல் சிசில் திசேர பதவியேற்றார். அவர் பதவியேற்று நாற்பத்தியெட்டு மணித்தியாலங்கள் முடியும் முன்னர் காரைநகர் துறைமுக பகுதிக்குள் ஊடுருவிய தமிழீழ விடுதலைப் புலிகள் மூன்று கடற்படையினரைச் சுட்டுக்கொன்றனர்.



தமிழீழ விடுதலைப் புலிகள் தினமும் படையினரைக் கொன்று வருவதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. இப்பொழுது வடக்கு, கிழக்கு தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் முப்படைகளுக்கும், பொலிசாருக்கும் ஆட்களைத் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சைகள் நாளாந்தம் நடைபெற்று வருகிறது. இக்கால கட்டத்தில் படையினரைக் கொன்றொழிப்பதன் மூலம் படைகளுக்கு சேர விரும்பும் சொற்ப எண்ணிக்கையிலான இளைஞர்கள் மனதில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் அவர்கள் படையில் சேருவதை தடுத்துவிட முடியும். இது ஒரு மனோதத்துவ வைத்தியம் என கொழும்பில் இராணுவ ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

* * * * *

# கொழும்பில் சயனைட் அருந்தி தமிழ்ப் பெண் மரணம்

வடக்கு, கிழக்கு யுத்த நிலவரங்கள் இப்படி இருக்க எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் கொழும்பில் பாரிய குண்டுத் தாக்குதல்களை நடத்த தமிழீழ விடுதலைப் புலிகள் தயாராகி வருவதாகப் புலனாய்வுப் பிரிவினருக்கு தகவல் கிடைத்துள்ளது. இதற்காக ஏழு பேரைக் கொண்ட தற்கொலைப் படைப் பிரிவொன்றை தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடம் கொழும்புக்கு அனுப்பி இருப்பதாகவும் புலனாய்வுப் பகுதியினர் தெரிவிக்கினறனர். அவர்களின் பெயர் விபரங்கள் படங்களுடன் கடந்த வாரம் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தன. பெரும்பாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் கொழும்புத் துறைமுகம், விக்டோரியா பாலம் ஆகியவற்றை குறிவைத்திருப்பதாக பொலிசார் சந்தேகப்படுகின்றனர். குண்டுத் தாக்குதல் தகவலை அடுத்து கொழும்பு நகரில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கின்றது. முப்படையினரும் சோதனை நடவடிக்கைகளிலும், தேடுதல் நடவடிக்கைகளிலும் இராப் பகலாக ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையில் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு, கொம்பனித்தெரு கங்காராம விகாரைக்கு முன் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனை நிலையத்தில் வைத்து கேதீஸ்வரி என்ற இளம் பெண் சயனைட் உட்கொண்டு மரணமடைந்துள்ளார். இதனை அடுத்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவினர் கொழும்பிற்கு வந்திருப்பது உறுதியாகிவிட்டதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

* * * * *

**தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் திருமதி. ரொபின் ராபெல், ஜெனரல் அநுருத்த ரத்வத்தை உட்பட பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்து இலங்கை படையினருக்கு ஆயுதம் மற்றும் யுத்த பயிற்சி அளிப்பதுபோன்ற விவகாரங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளார்**

இதற்கிடையில் இலங்கையின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையிடும் சாத்தியக் கூறுகள் அதிகரித்து வருவதாக இடதுசாரி அரசியல் அவதானிகள் கருத்து தெரிவிக்கின்றனர். கடந்த வாரம் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் திருமதி. ரொபின் ராபெல் இலங்கை வந்தார். அவர் நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான ஜெனரல் அநுருத்த ரத்வத்தை உட்பட பாதுகாப்பு அதிகாரிகளை சந்தித்துள்ளார். இலங்கை படையினருக்கு ஆயுதம் மற்றும் யுத்த பயிற்சி அளிப்பதுபோன்ற விவகாரங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடாத்தி இருப்பதாக பாதுகாப்பு உயர்மட்டத் தகவல்கள் மூலம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இலங்கை படையினருக்கு அமெரிக்காவில் வைத்து பயிற்சி அளிப்பது குறித்து திருமதி ரொபின்சன் ராபெல் இணங்கி இருப்பதாகவும் தெரிகிறது. அடுத்த வாரம் பிரிகேடியர் சாந்தகோட்டே கொடாவும், லெப்டினன் கேணல் வவிசுந்தராவும் இராணுவ உயர் பயிற்சிக்காக அமெரிக்கா செல்ல இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பாரிஸ் லாசப்பலில்

# தர்ஷனா உணவகம்



நீங்கள் விரும்பிய சுத்தமான, சுவையான இலங்கை, இந்திய அறுசுவை உணவு வகைகளை சுவைத்து மகிழ்ந்திடவும் அனைத்துவிதமான உணவு வகைகளையும் ஓடருக்குப் பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்

23, Rue Perdonnet, 75010 Paris. - Tel: 01 40 05 08 36 / 06 80 02 93 41

## உள்ளதைக் கொஞ்சம் ஒழுங்காக் கதைப்பம்

**தாயே தமிழே வணக்கம்! தாய் பிள்ளை உறவம்மா.... எனக்கும்! உனக்கும்!**

அருமையான பாட்டு. சினிமாப்பாட்டுத்தான் எண்டாலும்... இதயத்தை அப்பிடியே மெல்லிசாய் தடவிவிட அழுகை வருகிற மாதிரி இருக்குதெல்லே... அதுதான். அதுதான் சொல்லுறது நல்ல பாட்டெண்டு.

காலை 4 மணிக்குத்தான் மாநாடு முடிஞ்சிருக்கெண்டால்.. கணக்கைப் பாருங்கோவன். மாநாட்டில கலந்துகொண்ட முன்னாள் அமைச்சரும் இந்நாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜோர்ஜ பெர்னாண்டஸ் பேசேக்க.. பூடகமாய் குத்தல் கதையும் விட்டிருக்கிறார். முன்பு தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளை பகிரங்கமாக ஆதரித்தார்கள். இப்போது தமிழர் பிரச்சினையைப் பற்றி விவாதிக்கவே அச்சப்படுகினம். இப்பிடியான சந்தர்ப்ப வாதிகளை

பெற்றுவருகுது. நெடுமாறன் கூட்ட இருந்த ஈழத் தமிழர் மாநாட்டுக்குத் தடை. 1995 இல புலிகளுக்கு ஆதரவாய் பேசினார் எண்டதுக்காக நெடுமாறன்

### சடையர்

மீது வழக்கு. ஜெயலலிதா காலத்தில காவியநாயகன் கிட்டு எண்ட புத்தகத்தை எழுதி வெளியிட்டதுக்காக நெடுமாறனுக்கும் அவரின்ர துணைவியாருக்கும் நீதிமன்ற அழைப்பாணை. நவம்பரில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்தின மாநாட்டில் புலியளுக்கு ஆத

பாடாக கலைஞரின் இதயம் துடிக்கக் கூடாது. ஏழுகோடி தமிழர்களின் இதயத் துடிப்பாய் கலைஞர் ஒலிக்க வேண்டும் என்பதே உலகத் தமிழினத்தின் வேண்டுகோள்.

**தமிழை நேசிப்பவன்**
**தமிழீழத்தை நேசித்தே தீருவான்.**
**தமிழீழத்தை நேசிப்பவன்...**
**தமிழீழ விடுதலைப் புலிகளை**
**ஆதரிப்பான்..... அதன் வரலாற்றுப்**
**பிதாமகன் பிரபாகரனைப் பூசிப்பான்**

இது மாறாத மாற்றப்பட முடியாத இயற்கை விதி. இதை தலைகீழாய்ப் பார்த்தால்.. பிரபாகரனை நேசிக்காதவன் விடுதலைப் புலிகளை நேசிக்காத

# இங்க வெடிக்க.... அங்க துடிக்கிற உறவு!

தமிழகத்துக்கும் எங்களுக்கும் அதுதான் உறவு. இரத்த சம்பந்தமான உறவு- முலைப்பால் சம்பந்தமான உறவு... தொப்புள்கொடி உறவு.. இங்க வெடிக்க அங்க துடிக்கிற உறவு. இது விட்டுப் போகாது. தமிழன் எண்டொரு இனம் இந்த உலகப் பரப்பில இருந்து இல்லாதொழிந்ததெண்டொரு காலமிருந்தால்.... இந்த வெடிப்புமில்லை இந்தத் துடிப்புமில்லைத்தான். ஆனால் இஞ்ச அரைலெட்சம் இருந்து துடிக்கிறதை அங்கயிருக்கிற அஞ்சரை இலட்சம் தாங்கிக் கொண்டிருக்காதுகள். அதுதான் துடிக்குதுகள்...

எல்லாம்.... எங்கட பாட்டாளி மக்கள் நடத்தின பேரணி மாநாட்டைப் பற்றித்தான். ஏழு இலட்சத்துக்கும் மேலான சனங்கள் திரண்டு ஒரு பெரிய உணர்வலையாய் வழிநெடுகக் கோஷம் எழுப்பிக்கொண்டு எழுச்சியோட சென்ற காட்சியிருக்கே... உண்மையில புல்லரிக்கிற காட்சி. ஈழத்தமிழன் கைவிடப்பட்ட அநாதை இல்லை எண்டதை அடிச்சுச் சொல்லுற பேரணி முழக்கம் சென்னைத் தெருக்களில் எதிரொலிச்சுக்கொண்டே இருந்தது. மத்திய அரசு தடைவிதிக்குமோ, மாநில அரசு தடை விதிக்குமோ எண்டு தயக்கம் நிலவின இடத்தில ஒரு சரித்திரம் படைக்கப்பட்டிருக்குது எண்டால் மிகைப்படுத்திச் சொல்லுறதாகாது.

**"வெல்லட்டும் வெல்லட்டும்**
**கரும்புலிகள் வெல்லட்டும்"**

**"தம்பியின் படை தோற்காது"**

இப்பிடி முழக்கமிட்டுக்கொண்டெல்லாம் தமிழர் படை அலையலையாய்... உணர்ச்சிவெள்ளமாய் விரைப்பட்டுச் சென்ற காட்சி... வெளிநாட்டுச் செய்தியாளர்களையும் கவர்ந்திருக்குது எண்டது புதுமையில்லைத்தானே.

முதல்நாள் பின்னேரம் 3 மணிக்கு பேரணி ஆரம்பமாகி அடுத்தநாள் அதி

தமிழ் மக்கள் அடையாளம் கண்டு கொள்ள வேணும் எண்டு மாநாட்டில் பெருத்த கைதட்டலுக்கிடையில் பகிரங்கமாகவே தெரிவிச்சிருக்கிறார்.

**தமிழை நேசிப்பவன்**
**தமிழீழத்தை நேசித்தே தீருவான்.**
**தமிழீழத்தை நேசிப்பவன்...**
**தமிழீழ விடுதலைப் புலிகளை**
**ஆதரிப்பா[illegible] அதன்**
**வரலாற்றுப் பிதாமகன்**
**பிரபாகரனைப் பூசிப்பான்**

வடக்கில இருந்து வந்த ஒரு அரசியல் தலைவர்.. தெற்கில இருக்கிற தமிழின ஆதரவுத் தளத்தில உள்ள பலவீனத்தை புட்டுவைக்க வேண்டிக் கிடக்கெண்டது கொஞ்சம் சங்கயீனமாய்த்தான் கிடக்குது. மற்றத் தலைவர்களின்ர மதிப்பீட்டில, எந்த லெவலில நிக்கிறம் எண்டதைத் தமிழினத் தலைவர்கள் கொஞ்சம் கவனிக்க வேணும்.

கலைஞர் ஆட்சிக்கு வரேக்க.. ஈழத் தமிழருக்கு இருந்த ஆறுதலும் ஆர்வமும் உலகத் தமிழருக்கும் இருந்ததில வியப்பில்ல. அதேமாதிரி தமிழகத்தில உண்மையான தமிழ்ப்பற்றும், ஈழத் தமிழர்கள் மீது ஆதரவும் அனுதாபமும் கொண்ட மக்களுக்கும் கலைஞர் அரியணை ஏறுறதெண்டது தேனாய் இனிச்ச விசயம்தான். ஆனால்.. நிலைமை நினைச்ச மாதிரி இல்லையெண்டது தான் பொது அபிப்பிராயமாய் வலுப்

ரவாகப் பேசினார்கள் என்ற குற்றச் சாட்டில் சுப. வீரபாண்டியன், பெமணியரசன் ஆகியோர் கைது, விடுதலைப் புலிகள் மீதான தடையை எதிர்க்க

வில்லை, ஜெயின் கமிசன் முன் கலைஞர் வாக்குமூலம்.

...இப்பிடியான செய்தியள்தான் தமிழகத்தில இருந்து வந்துகொண்டிருக்குது. உலகத்தில உள்ள ஏழுகோடி தமிழர்களின் இதயங்களில் வீற்றிருக்கக் கூடிய அரிய சந்தர்ப்பத்தை கலைஞர் தானாகவே துறக்கக்கூடாது எண்டதுதான் உலகத் தமிழர்களின் வேண்டுகோள். இப்பவும்கூட நம்பிக்கை எண்ட துளிர் துளிர்க்கத்தான் செய்யுது. காய்ந்துவிழும் செய்திகள் காதில விழுந்தாலும்..... இந்த நம்பிக்கைத் துளிர் துளிர்க்கத்தான் செய்யுது.

மத்திய அரசினதும்.... இந்திய உளவுத் துறையினதும்.... பார்ப்பனக் கும்பலினதும்.... விடுதலைப் புலிகளுக்கும் ஈழவிடுதலைக்கும் எதிரான அனாகரிக கும்பலினதும் விருப்பங்களின் வெளிப்

வன் ஆகிறான். விடுதலைப் புலிகளை நேசிக்காதவன்... தமிழீழத்தை நேசிக்காதவன் ஆகிறான். தமிழீழத்தை நேசிக்காதவன்.... தமிழை தூசிப்பவன் ஆகிறான்!!

என்ன சொல்லுறது சரிதானே!!

அதை விட்டிட்டு... தமிழீழத்தை ஆதரிக்கவில்லை.... ஆனால் கிடைத்தால் மகிழ்ச்சியே.. புலிகளை வெறுக்கிறேன் தமிழ் மக்களை ஆதரிக்கிறேன் எண்டதெல்லாம் வெறும் புலுடா. விருப்பமெண்டால்.... ஆரும் சொல்லிப் போட்டுப் போகட்டும் ஆள் பெரிய மண்டைக்காய்... பிடிபடாமல் பதில் சொல்லுறார் எண்டு. ஆனால்... ஆர்த்தெழுந்து அவாவும் அன்பு உறவுக்கு இந்த... கண்கெட்ட ராஜதந்திரம் பிடிபடாது.

அல்லல்பட்டிருக்கிற தமிழினத்துக்கு உறுதியான தலைவர்கள்தான் வேணும். பிரபாகரன் மாதிரி! நறுக்குத் தெறிச்சதுபோல கதைபேச்சுக்கள் வெட்டொன்று துண்டுரெண்டாய் இருக்க வேணும். கொள்கைப்பிடிப்பு, யாருக்கும் அஞ்சாத உறுதி இதுதான் வேணும்! இதுதான் அநாதைகளாய் உலகம் பூராவும் நாடின்றி நாடோடிகளாய்த் தவிக்கும் உலகத் தமிழினத்துக்கு... ஒரு தாய

### ஓர் அலசல்

நிலத்தையும் சுதந்திரமான கௌரவமான மனிதர்கள் என்ற அந்தஸ்த்தையும் தேடித் தரும். தலைவர்கள் வளைய வெளிக்கிட்டா.... அவர்களின் அடியொற்றி நிற்கிற இனமே வளையும். அதிலை மற்றவர்கள் மூட்டை ஏத்தி விடுவாங்கள். இதுதான் நடந்தது! இனி நடக்கக்கூடாது!!

வரலாறு முன்னோக்கித்தான் நகரும்!!!

லாச்சப்பலில்... உங்களின் தேவைக்காக எங்களின் சேவையினை ஆரம்பித்துள்ளோம்

நியூ சப்பல் ஸ்ரோர்ஸ்

"மளிகைப் பொருட்களின் மாளிகை"

உங்களுக்குத் தேவையான மளிகைப் பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள இன்றே விரையுங்கள்.

NEW CHAPELLE STORES

214, RUE DU Fbg. St. DENIS, 75010 PARIS - TEL: 01 40 36 20 35 / FAX: 01 40 36 20 36

# வன்னிப் பிரதேச அபிவிருத்தி செயற்படுத்தப்பட வேண்டிய 3 கட்ட நடவடிக்கைகள்

கிராமிய விவசாய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வன்னிப் பிரதேசத்தில் கிராமிய சமூகங்களின் மாற்றமும் முன்னேற்றமும் குறித்து கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமாகும். குடியேற்றத் திட்ட கிராமங்கள், பாரம்பரிய பூர்வீகக் கிராமங்கள் என நாம் இங்குள்ள கிராமிய சமூகத்தை அடையாளப்படுத்த முடியும்.

இன்றைய வன்னிப் பிரதேச கிராமிய சமூகம் விவசாய அடிப்படையில் முதற்படி முறையிலேயே நிற்கின்றது. அதாவது ஜீவனோபாயத்தை கொண்ட ஓர் ஆரம்ப விவசாய சமூகமாகவே அதனை அடையாளப்படுத்த முடிகிறது.

இச் சமூகத்தில் கையாளப்படும் 'விவசாய முறையிலேயே பல்வேறுபட்ட குறைகள் இனங்காணப்படக் கூடியதாக உள்ளன.

இத்தகைய கிராமிய பொருளாதாரத்தை கலப்புப் பண்ணைகளாக மாற்றியமைத்து, வர்த்தகம் நோக்கிய உயர் பண்ணை முறைக்கு இட்டுச் சென்று நவீன விவசாய பொருளாதார நிலைக்கு மாற்றியமைப்பதற்கு வேண்டிய அடிப்படை

1948 முதல் உலர் வலையப் பிரதேச அபிவிருத்தியில் கூடிய அக்கறை காட்டப்பட்டு வந்துள்ளது. வன்னிப் பிரதேசத்தில் எற்படுத்தப்பட்ட பல்வேறு விவசாய குடியேற்றத் திட்டங்களும் பாரம்பரிய கிராமங்களுக்கு வழங்கபபட்ட நீர்ப்பாசனம் போன்ற அடிப்படை வசதிகளும் ஒன்றிணைந்து விவசாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்றே நம்பபப்பட்டது.

மேற்படி அடிப்படையில் கடந்த தசாப்தங்களில் இக் கிராமியப் பொருளாதாரத் திட்டங்கள் இங்கு பெரிய மாறுதல் எதையுமே சாதிக்கவில்லை. அடிப்படையில் ஜீவனோபாய பொருளாதாரப்பண்பை பிரதிபலிக்கும் கிராமிய சமூகமாகவே இப்பிரதேச சமூகம் தேங்கிக் கிடக்கின்றது.

மூலதனம் இன்மை, உற்பத்தியில் பிரச்சினைகள், காலநிலைப் பிறழ்வுகள் போன்ற பல தடைகள் போதிய அபிவிருத்தி மட்டத்தை எட்டத் தடைகளாக அமைந்துள்ளன.

பொதுவாக இப் பிரதேசத்தில் உள்ள கிராமங்களில் மக்களின் வாழ்வு வறுமையுடையதொன்றாயும் பின்னடைவுக் குணாம்சங்களைப் பிரதிபலிப்பதாயும் உள்ளது. இப் பிரதேசத்

> **சிறந்த திட்டமிடல், புதிய முதலீடு, அடிப்படை வசதிகளின் விருத்தி ஆகியவற்றை ஏற்படுத்தி இப் பிரதேசத்தை அபிவிருத்திக்கு இட்டுச் செல்லவேண்டியது இன்றைய நிலையில் பல மடங்கு அவசியமானதொன்றாக அமைகிறது.**

நிலம், தொழிலாளர், பௌதிக அமைப்புக்கள் ஆகிய உள்ளார்ந்த வளங்கள் வன்னிப் பிரதேசத்தில நிறையவே உண்டு. எனினும் தாழ்வுற்றுச் செல்லும் கிராமிய வாழ்வுப் பண்புகளை இங்கு நேரடியாகவே அவதானிக்க முடிகின்றது. சிறந்த திட்டமிடல், புதிய முதலீடு, அடிப்படை வசதிகளின் விருத்தி ஆகியவற்றை ஏறபடுத்தி இப் பிரதேசத்தை அபிவிருத்திக்கு இட்டுச் செல்லவேண்டியது இன்றைய நிலையில் பல மடங்கு அவசியமானதொன்றாக அமைகிறது.

தில் ஓரளவு உபகரணமயப்படுத்தப்பட்ட வர்த்தகம் நோக்கிய விவசாயப் பண்ணைகளை பராமரிப்பவர்களாக சிறிதளவு தொகை விவசாயிகளே உள்ளனர்.

பெருமளவு விவசாயிகள் உணவுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடிய உற்பத்தி மட்டத்திற்கான பெரும் சவால்களை எதிர்நோக்குகின்றனர். அரசத் துறையில் வேலை செயவோரும், சிறிய வர்த்தகர்களும் சுமாரான வாழ்வுத் தாக்கத்தை பிரதிபலிக்கின்றனர். கூலித் தொழிலாளர்களும், அங்காடி வியாபாரிகளும், வேலையில்லாதோரும் குறைவான வருமான மட்டத்தையே பெற்றிருக்கின்றனர்.

> **கிராமிய மக்களின் பொருளாதாரத்திற்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். விவசாய உள்ளீடுகள், மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்ற வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கு முதன்மை கொடுத்து அதற்குரிய நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட வேண்டும்.**

இப் பிரதேசத்தின் அபிவிருத்தி மட்டங்களைக் காட்டும் சகல வழிகாட்டிகளும் பாதகமான பெறுமானங்களையே பிரதிபலிப்பனவாக அமைகின்றன. இலங்கையின் ஏனைய பிரதேசங்களை விடவும் மட்டமான வாழ்க்கைத்தாக்கத்தை இவ் விவசாய கிராமங்கள் புலப்படுத்தி நிற்கின்றன. வருமானம், உணவு, உறைவிடம், நோய்களின் தாக்கம், கல்வி நிலை, தொடர்பாடல், சுற்றுப்புறச் சூழல் என்பன யாவுமே குறைவான பெறுமானங்களை புலப்படுத்துகின்றன.

**அண்மைய நெருக்கடிகள்**

நீண்டதோர் குறைவிருத்திப் பண்பைக் கொண்ட இப்பிரதேச மக்களின் வாழ்வு இன்றைய நிலையில் மேலும் பல புதிய நெருக்கடிகளை எதிர்நோக்கி நிற்கின்றது. அடிக்கடி இடம் பெயர்ந்து வரும் மக்கள் இப்பகுதியில் தஞ்சமடைந்து வருவதால் கிராமிய உள்ளார்ந்த வளங்களுக்கு மேலாக நீர், குடியிருப்பு போன்றவற்றிற்கு அதிக தேவை ஏற்படுகின்றது. விவசாய உள்ளீடுகளுக்கு பற்றாக்குறை, போக்குவரத்து, வசதியின்மை, உணவுப் பொருட்களின் விலையேற்றம் என்பன மேலும் பின்னடைவுகளை ஏற்படுத்துகின்றன. இதனால் மேலும் புதிய பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

**நோய்களின் தாக்கம்**

இப்பிரதேச மக்கள் மலேரியா நோயுடன் நீண்டகாலமாக போராடி வருகின்றனர். அண்மைக் காலத்தில் வயிற்றோட்டம், செங்கமாரி மற்றும் தொற்றுநோய்கள் இப் பிரதேசத்தில் வேகமாகப் பரவி வருகின்றன. இதனால் இப்பிரதேச மக்களின் வாழ்வு மேலும் துன்பம் நிறைந்ததொன்றாகவே மாறி வருகின்றது.

**சூழற் பிரச்சினைகள்**

இப்பகுதிகளில் காலநிலை வரட்சி, விவசாய உற்பத்திகளில் வரட்சியை ஏற்படுத்தியுள்ளது. புதிய குடியிருப்புக்கள், அகதி முகாம்கள், விறகுத்தேவை, குடிசைகள் அமைப்பதற்கான காட்டு மரப்பயன்பாடு போன்றவை இப்பிரதேசத்தில் பாதகமான பண்பைப் பிரதிபலிக்கின்றன. நிர்மாணத் திட்டங்கள் போதிய பராமரிப்பு இன்றிப் போயுள்ளதுடன் வடிகால் அம்சங்கள் ஒழுங்குபடுத்தப்படாமை, மக்களின் அதிகரித்த நீர் பாவனை போன்றவை நீர், சூழல் மாசுபடலையும் அதிகரிக்கச் செய்கின்றன. இதனால் சுற்றுச்சூழல் நெருக்கடிகள் தோற்றம் பெற்றுள்ளன.

**அபிவிருத்தியை நோக்கிய மூன்று கட்டங்கள்**

முதலில் இப் பிரதேசத்தில் கிராமிய மக்களின் பொருளாதாரத்திற்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். விவசாய உள்ளீடுகள், மருத்துவ வசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்ற வாழ்வின் அடிப்படைத் தேவைகளுக்கு முதன்மை கொடுத்து அதற்குரிய நடவடிக்கைகளில் துரிதமாக ஈடுபட வேண்டும். சுத்தமான நீரும், நோயற்ற வாழ்வும் போக்குவரத்து வசதியும், கட்டுப்பாடற்ற பொருள்களின் விநியோகமும் முதற்கட்டமாக வழங்கப்பட வேண்டும்.

அடுத்த கட்டமாக இப்பிரதேச கிராம சூழல் நன்கு ஆராயப்பட்டு விவசாயிகளை ஒருங்கிணைத்து உற்பத்திக்குரிய ஊக்குவிப்புக்கள் வழங்கப்பட வேண்டும். நீர்ப்பாசன வசதி, கடன்வசதி போன்றன ஏற்படுத்தப்பட்டு விவசாயிகளை நவீன கலப்புமுறை பயிர்ச்செய்கைக்கு இட்டுச் செல்லக்கூடியதாக உள்ளூர், வெளியூர் சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்த வேண்டும். இது ஜீவனோபாய பொருளாதாரத்தை . கலப்பு முறை விவசாய அடிப்படைக்கு இட்டுச் செல்லும்.

மூன்றாம் கட்டம் உயர் பண்ணை மயமாக்கப்பட்ட வர்த்தகம் நோக்கிய விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கையாகும். இதற்கு நவீன போக்குவரத்து வசதிகள், நகர சேவை மையங்களின் அபிவிருத்தி, விவசாய அடிப்படை, கைத்தொழில் அபிவிருத்தி, விவசாய ஆராய்ச்சி மையங்களின் அபிவிருத்தி என்பவற்றுடன் உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளுக்குரிய உயர்ரக உற்பத்தியை வழங்கக்கூடிய விவசாயப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புதல் வேண்டும்.

மேற்படி திட்ட அடிப்படையில் வன்னிப் பிரதேச விவசாயப் பொருளாதாரம் மீட்டெடுக்கப்பட வேண்டியது மிக அவசியமாகும்.

க. சிவாகரன்
கிழக்குப் பல்கலைக்கழகம்

*நன்றி வீரகேசரி*


**வாகன சேவை**

உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை ஏற்றி இறக்கவும் வெளியூர் பிரயாணம் போன்ற தேவைகளுக்கும்



ரவி: 01 48 76 51 90
06 07 62 26 89 / 01 42 23 23 10

**Siva Thaya Tamil Printers**

தொடர்புகளுக்கு:
Mr. K. SIVA
HAUPT STR - 13
6313 MENZINGEN.
(ZUG, SWITZERLAND)
T.P: 0041/ 41/755 31 92
Fax: 0041/ 41/ 755 31 92

உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களும் இலங்கை, இந்தியா, இலண்டன் மற்றும் சிங்கப்பூரில் இருந்து தருவிக்கப்பட்ட மிக அழகான, நவீன, தரமான அழைப்பிதழ்களில் குறித்த நேரத்தில் மிக விரைவாக செய்து தரப்படும். இத்துடன் வாழ்த்து மடல்கள், சகல பிரசுரங்கள், விளம்பரங்கள், விலைப்பட்டியல்கள், புத்தகங்கள் போன்றவையும் எம்மிடம் பதிப்பிக்கலாம்.

உங்கள் திருமணம், பிறந்தநாள், பூப்புனிதநீராட்டுவிழா, மற்றும் சகலவித அழைப்பிதழ்களுக்கும் எம்மிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டால் நாம் இலவசமாக Model Cards உங்களுக்கு அனுப்பி, Fax or T.P மூலமாக விபரங்களை பெற்றுக் குறிப்பிட்ட தவணையில் உங்களுக்கு அழைப்பிதழ்களை பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைப்போம்.

அவசர திருமண அழைப்பிதழ்கள் மேலதிக கட்டணமின்றி 24 மணித்தியாலத்தில் செய்து தரப்படும்.

அழைப்பிதழ் தயாரிப்பாளர்களுக்கு!
மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட தரமான அதிநவீன அழைப்பிதழ்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# புலிகளுக்கு ஆதரவு தெரிவிக்க உரிமை இல்லை என்று யாரும் உத்தரவிட முடியாது

## -டாக்டர் ராமதாஸ்

விடுதலைப்புலிகள் அமைப்பிற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்பது குற்றமல்ல. புலி ஆதரவு என்ற புகாரைக் கூறி ஈழத் தமிழருக்கு ஆதரவு திரட்டுவதைத் தடுக்கும் வகையில் சிலர் செயல் படுகிறார்கள்.

கடந்த 02.02.97 அன்று நடைபெற்ற பேரணி தொடர்பாக, அது நடைபெறுவதற்கு முன்னர் பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் எஸ். ராமதாஸ் பத்திரிகையாளருக்கு வழங்கிய செவ்வியில் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.



சென்னையில், சீரணி அரங்கத்தில் நடத்த உள்ள ஈழத் தமிழர்பாதுகாப்பு மகாநாட்டிற்கு பொலிஸ் அனுமதி கிடைத்து விட்டது. இந்த மகாநாட்டில் ஜோர்ஜ் பெர்னான்டஸ், சிவசேனையின் மக்களவை உறுப்பினர் மதுக்கர் சர்பதார் உள்ளிட்டோர் கலந்து கொள்ள ஒப்புதல் தெரிவித்துள்ளனர்.

மகாநாட்டில் பேச வேண்டும் என்று கோரி தி.மு.க தலைவர் கருணாநிதி, த.மா.கா தலைவர் மூப்பனார் உட்பட 92 தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தோம்.

இலங்கைப் பிரச்சினையில் இந்திய அரசின் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும், ஈழப்பிரச்சினையில் இந்தியா தலையிட வேண்டும் என்பதே மகாநாட்டின் நோக்கம்.

ஈழத்தில் சண்டையை நிறுத்த வேண்டும், யாழ்ப்பாணத்தில் தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களை அனுமதிக்க வற்புறுத்த வேண்டும் என்ற கருத்தை சந்திரிகா அரசில் உள்ள தொண்டமான் கூட திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஈழத்தில் இந்துக்கள் தாக்கப் படுவதாகக் கூறி அவர்களுக்கு ஆதரவாக இந்துமதவாத அமைப்புக்களின் ஆதரவை நாங்கள் திரட்டுவதாகக் கூறுவது தவறு.

பாரதிய ஜனதாவின் தலைவர்களில் ஒருவரான வாஜ்பாய்க்கு அழைப்பு அனுப்பினோம். அவர்களிடமிருந்து பதில் இல்லை.

ராஜீவ்காந்தி கொலைச் சதி குறித்து ஜெயின் கமிஷன் விசாரணை நடத்தி வருகிறது. ராஜீவ் கொலை செய்ததைக் காரணம் காட்டி ஈழத்தில் ஏழு இலட்சம் தமிழர்கள் காடுகளில் அடிப்படை வசதிகள் எதுவுமின்றித் தவிப்பது பற்றிக் கவலைப்படாமல் இருந்து விட முடியாது.

புலிகள் அமைப்புக்கு ஆதரவு திரட்டும் நோக்கத்தில்தான் நாங்கள் மகாநாடுகளை நடத்துகிறோம் என்று கூறுவது சரியல்ல. புலிகளுக்கு தமிழ்நாட்டில் ஆதரவு திரட்டும் தேவையில்லை. அதற்கு அவசியமும் இல்லை. மேலும் மகாநாட்டில் பேசுபவர்கள் புலிகளுக்கு ஆதரவான கருத்தைத் தெரிவிக்கக் கூடாது என்று அவர்களிடம் கேட்டுக் கொள்ள மாட்டோம்.

எங்களைப் பொறுத்தவரை தனி ஈழம்தான் ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என்று ஆரம்பம் முதல் கூறி வந்துள்ளோம். எங்கள் மகாநாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தவர்கள் மீது மாநில அரசு நடவடிக்கை எடுத்தது சரி என்று நான் கூறவில்லை. எங்கள் கட்சித் தலைவர் தீரன் பேரவையில் அவ்வாறு கூறினாரா என்ற விபரம் எனக்குத் தெரியாது.

புலிகள் அமைப்பு மீதான தடையை நீக்கவேண்டும் என்று நாங்கள் தீர்மானம் நிறைவேற்றினோம். இதனால் நாங்கள் புலிகளின் ஆதரவாளர்கள் என்று அர்த்தம் கொள்ளக்கூடாது. நாங்கள் புலிகளுக்கு தார்மீக ஆதரவைத்தான் தெரிவிக்கிறோம்.

புலிகளுக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிக்கக் கூட இங்கு உரிமை இல்லை என்று யாரும் உத்தரவிட முடியாது. புலிகளுக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டில் இருந்து கொண்டு காரியங்கள் ஆற்றுவது, உதவுவது நேரடியாகத் தொடர்பு வைத்திருப்பது ஆகியவற்றைத் தான் குற்றம் என்று கூறமுடியும்.

ஈழத்தமிழர் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்றும் அதில் தலையிட முடியாது என்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் குஜ்ரால் கூறியதைக் கருணாநிதி ஆமோதித்துள்ளார். ஆனால் முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் சமீபத்தில் ஜெயின் கமிஷன் முன்பு சாட்சியமளித்த போது ஈழத்தமிழர் பிரச்சினையால் தமிழ்நாட்டில் கொந்தளிப்பு ஏற்படுவது இயல்பே என்று கூறியுள்ளார். ராஜீவ் கொலைக்குப் பின்னர் ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் பேசாமல் இருந்த காங்கிரஸ் கட்சி கூட தன் நிலையை மாற்றிக் கொண்டு விட்டது. இவ்வாறு டாக்டர் ராமதாஸ் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

## ஈழத் தமிழர் பாதுகாப்பு மகாநாட்டிலிருந்து...

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கடந்த 01.02.97 சனிக்கிழமை அன்று சென்னையில் பாட்டாளி மக்கள் கட்சியால் ஒழுங்கு செய்யப்பட்டு நடத்தப்பட்ட ஈழத்தமிழர் பாதுகாப்பு பேரணியிலும், பாதுகாப்பு மகாநாட்டிலும் பல இலட்சம் மக்கள் கலந்துகொண்டனர். அம் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியவர்களின் உரைகளிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம்.

**டாக்டர் எஸ். ராமதாஸ்**
**(பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர்)**

ஈழத்தமிழ் மக்களின் நலனுக்காக எனது கட்சியும், நானும் எந்த விளைவுகளையும் சந்திக்கத் தயாராக இருக்கின்றோம். தி.மு.க. அமுல் நடத்தப் போவதாகக் கூறும் தேசிய பாதுகாப்பு தடைச் சட்டத்தின் கீழ் தண்டனையை அனுபவிக்கவும் நாம் தயாராகவே உள்ளோம். அவர்கள் சட்டத்தை அமுல்படுத்தினால் எமது ஈழத் தமிழ் ஆதரவு நடவடிக்கையை நாம் நிறுத்தப் போவதில்லை. மகாநாட்டுச் செலவுக்காக புலிகள் பணம் தந்தார்கள் என்ற குற்றச் சாட்டை நான் வன்மையாக மறுக்கிறேன். இக் குற்றச்சாட்டை முடிந்தால் நிரூபிக்குமாறும் சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மே மாதம் நடந்த தேர்தலிலும் ஜெயலலிதா எமக்குப் [illegible]னார்கள். ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்கள் நலன்குறித்து எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த எங்களுக்கு உரிமை இல்லையா? உலகத்தில் உள்ள 8 கோடி தமிழர்களும் கருணாநிதியிடம் நிறைய எதிர்பார்த்தார்கள் ஆனால் அவர் மத்திய அரசுடன் இணைந்துகொண்டு தமிழர்கள் கொல்லப் படுவதற்கும் துணை போகின்றாரா என்ற சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தமிழ் மாநிலக் காங்கிரசைப் பொறுத்தவரை தி.மு.க வின் தோளில் இருந்து அது இறக்கப்பட்டுவிட்டால் அது காணாமல் போய்விடும்.

**தீரன் (பாட்டாளி மக்கள் கட்சி தலைவர்)**

பிரபாகரன் தான் தமிழர்களுடைய தலைவர் என பல்வேறு நாட்டிலும உள்ள தமிழர்கள் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். தமிழர்களுடைய உரிமைகள் மறுக்கப்பட்டதாலேயே விடுதலைப் புலிகள் ஆயுதத்தை ஏந்தினார்கள். விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குமாறு தி.மு.க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். அதில் எவ்வித தவறும் கிடையாது. இனப் பிரச்சினையில் மத்திய அரசு தற்போது கையைக் கழுவியுள்ளது. ஏழு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக்கப்பட்டு பொருளாதாரத் தடையும் விதிக்கப் பட்டிருக்கிறது. ஈழத் தமிழருக்காக எவ்வித தியாகத்தையும் செய்ய நாம் தயாராகவே உள்ளோம். எவ்வித அச்சுறுத்தலையும் எதிர்கொள்ளவும் எமது நிறுவனம் தயாராகவே உள்ளது.

**ஜோர்ஜ் பெர்னாண்டஸ்**
**(சமாஜக் கட்சி)**

இலங்கை இனப் பிரச்சினையில் தீர்வு காண்பதில் மற்றைய நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் ஒத்துழைக்க வேண்டும். அத்துடன் இந்தி அரசு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுக்கள் நடத்த வேண்டும். இன்று பிராந்திய அச்சுறுத்தலை இந்தியா எதிர்கொண்டுள்ளது. இலங்கை இராணுவத்திற்கு அமெரிக்கா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பயிற்சி கொடுக்கின்றன. இது இந்தியாவின் இறைமையை பாதிக்காதா?

ஈழத்தமிழர் பிரச்சினையில் இரண்டு போலியான கருத்துகள் உலவுகின்றன. இனப்பிரச்சினை தீர்வுக்கு விடுதலைப் புலிகள் தடையாக இருக்கிறார்கள் என்பதும், ராஜீவ் காந்தியின் மரணமும். இது ஒரு சாதாரண நிகழ்வு. ஒரு தனிமனித மரணத்திற்காக ஒரு கொள்கையை மாற்றி ஒரு தேசிய இனத்தின் நலனை பாதிக்கும் வகையில் நடந்துகொள்ளலாமா?

**கே.எம். வீரபத்திரன்**
**(தென்னாபிரிக்க தமிழர் அமைப்பு)**

விடுதலைப் புலிகளே தமிழ் மக்களுடைய பாதுகாவலர்கள். எனக்கு ஒரு விடயம் இந்தியா விடயத்தில் ஆச்சரியத்தைத் தருகிறது. தென்னாபிரிக்காவின் இன அடக்குமுறைக்கு எதிராக அந்த அரசுக்கு உலக நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் பொருளாதார தடையை எதிர்த்தது. ஆனால் அயலில் உள்ள சிறீலங்கா அரசால் தமிழ் மக்கள் கொடூரமாக கொலைசெய்யப்பட்டு ஒரு இன அழிப்பு நடத்துகொண்டிருக்கும் போது இந்தியா அமைதியாக இருக்கிறது.

**அஜித்சிங் பான் (முன்னாள் ஹரியானா, பஞ்சாப் உச்ச நீதிமன்ற நீதிபதியும், மனித உரிமை அமைப்பின் உறுப்பினரும்)**

சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு பொருளாதார, அரசியல், சமூக அடிப்படை நீதிகளை மறுத்ததாலேயே விடுதலைப் புலிகள் ஆயுதம் தூக்க நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். ஒரு இனத்தினுடைய எழுச்சியை எந்த சக்தியாலும் அடக்கிவிட முடியாது. தமிழ் மக்கள் மீதான சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

**மடேன் மைக்கல் (தமிழீழ ஒருங்கிணைப்புக் குழு - சுவிஸ்)**

அகதிகளாகி தமிழ் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறுவது சிறீலங்காவின் உள்நாட்டுப் பிரச்சினை அல்ல. அது சர்வ தேசப் பிரச்சினையாகும். இனப் பிரச்சினைக்கு பிரிந்த தேசமே தீர்வாக அமைய முடியும். தமிழர் போராட்டம் நீதிக்கும், சமத்துவத்துக்குமான போராட்டமாகும். அந்த மக்களுடைய அடிப்படை உரிமைகள் மறுக்கப் பட்டுள்ளதால் அது சர்வ தேச பரிமாணத்தை எட்டியுள்ளது.


### வாகன சேவை



உங்கள் பொருட்கள், வீட்டுத் தளபாடங்கள் போன்றவற்றை
ஏற்றி இறக்கவும்
வெளியூர் பிரயாணம் போன்ற
தேவைகளுக்கும்
ரவி / தனபால்: 01 42 43 70 63



### அறிவித்தல்

முதன் முறையாக பாசல் இளைஞர்வட்டம் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 5 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தமிழ் இளைஞர் விளையாட்டுக் கழகம் (YOUNGBOYS), வின் போய்ஸ் விளையாட்டுக்கழகம் (WIND BOYS) றெட்புல் (REDBULL) விளையாட்டுக்கழக ஆதரவில் நடாத்தப்பட இருக்கிறது.

நடைபெறும் திகதி 02.03.97 ஞாயிற்றுக்கிழமை

இதில் பங்குபற்ற இருக்கும் கழகங்கள் கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
T.P.: 061. 3617765
முடிவுத் திகதி: 10.02.97 க்கு முன்னதாக அறியத்தரவும்.

# பிரியங்கா திருமணத்திற்கு எதிரான வழக்கு தள்ளுபடி

## பொய் வழக்குப் போட்டவருக்கு நீதிபதி தண்டனை விதித்தார்

பிரியங்கா திருமணத்தை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. பிரியங்கா மீது பொய் வழக்கு தொடுத்த ராமகிருஷ்ண கவுடுவுக்கு நீதிபதி தண்டனை விதித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் மகள் பிரியங்கா அவரது காதலர் ராபர்ட் வதேரா இடையிலான திருமணம் பெப்ரவரி மாதம் 5-ந் தேதி நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த அறிவிப்பு ஏற்படுத்திய பரபரப்பை, அடுத்து சிலநாட்களில் ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் வெளியிட்ட தகவல் பின்னுக்குத் தள்ளியது.

### திருமணத்துக்குத் தடை

ஆந்திர மாநிலம் குண்டூர் அருகே உள்ள ரேபல்லி பகுதியைச் சேர்ந்த ராமகிருஷ்ண கவுடு என்ற வாலிபர், பிரியங்கா-ராபர்ட் திருமணத்துக்கு தடைவிதிக்க வேண்டும் என்று டெல்லி உயர்நீதிமன்றத்தில் கடந்த 13-ந் தேதி வழக்கு தொடுத்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில் கூறப்பட்டு இருந்ததாவது:

எனக்கும், பிரியங்காவுக்கும் 1991-ம் வருடம் நவம்பர் 30-ந் தேதி டெல்லியில் திருமணம் நடந்தது. அதன் பிறகு இருவரும் குண்டூர், ரேபல்லி பகுதிகளில் குடும்பம் நடத்தினோம்.

### ஆதாரங்கள்

எனது திருமணத்துக்கு ஆதாரமாக, எங்கள் குடும்ப அட்டை (ரேஷன்கார்டு) வாக்காளர் பட்டியல் போன்ற ஆவணங்களும் உள்ளன. பிரியங்கா எனது மனைவி என்பதால் தற்போது நடைபெற உள்ள ராபர்ட் பிரியங்கா திருமணத்துக்கு தடைவிதிக்க வேண்டும்.




இவ்வாறு அந்த மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

மனுவை ஏற்றுக்கொண்ட நீதிபதி விபின்குமார் குப்தா, விசாரணையை 16-ந் தேதிக்கு தள்ளிவைத்தார். இதற்கிடையே, தன் மீது போடப்பட்ட வழக்கு பொய் என்றும், இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் பிரியங்கா பதில் மனு தாக்கல் செய்தார்.

இரு தரப்பையும் விசாரித்த நீதிபதி பிரியங்காவின் மனுவை ஏற்கவில்லை. ராமகிருஷ்ண கவுடு, பிரியங்காவுடன் வாழ்ந்ததற்கு ஆதாரம் என்று கூறப்படும் சில ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். அந்த ஆவணங்கள் உண்மைதானா? போலி என்றால் அவை எப்படி வழங்கப்பட்டது என்ற உண்மைகள் தெரிய வேண்டும். எனவே, வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறும் என்று நீதிபதி விபின் குமார் உத்தரவிட்டார். பிரியங்கா மீதான குற்றச்சாட்டு பொய் என்றால் ராமகிருஷ்ண கவுடு மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதிபதி எச்சரித்தார்.

### பெண்களை ஏமாற்றியவர்

இதற்கிடையே ராமகிருஷ்ண கவுடுவின் பின்னணி குறித்த தகவல்கள் ஒவ்வொன்றாக வெளியாகின. பெண்களை ஏமாற்றியதற்காக அவர் இரண்டு முறை சிறைக்குச் சென்றிருக்கிறார். மாவட்ட கலெக்டர், பிரபல நடிகைகள் ஸ்ரீதேவி, ஜெயப்பிரதா உள்பட பலருக்கும் தனக்கும் திரும... போது ... வழக்கு தொடர்ந்திருந்தார் என்றும் தெரிய வந்தது.



குண்டூரில் பெண்களிடம் தகாத முறையில் நடந்தது தொடர்பான வழக்கில் ராமகிருஷ்ண கவுடு தற்போது நீதிமன்ற காவலில் இருந்து வருகிறார். அவரை போலீசார் டெல்லி கோர்ட்டில் ஆஜர் படுத்தினார்கள்.

தனது முதல் மனு நிராகரிக்கப்பட்டதை அடுத்து, பிரியங்கா கைப்பட எழுதிய மற்றொரு புதிய மனுவை உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார். பிரியங்கா சார்பில் அவரது வக்கீல்கள் பராசரன், கே.சி. மித்தல் இருவரும் நீதிபதியிடம் மனுவை தாக்குதல் செய்தனர்.

அந்த மனுவின் விபரம் வருமாறு:

எனக்கும் அந்த வாலிபருக்கும் (ராமகிருஷ்ண கவுடு) திருமணம் நடந்ததாகவும், அவருடன் குடும்பம் நடத்தியதாகவும் கூறப்படுவது அபாண்டமானது. இது எனது பெயருக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கத்தில், போலி ஆவணங்களைக் கொண்டு சுமத்தப்பட்டுள்ள அருவருப்பான குற்றச்சாட்டு.

ராபார்ட் வதேராவை திருமணம் செய்ய சட்டபூர்வமான உரிமை எனக்கு உள்ளது. மனுதாரர் எனக்கு திருமண அன்பளிப்பு வழங்கியதாகவும் அவராகவே சில ஆவணங்களை தயாரித்துள்ளார். நடைபெறாத ஒரு திருமணத்தை நடந்ததாகக் கூறும் இந்த ஆவணங்களை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்.

இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டு இருந்தது.

பிரியங்கா சார்பில் வாதாடிய வக்கீல்களும் இதே கருத்தை வலியுறுத்தினார்கள்.

### நீதிபதி தீர்ப்பு

மனுவை விசாரித்த நீதிபதி விபின்குமார் குப்தா, ராமகிருஷ்ண கவுடு தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தார்.

# புதுக்கோட்டை தேர்தல் ஜெயலலிதா புதிய வழக்கு

## 'என் வீட்டில் கைப்பற்றிய நகைகளை வீடியோவில் காட்டக்கூடாது'

புதுக்கோட்டை இடைத் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் போயஸ் தோட்ட நகைக் குவியலை டி.வி.யில் ஒளிபரப்பக் கூடாது என்று கோர்ட்டில் ஜெயலலிதா மீண்டும் வழக்கு தொடர்ந்துள்ளார்.

தன் வீட்டில் எடுக்கப்பட்ட புகைப்படங்களையோ வீடியோ படங்களையோ இனிமேல் தொலைக்காட்சிகள், பத்திரிகைகள் என எதிலும் வெளியிடக்கூடாது என்றும் அவற்றை லஞ்ச ஒழிப்பு போலீசார் திரும்பப் பெற வேண்டும் என்று தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா முதன்மை செசன்ஸ் கோர்ட்டில் வழக்குத் தொடுத்துள்ளார்.

### வீட்டில் நகைக்குவியல்

இது தொடர்பாக, ஜெயலலிதா தாக்கல் செய்த மனுவில் குறிப்பிட்டுள்ளதாவது:

கடந்த மாதம் 7-ந் தேதி லஞ்ச ஒழிப்பு கண்காணிப்பு போலீசார் என்னைக் கைது செய்தார்கள். அதன் பின் என் வீட்டைச் சோதனையிட்டார்கள். என் வீட்டில் உள்ள குளியலறை, படுக்கையறை ஆகியவற்றையும் என் நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் போன்றவற்றையும் புகைப்படங்களாகவும் வீடியோ படங்களாகவும் எடுத்து அதைப் பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் ஆகியவற்றுக்குக் கொடுத்துள்ளார்கள். நான் உடல் முழுக்க நகை அணிந்த புகைப்படத்தைப் பத்திரிகைக்குக் கொடுத்து வெளியிடச் செய்துள்ளனர்.

ஏற்கனவே, இது தொடர்பாக நான் தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்து இந்தக் கோர்ட்டு, இனிமேல் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பொருட்களின் படங்களை வெளியிட கடந்த மாதம் 19-ந் தேதி தடை விதித்திருக்கிறது. ஆனாலும் அதை மீறி அதற்குப் பின்னரும்கூட அந்தப் படங்கள் வெளியாகி வருகின்றன.

புதுக்கோட்டைத் தொகுதியில் இடைத் தேர்தல் நடைபெற உள்ள நேரம் ஆதலால், இப்போது அந்தப் படங்களை பயன்படுத்துவார்கள் என்று நினைக்கின்றேன். இது எனக்கு மிகுந்த மனச்சங்கடத்தை ஏற்படுத்தியுள்ளது. என் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட நகைகள் திரும்பக் கிடைத்தபின்



அவற்றை நான் அணியமாட்டேன். அந்த நகைகளை விற்று தருமகாரியங்களுக்குச் செலவிட முடிவு செய்துவிட்டேன்.

இந்த மன நிலையில் நான் இருப்பதாலும் புதுக்கோட்டைத் தேர்தல் நேரம் என்பதாலும் இந்தப் படங்களை வெளியிடத் தடைவிதித்தும், குமுதம், இந்தியா டுடே, சன் டி.வி. ஆகியவற்றிலிருந்து வெளியிடப்பட்ட படங்களைத் திரும்பப் பெறும் வகையிலும் கோர்ட்டு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு ஜெயலலிதா தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு முதன்மை செசன்ஸ் நீதிபதி ஏ.ராமமூர்த்தி முன்னிலையில் விசாரணைக்கு வரும் எனத் தெரிகிறது.

# விருப்பத்துக்கு மாறாக திருமணம் - சுதாகர்

விருப்பத்துக்கு மாறாகத்தான் தனக்குத் திருமணம் நடந்தது என்று லஞ்ச ஒழிப்புத் துறையினரிடம் வி.என்.சுதாகரன் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. சிவாஜியின் பேத்தி சத்தியலட்சுமியுடன் நடந்த திருமணத்துக்கான செலவு குறித்தும், சுதாகரன் சேர்த்துள்ளதாகக் கூறப்படும் 23 கோடி ரூபா சொத்துக் குறித்தும் அவரிடம் இரண்டாவது நாளாக சென்ற 29.01.1997 அன்று விசாரணை நடாத்தப்பட்டது.




சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள சுதாகரனிடம் லஞ்ச ஒழிப்புத்துறை கூடுதல் கண்காணிப்பாளர் என். நல்லம்ம நாயுடு, இன்ஸ்பெக்டர் கிருஷ்ணராவ், எபனேசர் ஆகியோர் மூன்று மணி நேரம் விசாரணை நடத்தினர். அவரிடம் நூறு கேள்விகள் கேட்கப்பட்டதாகத் தெரிய வருகிறது. தனக்கு நடந்த திருமணத்தில் விருப்பமில்லையென்றும் திருமண நிச்சயதார்த்தம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும் சுதாகரன் கூறியுள்ளார். நிச்சயதார்த்தம் குறித்து தனக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும் மறுநாள் பத்திரிகைகளைப் பார்த்தே தெரிந்துகொண்டதாகவும், அது குறித்து தன் பெற்றோர்களிடம் கூட சசிகலாவும் ஜெயலலிதாவும் ஆலோசிக்கவில்லை என்றும் சுதாகரன் கூறியுள்ளார்.

சொத்துப் பற்றிய கேள்விகளுக்கு தனக்கு பூர்வீகச் சொத்து எதுவும் இல்லை என்றும் சில கேள்விகளுக்கு மழுப்பலான பதில்களையும் கூறியுள்ளதாக லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.


# வான் அலைகளில் விரைவில் தவழ வருகிறது

**இலங்கைச் செய்தி - Astra Satellite - மே 97**

லண்டன் BBC, இலங்கை வானொலி, அகில இந்திய வானொலி என்பவற்றில் பணிபுரிந்த நிருபர்களும் அறிவிப்பாளர்களும் சேர்ந்து உருவாக்கும்



# IBC



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## International Broadcasting Corporation

## தமிழ் வானொலிச் சேவை

மே 97 இல் Astra Satellite மூலமாக ஐரோப்பா முழுவதும் ஒலிக்கப் போகிறது

உங்களிடம் Astra Satellite dish இருந்தால் அது ஒன்று மட்டுமே போதும்!

- அன்புடன்
Tamil Media Group

# ஈழமுரசில் இராசி பலன் பகுதி ஆரம்பித்தால் என்ன ?

சி. அமலதாஸ்
பாரிஸ் 20, பிரான்ஸ்

☞ கவிதை எழுதுவதற்கு என்ன வேண்டும்?

✎ ஏடும் எழுத்தாணியும்!..

க. சுசீலா
பாரிஸ் 20, பிரான்ஸ்

☞ தமிழர்கள் வானொலித் துறையில் கால் பதித்து ஒரு சாதனை படைப்பார்களா?

✎ 'புலிகளின் குரல்' வானொலி பல ஆண்டுகளுக்கு முன் தொடங்கி இன்றுவரை வெற்றிகரமாக செயற்பட்டு சாதனை படைத்துவருகிறதே!

ம. பிரதீபன்
பாசல், சுவிஸ்

☞ தெரிந்தும் தெரியாமலும் இருப்பது என்னவோ சுவாமி?

✎ உம்மைப்போல் அறிந்தும் அறியாமலிருப்பதுதான் பக்தா!

சுபரமேஸ்வரன்
கிளிச்சி, பிரான்ஸ

☞ குஜ்ரால், இலங்கை விடயத்தில் இந்தியா தலையிடாது என்று கூறியது உண்மையா?

✎ கூறியது என்னவோ உண்மைதான், ஆனால் இந்திய அரசியல் அகராதியில், தலையிடாது என்றால் இரகசியமாகத் தலையிடுவது என்றும் அர்த்தமிருக்கிறது.

சி.முரளீதரன்
சூரிச், சுவிஸ்

☞ ஈழமுரசில் இராசிபலன் ஆரம்பித்தால் என்ன?

✎ இந்தவாரம் பத்திரிகைக்கு பலன் சரியில்லை விற்காது என்று சோதிடர் சொல்ல, ஈழமுரசு நிர்வாகி அதை நம்பி பத்திரிகை எண்ணிக்கையைக் குறைத்து அச்சடித்துவிட்டால் உங்களுக்கல்லவா பத்திரிகை கிடைக்காமல் போய்விடும்.

எட்வேட் மரயசீலி
பேர்லின்

☞ பேரிச்சை மரங்களை நம் நாட்டில் பயிர் செய்யமுடியாதா?

✎ 1960_ம் ஆண்டிலேயே பருத்தித்துறை நகரத்தில் குல்லா வாத்தியார் பயிர் செய்து பார்த்தார். மரம் வளர்ந்து காய்க்கிற காலத்தில் மழை வந்து காய், பிஞ்சு, பூ எல்லாவற்றையும் உருத்திக்கொண்டே இருந்தது. பேரீச்சம் பழம் கிடைக்கவேயில்லை.

கி.ஶ்ரீதரன்
எசன், ஜேர்மனி

☞ ஐயா நம் பண்பாடு எங்கே வெளிப்படுகிறது?

✎ மணமகன், மணமகள் தேவை விளம்பரங்களில் 'இன்ன குலத்தில் பிறந்த இன்ன மதந்தைச் சேர்ந்த; இன்ன நிறப்பெண்ணுக்கு / பையனுக்கு இன்ன குலம் மதம் நிறத்தைச் சேர்ந்த இன்னார் தேவை இதைத்தான் தமிழ் பண்பாடு என்று நம்முடைய 'பெரியவர்கள்' கள் சொல்லியிருக்கிறார்கள்!?

## சித்திரகுப்தனார் பதில்கள்

அ.மயூர[illegible]
இலண்[illegible]

☞ கடந்த வாரம் புத்தர் பூலோகத்திலிருந்து பூமிக்கு வந்தால் என்ற கேள்விக்கு பதில் சொல்லியிருக்கிறீர்களே, கேள்வி தவறல்லவா, புத்தர் தேவலோகத்திலிருந்தல்லவா பூமிக்கு வந்தார் என்று கேள்வி இருந்திருக்க வேண்டும்?

✎ நீர்தான் கேள்வியை தவறாகக் கேட்கிறீர். புத்தரை யாரையா தேவலோகத்திற்குப் போக விட்டார்கள். பூலோகத்திலேயே அவருடைய பல்லு, தலைமுடி முதற்கொண்டு புத்த தர்மத்தையும் சேர்த்து அடக்கம் செய்துவிட்டார்கள். அதுசரி சிறீலங்கா பூலோகத்தில் இல்லையா என்று திருப்பிக் கேட்க வேண்டாம். அது எங்கே இருக்கிறது என்று நீரே முடிவு செய்து கொள்ளும்.

இராவணன்
பாரிஸ் 10, பிரான்ஸ்

☞ கடன் வாங்கியவர்கள், திருப்பிக் கேட்டால் ஏசுகின்றார்களே நான் என்ன செய்யலாம்?

✎ நீர் இரகசியமாக வேறு யாரைக் கொண்டாவது அவர்களிடம் கடன் வாங்கி விட்டு, பதிலுக்கு ஏசுவித்து விடும்.

சி.கமலாகரன்
அம்சர்டாம், நெதர்லாந்து

☞ நண்டாருக்கு என்னாச்சு குப்தனாரே?

✎ சமீபத்திய ஐரோப்பிய கடுங்குளிருக்குப் பயந்து புற்றுக்குள் ஒழித்து விட்டாரோ என்னவோ!

அ.மலர்விழி
சட்காட், ஜேர்மனி

☞ மட்டக்களப்பு மாந்திரீகம், மலையாள மாந்திரீகம், இரண்டுக்குமுள்ள ஒற்றுமை என்ன?

✎ அது இரகசியமாயிட்டுள்ள விஷயமாக்கும். அதை ஞான இவ்விட பறைஞ்ஞான் பற்றில்லா (சொல்ல முடியாது)!

ச.முருகதாஸ்
பாரிஸ் 18, பிரான்ஸ்

☞ கலைஞர் கருணாநிதி உண்மையிலேயே ஈழத் தமிழர்களுக்கு ஆதரவானவரா? சில நேரம் அவர் எமக்கு எதிரான அறிக்கைகள் விடுகிறாரே?

✎ உரிமைக்குக் குரல் கொடுப்பார்; (டெல்லி) உறவுக்கும் கைகொடுப்பார் கிளியே! அவர் வாய்ச் சொல்லில் வீரரடி.
(பாவம் அவர் என்ன செய்வார் வயசான காலத்தில் தடாச் சட்டத்தில் உள்ளே இருக்க முடியாதே)

ப. சிவபாலன்
பேர்ண், சுவிஸ்

☞ உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

✎ பாம்பைவிட ஆபத்தானவர்கள்.

கு.ரவீந்திரன்
நாப்போலி, இத்தாலி

☞ மார்க்ஸ், லெனின், ஸ்டாலின், மாவோ போன்ற கம்யூனிசத் தலைவர்களின் படங்கள் பிரான்சில் கரண்டல் லொட்டோ விளம்பரத்துக்கு பயன்படுத்துவதைப் பற்றி என்ன நினைக்கிறீர்?

✎ மக்கள் லொட்டோ டிக்கட்டை 'சுரண்டும்' போதாவது 'சுரண்டல் ஒழிக' என்ற அவர்களது கொள்கையை நினைக்கட்டும் என்ற நல்லெண்ணமாக இருக்கலாம்.

கா.சிவப்பிரகாசம்
குறொய்டன், பிரித்தானியா

☞ ஆங்கிலேயர்கள் இலங்கைக்கு வராதிருந்திருந்தால்...?

✎ தமிழீழம் தனி நாடாகவே இருந்திருக்கும்!

தீ.காந்தன்
அம்ஸ்ரடாம், நெதர்லாந்து

☞ கொழும்புவாழ் அப்பாவித் தமிழர்களின் நிலையை எதற்கு ஒப்பிடலாம்?

✎ ஹிட்லரின் ஆட்சியின் தொடக்க காலத்தில் பேர்லின் நகரத்தில் வாழ்ந்த யூதர்களின் நிலைக்கு.

வே.குணசிங்கம்
மொன்றோய், பிரான்ஸ்

☞ தமிழீழம் கிடைத்து புகலிடத்தமிழர்கள் நாடு திரும்பினால் அவர்கள் இங்கிருந்து எடுத்துச் செல்பவற்றில் எது முக்கியமானதாக இருக்கும்?

✎ 'சாதி'!

வி.ஆசை
லியோன், பிரான்ஸ்

☞ கொழும்புத் தமிழ் குழுக்கள் திருந்துவார்களா?

✎ நாய்வால் நிமிராது.

கவிநாசித்தம்பி
சேலம், இந்தியா

☞ பட்டப்படிப்பு - அனுபவப் படிப்பு ஒப்பிடுக?

✎ பட்டப்படிப்பு சிலருக்கு செருக்கைத்தரும். அனுபவப் படிப்பு பணிவைத்தரும். இரண்டும் இருப்பது உயர்வைத் தரும்.

A.S.C.E.S

அரும்பு, நடைமுறை பிரெஞ்சு நூல்களை வெளியிட்ட A.S.C.E.S தனது 7வது ஆண்டு விழாவையொட்டி சிறுகதை, கவிதைப் போட்டி நடாத்துகின்றது. சிறந்த முதல் இரு படைப்புகளுக்கும் தங்கப் பதக்கங்கள் வழங்கப்படும். யாவரும் பங்கு பற்றலாம். படைப்புகள் பிரசுரமாகாதவையாக இருக்கவேண்டும். பிரதிகளை 28.02.1997-க்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி
A.S.C.E.S
62, Rue Poteau, 75018 Paris.

சாந்தினி உணவகம்



அறுசுவை உணவுவகைகளை உடனுக்குடன் தயாரித்து வழங்குபவர்கள்!! திருமணம், பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கு தேவையான சாப்பாட்டு வகைகளுக்கும் தொடர்பு கொள்ளுங்கள்!

* மரக்கறிச் சாப்பாடு (5 மரக்கறி, பப்படம், [illegible], பாயாசம்) (50 சாப்பாடுகளுக்கு மேல்) 16F
* பிரியாணி (ஆடு, மாடு, கோழி) 19F
* பிறைட் றைஸ் 20F

விரைவில், வாடிக்கையாளர்கள் வசதி கருதி மிகக் குறைந்த விலையில் உணவு வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்

RESTAURANT SHANTHINI
10, Rue Labat, 75018 PARIS.
M°: Marcadet Poissonniers - Tel: 01 42 58 71 19

# புகலிட வாழ்வின் முரண்பாடுகள்

## எதிர்காலத்தை திட்டமிடத் தடுக்கும் நிகழ்கால நெருக்கடிகள்

எனக்குத் தெரிந்த ஒருவர் இலங்கையில் தலவாக்கெலையிலிருந்த தேயிலை அபிவிருத்திச் சபையில் கணக்காளராக இருந்தவர். 1977 இனக்கலவரத்தில் மோசமான தாக்குதலுக்கும், பலத்த உடமை இழப்புக்களுக்குமுள்ளாகி அதனால் ஏற்பட்ட விரத்தியில் வேலையை விட்டு விட்டு வெளிநாட்டுக்கு வருவதற்காக கொழும்புக்கு குடும்பத்துடன் வந்தவர்.

1977_ம் ஆண்டு டிசம்பர் மாதம் அவரது வெளிநாட்டுப் பயணத்துக்கான முயற்சி ஆரம்பித்தது. கொழும்பில் அப்போதெல்லாம் இப்போதுள்ளது போல் ஐரோப்பிய, கனேடியப் பயணத்துக்கான முகவர்கள் அதிகம் இல்லை. அது மத்திய கிழக்கு பயணம் கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்த காலகட்டம். கொழும்பு நகரின் மூலை முடுக்கெல்லாம் குவைத், துபாய், சவுதி அரேபியா என்று மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆட்களை அனுப்ப பிரயாண முகவர்கள் போட்டி போட்டுக் கொண்டு அலுவலகங்களைத் திறந்து வைத்திருந்த காலம்.

நம்முடைய கணக்காளருக்கு மத்திய கிழக்கிற்குச் செல்ல விருப்பமில்லை. இங்கிலாந்து, கனடா பயணம்தான் அவருடைய குறியாக இருந்தது.

தன்னுடைய தகுதிச் சான்றிதழ்களுடன் கொழும்பிலிருந்த மேற்படி நாட்டுத் தூதரகங்களுக்கு சென்று "விசா" கேட்டு அவர்களால் கைவிரிக்கப்பட்ட நிலையில் அவருக்குத் தெரிந்த சிங்கள நண்பர்கள் ஒருவரின் உதவியால், கொழும்பிலிருந்த பிரபல சிங்கள பிரயாண முகவர் ஒருவரின் தொடர்பு கிடைத்தது.

அவர் இவரை குடும்பத்தோடு (மனைவி மூன்று பிள்ளைகள்) லண்டனுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி ஒரு லட்சம்ரூபா பெற்றுக் கொண்டார். அந்தக் காலத்தில் பெரிய தொகை.

இலண்டனுக்குப் போனால் இரண்டு மாதத்தில் உழைத்துப் போடலாம் என்ற எதிர்பார்ப்போடு கணக்காளர் குடும்பத்தினர் 1978 ஜனவரி முதல் வாரத்தில் கட்டு நாயக்கா விமான நிலையத்திலிருந்து புறப்பட்டனர். விமானம் புறப்பட்ட ஒருசில மணி நேரத்திலேயே பிரயாணமுகவர் சொல்லியபடி கடவுச் சீட்டுக்களை கழிவறையில் கிழித்துப் போட்டுவிட்டனர்.

விமானம் அம்ஸ்ரடாம் விமான நிலையத்தில் இறங்கியபோதுதான், கொழும்பு முகவர் இலண்டனுக்கு என்று சொல்லி ஹொலண்டுக்கு தங்களை அனுப்பி வைத்துவிட்ட விசயம் அவர்களுக்குத் தெரிய வந்தது. மூன்று நான்கு மணி நேரப் பொலீஸ் விசாரணைக்குப் பின், அம்ஸ்ரடாம் விமான நிலையத்திலிருந்து அருகிலிருந்த தற்காலிக அகதிமுகாம் ஒன்றுக்கு அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டபோது, தங்களது எதிர்காலமே நாசமாகப் போனதாக அவர்கள் கவலைப்பட்டனர்.

அவர்கள் தங்க வைக்கப்பட்ட அகதிமுகாமில் சில ஆபிரிக்கர்களும், வட இந்தியர்களும், பாகிஸ்தானியர்களும் மட்டுமே இருந்தார்கள். நம்முடைய கணக்காளர் ஆங்கிலம் பேசத்தெரிந்த ஆபிரிக்கர்களிடமும், இந்தியர்களிடமும் அங்கிருந்து இலண்டன் போக முடியாதா? என்று விசாரித்தார். அவர்கள் அங்கிருந்து அதற்குச் சாத்தியமில்லையென்[illegible]றால் அது சாத்தியமாகும் என்றும் சொன்னார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ஏற்கனவே பிரயாணமுகவர்களுக்கு தெரியாமல் எடுத்து வந்த 1000 டொலருக்கான பிரயாணக் காசோலை அவரிடமிருந்தது. அதில் 500 டொலரை அங்கிருந்த இந்திய முகவர் ஒருவருக்குக் கொடுத்து அவர்கள் பாரிசுக்கு வந்து சேர்ந்தனர்.

பாரிசுக்கு அவர்களை அழைத்து வந்த முகவர் அவர்களை GARE DE NORD புகையிரத நிலையத்தின் முன்னால் இறக்கிவிட்டு போய்விட்டார். முன் பின் ஒருபோதும் வந்திராத, ஆங்கிலம் பேசுவோரைக் காண்பது அரிதாக இருந்த பாரிஸ் நகரத்தில் தனது மனைவியோடும், 8 வயதும், 6 வயதும், 3 வயதும் நிரம்பிய தனது குழந்தைகளோடும் அந்தக் கணக்காளர், அடுத்து என்ன செய்வது? யாரிடம் உதவி கேட்பது? என்று தெரியாமல அன்று அலைந்த அலைச்சல், ஏங்கிய ஏக்கம் சொல்லி மாளாது.

அன்று மாலை அதிர்ஷ்டவசமாக ஒரு தமிழ் இளைஞனைச் சந்திக்க, அவன் இரக்கப்பட்டு அவர்களைத் தானும் தன் நண்பர்கள் நால்வரும் தங்கியிருந்த 'எட்டடிக்குச்சு' அறைக்குள் ஒண்ட இடங்கொடுத்து பொலீசுக்கு அழைத்துச் சென்று அகதி அந்தஸ்த்துக்கு விண்ணப்பம் செய்து விசாவும் வாங்கிக் கொடுத்தபோது இலண்டன் கனவு இனிச் சாத்தியமே இல்லை என்று அந்தக் கணக்காளருக்குத் தெரிந்தது.

நான்கு இளைஞர்களோடு தானும் தன் மனைவியும் மூன்று குழந்தைகளும் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையில் என்ன வேலை செய்தாவது பொருளீட்டி தனியாக தங்களுக்கென்று ஒரு வீட்டை வாடகைக்கு எடுக்க வேண்டிய தேவையை அவருக்கு முதன்மைப்படுத்தியது.

படிப்பு, தகுதி, அந்தஸ்த்து பார்த்து இன்ன வேலைதான் செய்யவேண்டும். இன்ன வேலை கேவலமானது என்ற எண்ணம் அந்த நேரம் அடிபட்டுப் போய்விட்டது. ஆயிரக்கணக்கான ஏழைத்தோட்டத் தொழிலாளர்கள் கூனிக் குறுகி நின்று, வணக்கம்! கணக்கப்பிள்ளை ஐயா!" என்று மரியாதை செலுத்த தலவாக்கெலைப் பகுதியில் நடந்த அந்த அதிகாரத்துவ நடை பாரிஸ் நகரத்தில் செல்லுபடியற்றதாகிவிட்டது.

இலங்கையில் அவர் பெற்ற பட்டத்தை, அவருக்கிருந்த தொழில் அனுபவத்தை வைத்துக் கொண்டு அவரால் பாரிஸ் நகரத்தில் வேலை தேட முடியவில்லை. பிரெஞ்சு மொழியைக் கற்று அதன் பின் இலங்கையில் படித்த பட்டப் படிப்பை பிரெஞ்சுக் கல்வித்தராதரத்திற்கு சமப்படுத்துவதற்கான கால அவகாசம் அவருக்குக் கிடைக்கவேயில்லை.

முதன்முதலாக அவருக்கு பாரிசில் கிடைத்த தொழில், விளம்பரப்பத்திரிகை போடும் தொழில. போலந்துக்கார முதலாளி ஒருவருக்கு சொந்தமான அந்த விளம்பரப்பத்திரிகை விநியோக நிறுவனத்துக்கு அறையில் இருந்த இளைஞர்கள் வேலைக்காக அவரை அழைத்துச் சென்ற போது அவரைப் பொறுத்தவரை அது கொலைக்களத்துக்குச் செல்வதைப் போலத்தான் இருந்தது. ஆனால், அப்போது அவருக்கு அதைத்தவிர வேறு வழி இருக்கவில்லை.

அந்த வேலையைக் கூட அந்த வெளிநாட்டு முதலாளி ஒழுங்காகச் சம்பளம் தராததால் மூன்று மாதத்தில் விட்டு விட்டு, லெபனானிய உணவகம் ஒன்றில் கடை நிலை ஊழியனாக, அதாவது கோப்பை கழுவும் வேலையைச் செய்யச் சென்றபோது உண்மையில் அவர் விரக்தியின் விளிம்புக்கே சென்று விட்டார்.

தனிவீடு வாடகைக்கு எடுக்க வேண்டும் என்பதற்காக, உழைக்க ஆரம்பித்த அவர் பின்பு, அந்த வீட்டுக்கு ஒழுங்காக வாடகை கட்ட வேண்டும், T.V வாங்க வேண்டும், டெக் வாங்க வேண்டும், சோபா செற்றி வாங்கவேண்டும், சாப்பாடு மேசை வாங்கவேண்டும் என்ற, முடிவின்றி நீண்டு செல்லும் தேவைகளுக்காக உழைத்தே ஆக வேண்டும் என்ற தவிர்க்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார். அதாவது, எதிர்காலத்தை திட்டமிட முடியாமல் நிகழ்காலத்து நெருக்கடிகள் அவரைச் சிறைப்படுத்தி விட்டன.

(தொடரும்)

- நக்கீரன்

# நூல் அறிமுகம்

## பிரான்ஸ்-பிரெஞ்சு-பிரெஞ்சியர்




ஐரோப்பிய நாடுகளில் எப்போதும் பிரான்சுக்கு தனியிடம் உண்டு. முதலாவது ஜனநாயகப் புரட்சியும், தொழிலாளர் புரட்சியும் அரங்கேறிய நாடு. முதன் முதலாக மனித உரிமைகள் வெளியிட்ட நாடும் அதுதான்.

பிரான்சில் ஏறக்குறைய 1 1/2 இலட்சம் புதுவைத் தமிழர்களும் 40 ஆயிரம் ஈழத் தமிழர்களும் வாழ்ந்த போதும் பிரான்ஸ் நாடு, பிரெஞ்சு மக்கள், பிரெஞ்சு மொழி, பிரெஞ்சுக் கலாச்சாரம், பண்பாடு பற்றி நம்மவர்களுக்கு குறிப்பாக ஈழத் தமிழர்களுக்கு பரவலாகத் தெரியாது. அதற்கு தமிழில் அது பற்றிய நூல்கள், இங்கு (ஐரோப்பாவில்) இல்லாதிருப்பதும், புதுவையில் வெளிவந்த ஒரு சில நூல்கள்கூட இங்கு கிடைக்காதிருப்பதும் காரணம் எனலாம்.

இந்தக் குறையைப் போக்கும் விதத்தில், ஆசிரியர் ச. சச்சிதானந்தம் அவர்கள் கையடக்கமான பிரான்ஸ் _ பிரெஞ்சு _ பிரெஞ்சியர் என்ற சிறிய நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். பிரான்சின் வரலாறு, சமூக அமைப்பு, கலை கலாச்சாரம், பிரெஞ்சுப் பெண்கள், பிரெஞ்சு அரசியல் உட்பட பல்வேறு விடயங்களைத் தொகுத்து 10 தலைப்புக்களில் இச் சிறு நூல் எழுதப்பட்டிருக்கிறது.

"பிரான்ஸ் என்பது ப்ராங் இனப் பெயர் அடிப்படையிலும், பிரெஞ்சுக்காரர்கள் என்பது மொழிப் பெயர் அடிப்படையிலும் உருவானவை. பண்பாடுகளால் வேறுபட்ட ஓர் ஐம்பது வகை கலப்பின் விளைவுதான் பிரெஞ்சு மக்கள்"

*(பிரான்ஸ், பிரெஞ்சு, பிரெஞ்சியர் - பக்.17)*

பிரான்சின் பூர்வீகப் பெயர் **La Gaulle** (கோல்) என்பதாகும். இந்நாட்டின் மூதாதையர்கள் கோலுவா சமூகத்தவர்கள்.

*(பிரான்சின் பிறப்பு - பக். 26)*

உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சுப் புரட்சி, மனித உரிமைகளைப் பெறுவதற்காக நடாத்தப்பட்ட மக்கள் போராட்டம் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்பன இப் புரட்சியின் சுலோகங்கள்.... 1789_ல் நடைபெற்ற இப் புரட்சியின் விளைவாக மனித உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்டது. 1792_ல் இப் பிரகடனத்தை வெளியிட்டபோது பெண்களின் உரிமைகளையும் பிரகடனம் செய்யும்படி குரல் எழுப்பிய **Olympe de Gouges** என்'ற பெண்மணி சிரச்சேதம் செய்யப்பட்டார்.

*(பிரெஞ்சுப் பெண்கள் - பக். 44)*

* * * * *

பிரெஞ்சுச் சமூகத்தில் புத்தகம் சிறப்பான பண்பாட்டுக் கலாச்சாரப் பொருள் என்று கருதப்படுகிறது. இடையில் நிறுத்திய கல்வியறிவை மீளப் பெறுவதற்குப் புத்தகங்கள் இன்றியமையாதவை என்று ஏகோபித்மாக பிரெஞ்சுக்காரர்கள் நம்புகிறார்கள்.

*(பிரெஞ்சுச் சமூகத்தில் கல்வியின் பங்கு - பக். 94)*

இவ்வாறான பல்வேறுபட்ட தகவல்களும் கருத்துக்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. ஆரம்ப நிலையில் பிரான்ஸ் _ பிரெஞ்சு மக்கள் மற்றும் அவர்களது வரலாறு, கலை, கலாச்சாரம் என்பவை பற்றிய சுருக்கமான தகவல்களை அறிந்துகொள்வதற்கு இந்நூல் ஒரு சிறிய வழிகாட்டியாக அமையும்.

தான் வாழுகின்ற புகலிடச் சூழலை அறியாமல், அந்த நாட்டின், அந்த நாட்டு மக்களின், வரலாற்று, கலை, கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை அறியாமல், தனிமைப் பட்டுப்போய் அந்நியமாதலில் சிக்கித் தவிக்கும், பிரான்ஸ் வாழ் தமிழர்களுக்கு ஆசிரியர் ச. சச்சிதானந்தத்தின் இந்த நூல் முயற்சி பிரயோசனப் படும்.

# அப்பிளும் திராட்சையும் நிறைந்த கண்டிச் சீமை

## பகுதி II

**2**

கண்டிய மன்னனிடமிருந்தும் கண்டிய விவசாயிகளிடமிருந்தும் பறித்தெடுத்த நிலங்களில் மீண்டும் பாரம்பரிய உற்பத்தி முறையான நெல் உற்பத்தி முறையை மேற்கொள்ள ஆங்கிலேயர் விரும்பவில்லை.

அங்கு தங்களது ஐரோப்பியப் பாணியிலான பாரிய பண்ணை உற்பத்தி முறையை உருவாக்கவே அவர்கள் விரும்பினார்கள். ஏற்கனவே கண்டியைச் சூழவுள்ள பகுதிகளில் ஒல்லாந்தர் காலத்தில் கோப்பிப் பயிர்ச் செய்கை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அதை பெரியளவுக்கு வர்த்தகப் பயிராகப் பயன்படுத்தவில்லை.

ஆங்கிலேயர்களோ ஒல்லாந்தர்களின் பரீட்சார்த்த அனுபவத்தை வைத்துக்கொண்டு கோப்பியை ஒரு பெருந்தோட்டப்பயிராக மாற்ற முயன்றனர். ஆனால் துரதிர்ஷ்டவசமாக கோப்பிச் செடியில் ஏற்பட்ட ஒருவித நோய் அதை அசாத்தியமாக்கிவிட்டது. எனவே கோப்பிக்கு மாற்றாக தேயிலையையும், இறப்பரையும் அங்கு பயிரிட அவர்கள் முடிவு செய்தனர்.

இதற்கென மிக அதிகளவிலான தொழிலாளர் படை ஒன்றை திரட்ட வேண்டிய தேவை அவர்களுக்கு ஏற்பட்டது. இந்தத் தொழிலாளர் படையை கண்டிய விவசாயிகளிடமிருந்து திரட்ட அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் ஆபத்தானவர்கள் என்ற எண்ணம் ஆங்கிலேயருக்கு இருந்தது. அதே நேரம் கரையோரச் சிங்களவர்கள் மத்தியிலிருந்தோ, யாழ்ப்பாண வன்னித் தமிழர்கள் மத்தியிலிருந்தோ கூட தொழிலாளர்களைத் திரட்ட அவர்கள் விரும்பவில்லை. அதற்குக் காரணம் அக்காலகட்டத்தில் ஐரோப்பியாவில் முளை விட்டிருந்த சோசலிசக் கருத்துக்களாகும்.

1780-ல் நடந்த பிரெஞ்சுப் புரட்சியும், அதைத் தொடர்ந்து ஏற்பட்ட விஞ்ஞான தொழில் நுட்ப ரீதியான மறுமலர்ச்சிகளும், நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பைத் தகர்த்துக் கொண்டு முதலாளித்துவ சமூக உருவாக்கம் பெறுவதற்கு பெரும் உந்து சக்தியாக விளங்கின. முதலாளித்துவ சமூக அமைப்புக்கு உரித்தான தொழில்மயமாதலும், நகரமயமாதலும், நிலப்பிரபுத்துவ சமூகத்தில் விவசாயக் கூலிகளாகவும், பண்ணையடிமைகளாகவும் இருந்த மக்களை தொழிலாளர் படையாக மாற்றியது.

எப்போதும், 'பழமைவாதத்தை' காப்பதில் அக்கறை கொண்ட பிரித்தானிய ஆளும் வர்க்கம் ஒழுங்கமைக்கப்பட்ட தொழிலாளர் படையையிட்டு எச்சரிக்கையாகவே இருந்து வந்திருக்கிறது. அந்த வகையில் இலங்கையின் மத்திய மலைப் பிரதேசத்தில் தமிழர்களோ, சிங்களவர்களோ யாராக இருந்தாலும் இலங்கையர்கள் மத்தியிலிருந்து ஒரு தொழிலாளர் படையை உருவாக்குவது எதிர்காலத்தில் தங்களது ஆட்சிக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என்று அவர்கள் கருதினார்கள்.

அமெரிக்க நிலங்களில் வேலை செய்வதற்காக தமது முன்னோர்கள் ஆபிரிக்கநாட்டுக் கறுப்பின மக்களை வேட்டையாடி பிடித்துச் சென்றதுபோல் தமிழ்நாட்டு மக்களை இலங்கைக்குப் பிடித்துவர அவர்கள் விரும்பினார்கள். குறிப்பாக தமிழ்நாட்டு மக்களை அவர்கள் நேர்ந்தெடுத்ததற்கு கபடத்தனமான அரசியல் காரணம் ஒன்று இருந்தது. அதாவது இலங்கையிலுள்ள தமிழர்களும், சிங்களவர்களும் தங்களுக்கெதிராக ஒன்று சேர்ந்துவிடாதபடி தமிழர்களால் தமிழ்நாட்டுத் தொழிலாளர்களைவைத்தே இன முரண்பாட்டைக் கூர்மைப் படுத்துவதற்கான அடித்தளம் ஒன்றை இடுவது அவர்கள் நோக்கமாக இருந்தது.

அதற்கு 19_ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் தமிழ்நாட்டின் இராமநாதபுரம் புதுக்கோட்டை மதுரை மாவட்டங்களில் ஏற்பட்ட கொடிய பஞ்சமும், அந்தப் பகுதிகளில் அந்தக் காலத்தில் நிலவிய கொடிய சாதிய அடக்கு முறைகளும் வாய்ப்பாக அமைந்தன.

வாழ்வுக்கும் சாவுக்குமிடையில் போராடிக் கொண்டிருந்த அந்த மக்களை ஆங்கிலேயர்களிடம் கைக்கூலிகளாகப் பெற்ற தரகர்கள் (கங்காணிகள்) அணுகி 'கண்டிச்சீமை' கதையை அவிழ்த்து விட்டனர்.

## காக்கை வன்னியன் முதல் கதிர்காமர் வரை

*கணவரும் மனைவியும், தந்தையும் மகனும், தாயும் பிள்ளைகளும், அண்ணனும் தம்பியும், தங்கையுமாக தங்கள் அன்புக்குரியவர்கள் தங்கள் கண் முன்னாலேயே துடிதுடித்து வீழ்ந்து மடியும்போது அவர்களை அநாதைப் பிணங்களாய் இறந்த இடத்திலேயே குழி தோண்டிப் புதைத்துவிட்டும், வீசி எறிந்துவிட்டும் அவர்களுக்காக கண்ணீர் சிந்தக்கூட கால அவகாசம் கொடுக்காமல் அடித்து விரட்டி அழைத்துச் செல்லப்பட்ட கொடுமை இந்த மக்களுக்கு நிகழ்ந்தது.*

காசு பணம் தேவையில்லை, தகுதி அந்தஸ்த்து அவசியமில்லை, ஆணும் பெண்ணும் வரலாம், குடும்பத்துடன் வரலாம். குந்தியிருக்க சொந்தநிலம், குடியிருக்க வீடு, அப்பிளும், திராட்சையும் கொட்டிக் கிடக்கும் சொர்க்கபூமி, வேலையில் கஷ்டமில்லை, தொல்லையில்லை, கைநிறையச் சம்பளம் என்றெல்லாம் இந்தத் தமிழக மேட்டுக்குடித் தரகர்கள் கட்டி விட்ட கதையை நம்பி தென் தமிழ் நாட்டைச்சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள், தங்கள் முன்னோதையர் வாழ்ந்த, தாங்கள் பிறந்து வளர்ந்த, தங்கள் சொந்த மண்ணை விட்டுப் புறப்பட்டனர்.

புதுக்கோட்டை, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலிருந்த கிராமங்களிலிருந்து அந்த மக்களை கிளப்பும் வரை வார்த்தை ஜாலங்கள் செய்து தேனொழுகக் கதைத்த ஆங்கிலேயரின் ஆள் பிடிகாரத் தரகர்கள், இராமேஸ்வரத்துக்கு அவர்கள் வந்து சேர்ந்ததும் பட்டிகளில் ஆடு மாடுகளை அடைப்பதைப்போல சிறிய கப்பல்களில் அடைத்து அடிமைகளைப் போல் அதட்டி மிரட்டி மன்னாருக்குக் கொண்டு சென்றனர்.

இவ்வாறு, கப்பலில் மன்னார் போய் சேருவதற்கு முன்னே பலர் வயிற்றோட்டம், வாந்திபேதி, அம்மை நோய் கண்டு மடிந்து விட்டனர். மன்னார் இறங்கு துறையிலிருந்து கால் நடையாக அடர்ந்த காடுகளூடாக மலையகத்திற்கு அழைத்துச் செல்லப்படும் போது சாப்பாடு இல்லாமலும், தண்ணீர் இல்லாமலும் மயங்கி விழுந்து மடிந்தவர்கள் ஆயிரம் ஆயிரம்பேர். மலேரியா, வயிற்றோட்டம், சின்னம்மை, பெரியம்மை, பூச்சிக்கடி, பாம்புக்கடி, போன்றவற்றாலும் கரடி, புலி, ஓநாய்கள் போன்ற கொடிய காட்டு மிருகங்கள் தாக்கியும் யானைகள் அடித்து மிதித்தும் உயிரிழந்து போனவர்கள் ஆயிரமாயிரம் பேர்.

கணவரும் மனைவியும், தந்தையும் மகனும், தாயும் பிள்ளைகளும், அண்ணனும் தம்பியும், தங்கையுமாக தங்கள் அன்புக்குரியவர்கள் தங்கள் கண்முன்னாலேயே துடிதுடித்து வீழ்ந்து மடியும்போது அவர்களை அநாதைப் பிணங்களாய் இறந்த இடத்திலேயே குழி தோண்டிப் புதைத்துவிட்டும், வீசி எறிந்து விட்டும் அவர்களுக்காக கண்ணீர் சிந்தக்கூட கால அவகாசம் கொடுக்காமல் அடித்து விரட்டி அழைத்துச் செல்லப்பட்ட கொடுமை இந்த மக்களுக்கு நிகழ்ந்தது.

குற்றுயிரும் குறையுயிருமாய் கண்டிக்கு வந்தபின்பும், இந்த மக்களின் துயரம் முடியவில்லை. அவர்கள் தமிழ்நாட்டிலிருந்த போது வெள்ளை எஜமானின் கைக்கூலிகளான கங்காணிகள் சொன்னதுபோல் அங்கு அப்பிளும் திராட்சையும் கொட்டிக் கிடக்கவில்லை. குந்தியிருக்க சொந்தநிலம் குடியிருக்க சொந்தவீடு கிடைக்கவில்ல.

கொடிய வெய்யிலும், கடும் வரட்சி நிலவும் அனல் பிரதேசத்திலும் வாழ்ந்து பழக்கப்பட்ட அந்த மக்களுக்கு கண்டியக்குளிர், வெள்ளை எஜமானர்களும், அவனது கைக்கூலிகளான கங்காணிகளும் செய்யும் கொடுமையைவிட கொடூரமானதாக இருந்தது.

போர்த்திக் கொள்ள நல்ல போர்வையில்லாமல், போட்டுக்கொள்ள நல்ல உடுப்புகள் இல்லாமல் , படுத்துறங்க நல்ல இடம் இல்லாமல், சாப்பிட நல்ல உணவு இல்லாமல் மாடுகளைப்போல அந்த மக்கள் உழைக்க வைக்கப்பட்டார்கள். அடித்து உதைத்து வேலை வாங்கப்பட்டார்கள்.

இன்றைக்கு சிங்கள இனவாதிகள் சொல்வது போல், தமிழ் நாட்டிலிருந்து போய் இறங்கியவுடனேயே கண்டிய சிங்கள விவசாயிகளின் நிலத்தில் போய் குடியேறி அதை ஆக்கிரமித்து தேயிலை, இறப்பர் தோட்டங்களை அமைத்து விடவில்லை. சிங்கள 'விவசாயிகளோ, சிங்கள நிலப்பிரபுக்களோ வாழ்க்கையில் ஒரு நாள் கூட நுழைந்தே இருக்காத காடுகளை அவர்கள் வெட்டினார்கள். அங்கிருந்த கற்பாறைகளை அவர்கள் தகர்த்தார்கள். அங்கு தேயிலை, இறப்பர் தோட்டங்களாக அமைக்கப்பட்ட ஒவ்வொரு அங்குல நிலமும் தமிழ் நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் வியர்வையாலும் இரத்தத்தாலுமே உருவாக்கப்பட்டது.



இந்தியத் தமிழ்த் தொழிலாளர்கள் இலங்கைத் தோட்டங்களுக்கு அழைத்து வரப்படுவதற்கு முன்னர் ஒன்று திரட்டப்பட்டு குடிசைகளில் தங்க வைக்கப்பட்டனர். இது சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்னர் எடுக்கப்பட்ட படம்.

**- நக்கீரன்**

## சிறுகதை

# காணி நிலம்

அ. பாலமனோகரன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இந்நேரம், அத்திவாரக் கட்டிலிருந்து எழுந்த கிழவர், சமயலறைக்குள் சென்று ஒரு போத்தல் விளக்கை ஏற்றிக் கொண்டு வந்து, அத்திவாரச் சுவரில் வைத்துவிட்டு, மறுபடியும் தனது இடத்தில் உட்கார்ந்து கொண்டார்.

அப்போது சுந்தரம், தனது மனதில் இயல்பாக எழுந்த கேள்வியைக் கிழவரிடம் கேட்டார். "பெரியவர்!.. நீங்கள் இந்த வயதிலை இங்கை தனியாகத்தான் இருக்கிறியள் போல கிடக்கு!.. உங்களுக்குப் பிள்ளையள், பேரப்பிள்ளையள் இல்லையோ?.."

"ஏன் இல்லை!.. உங்கடை அப்பாவைப்போல எனக்குப் பதினேழு பேரப்பிள்ளையள் இல்லைத்தான்! எனக்கும் இரண்டு பொம்பிளைப் பிள்ளையளும், அவையளுக்கு ஆளுக்கு ஆளுக்கு நாலு பிள்ளையளும் இருக்குத்தான்!.. அந்தக் குஞ்சுகளிலை குடும்பத்துக்கு ஒரு பிள்ளை எங்கடை மண்ணைக் காக்கத் தங்கடை உயிரைக் குடுத்திட்டுதுகள்!.. இரண்டு வருஷத்துக்கு முந்தி நடந்த முல்லைத்தீவுச் சண்டையிலை!.. ம்ம்.. வாழ வேண்டியதுகள் போக இப்பவும் நான் இருக்கிறன்!.. ம்ம்.. உப்பிடி எத்தினை குஞ்சுகள்!.." எனப் பெருமூச்செறிந்த கிழவர் சிறிதுநேரம் அமைதியாய்ப் போனார்.

பின்னர், சுந்தரலிங்கம் கேட்ட கேள்விக்கான மிகுதிப் பதிலையும் கூறுவதுபோலப் பேசத் தொடங்கினார்.

"என்ரை பிள்ளையளும், பேரப்பிள்ளையளும் இப்ப தங்கடை வயலுக்கைதான் கொட்டில் போட்டுக் கொண்டு இருக்கினம்!.. இப்ப ஊருக்கை சனம் இருக்கிறது குறைவு!.. உழவுமிசினுக்கு டீசலெண்ணெய் இல்லை!..வயலுக்குப் போடப் பசளை இல்லை!.. களைக்கு அடிக்க மருந்தில்லை!.. பூச்சிபுழு விழுந்தால் அதுக்கு அடிக்க மருந்தில்லை!.. பழைய காலத்திலை போலை இப்ப எல்லாம் மாட்டாலை பலகையடிச்சு, நாத்துநட்டு, கையாலை களைபிடுங்கி, ஒவ்வொரு பயிரையும் கைப்பிள்ளை போலை பராமரிச்சால்தான் பலன் கிடைக்கும்! வயலுக்கை தங்கடை தேவைக்கு பயிர்கொடியும் வைச்சிருக்கினம்...அங்கை ஏதோ ஒரு வேலை எப்போதும் இருந்துகொண்டே இருக்கும்!.. அதுதான் அவையள் எல்லாரும் தங்கடை வயலுக்கை இருக்குதுகள்... பொடிபொட்டையள் மட்டும் சைக்கிளிலை பள்ளிக்கூடத்துக்கு வந்துபோவினம்... என்னையும் வந்து பாத்துத் தேவையானதைச் செய்து தந்திட்டுப் போவினம். சில நேரம் என்னோடையும் நிப்பினம்...

...இந்தக் காணிதான் எங்கடை பரம்பரைக்காணி!... நானும் என்ரை மனுசியும் பாடுபட்டுக் கட்டினதுதான் இந்த வீடு! ...கோதாரிவிழுந்தவங்கள் குண்டைப் போட்டு உடைச்சுப் போட்டாங்கள்!...அந்த நேரம்தான் என்ரை மனிசியும் தலையிலை ஓடு விழுந்து செத்துப்போனாள்!.. இந்த வீட்டை விட்டிட்டுப் போக எனக்கு மனமில்லை!.. உங்கடை அப்பாவைப் போல, எனக்கும் இந்த வீட்டிலைதான் என்ரை சீவன் போகவேணும் எண்டொரு ஆசை!..

ம்ம்.. அது இந்த வீட்டிலைதான் போகும்! எனச் சொல்லிய கிழவர் மீண்டும் அமைதியாகப் போனார்.

அவருடைய மௌனத்தைக் குலைக்க விரும்பாத சுந்தரம் எதையுமே பேசவில்லை.

முழுமையாகப் பரவிவிட்ட அந்த இருளில் கிழவர் ஏற்றிவைத்த சிறிய போத்தல் விளக்கு ஒரு சிறிய வட்டத்தினுள் தன் மங்கலான ஒளியைச் சிந்திக்கொண்டிருந்தது.

"நிலவு காலிச்சிட்டுது!.. பயண அலுப்புத்தீரக் கிணத்தடியிலை குளிச்சிட்டு வாருங்கோ! சாப்பிடுவம்!" எனக் கிழவர் சுந்தரத்துக்குக் காட்டினார்.

சில்லென்று இருந்த குளிர்ந்த நீரை வாளியினால் அள்ளியள்ளித் தலையில் ஊற்றிக் குளித்துவிட்டு வந்த சுந்தரம், கிழவர் கொடுத்த பச்சையரிசிச் சோற்றையும், மீன்குழம்பையும் பிசைந்து சாப்பிட்ட போது அந்த எளிமையான உணவு அவருக்கு அமிர்தம் போலச் சுவைத்தது.

"இது என்ன மீன்? நல்ல ருசியாய் இருக்குது?" என அவர் கேட்டதற்குக் கிழவர், "இதுதான் குளத்து விரால் மீன்!.. பின்ளையளின்ரை வயல், முறிப்புக்குளத்து அலைகரை வித்திலைதான் இருக்கு!.. பேரப்பிள்ளையள் இடைசுகம் பிடிச்சுக்கொண்டுவந்து தருவினம்!.. எனக்கு விரால்மீன் எண்டால் உசிரெண்டு அதுகளுக்குத் தெரியும்!" எனச் சொல்லிச் சிரித்தார்.

கடந்த தடவை சுந்தரம் தண்ணீரூற்றுக்கு வந்து தன் தந்தையுடன் கொத்தியாம்பத்துத் தோட்டத்தில் தங்கியிருந்த காலம் நல்ல மாரிமழை பெய்திருந்தது. இரவின் அமைதியிலே ஓவென்றதொரு ஓசை பேரிரைச்சலாகத் தொடர்ந்து கேட்கவே அது என்ன ஒலி என்று சுந்தரம் தன் தந்தையைக் கேட்டிருந்தார். அவர் அதற்கு 'இதுதான் கலிங்கு பாயுற சத்தம்!.. கணுக்கேணி முறிப்புக்குளம் நிரம்பி கலிங்கு பாயுது!.. நாளைக்குக் காலமை போய்ப்பாப்பம்!' என்று சொல்லியிருந்தார்.

அடுத்தநாட் காலை சுந்தரம் தன் தந்தையுடன் சென்று, ஒரு பனை உயரத்துக்கும் அதிகமான முறிப்புக்குளக்கட்டின்மேல் நின்று கொண்டு பார்த்தபோது அவர் பெற்ற அனுபவம் இப்போதும் நெஞ்சில் பசுமையாக இருந்தது.

ஒரு பக்கம் மெல்லலை எறிந்துகொண்டிருக்கும் பரந்த குளம். கீழே பார்த்த கண்ணுக்கெல்லாம் பச்சைப்பசேல் எனக் காற்றில் அலைபுரளும் நெல்வயல்கள். அந்த வயல்களினூடாக வளைந்து செல்லும் குமுளமுனை செம்மண்சாலை. வயல்களுக்குக் கிழக்கே எழுந்த மேடான பிரதேசத்தில் கரும்பச்சைத் தோகை விரித்துக் காற்றில் அசைந்தாடும் இளந்தென்னைகள்.

சுமார் அரைமைல் தூரம்வரை பிறைபோல் வளைந்து கிடந்த அந்தக் குளக்கட்டின் மீது நடந்து சென்று, கலிங்கைக் கண்டபோது சுந்தரம் பிரமித்துப்போனார்.

மாரிகாலத்தில் மேல்காடுகளிலும் பெய்யும் பெருமழை காட்டாற்று வெள்ளமாகப் பெருகிவந்து ஒரு இரவுக்குள்ளாகவே அந்தப் பெரிய குளத்தை நிறைத்துக் குளக்கட்டில் அலைமோதும். அந்த மிதமிஞ்சிய நீர் குளக்கட்டை உடைத்துவிடாதிருக்க, குளத்தின் ஆழமற்ற பகுதியில் ஒரு நூறுயார் தூரத்திற்கு உறுதியான, கலிங்கு என அழைக்கப்படும் வடிகாலை அமைத்திருந்தார்கள். ஆளளவு உயரமான அந்தக் கலிங்கிலிருந்து, ஒரு அடிக்கனதியில்தண்ணீர் ஓவென்ற பேரிரைச்சலுடன் தாரையாக வீழ்ந்து கொண்டிருந்தது. அப்படி விசையுடன் வீழ்கின்ற நீர் தரையைக் குத்தியெடுத்து விடாதிருக்க உறுதியான கொங்கிறீற் தளம் பாவித்து இருந்தார்கள். இத் தளத்தை, தரையின் இறக்கத்துக்கு ஏற்ற வகையில் பெரிய படிகளாகவும் அமைத்திருந்தார்கள். கலிங்கிலிருந்து ஆக்ரோஷமாக வெளியேறிய நீர், கொங்கிறீற் தளத்தில் பரவிப் பாய்ந்து வேகங்குறைந்து, படிக்கட்டுக்கள் வழியாக ஓடிக்கொண்டிருந்தது.

இக் காட்சியை சுந்தரம் பிரமிப்புடன் இரசித்தார். அங்கு அவரைக் குறிப்பாகக் கவர்ந்தவை, கலிங்கில் நீர் வீழ்ச்சியாகக் கொட்டும் தண்ணீருக்கு எதிர்ப்பாய்ச்சலாக, துள்ளியெழுந்து, தாம் வாழ்ந்த குளத்தினுள் மீண்டும் போய்ச் சேர்ந்துவிட துடித்த மீன்கள்தான். நீளமான அந்த மீன்கள் அவ்வாறு துள்ளியெழுகையில், அவற்றின் உடல்கள் காலை வெய்யிலில் பளீரென்று ஒளிவீசின. அவை என்ன மீன்கள் எனச் சுந்தரம் தந்தையிடம் வினவியபோது, இதுதான் விரால்மீன்! என அவர் சொல்லியிருந்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர், தனக்குத் தந்தை முதன்முதலில் அறிமுகப்படுத்திய விரால்மீனை, இன்று, தன் தந்தையின் வயதையொத்த கிழவர் ஒருவர், சுவையான குழம்பாக வைத்துத் தந்தது சுந்தரத்துக்கு ஒரு பொருள்பொதிந்த அனுபவமாகத் தோன்றியது.

சுந்தரத்துக்கு ஒரு பாயும், தலையணையும் கொடுத்துத் தனது வாங்கில் படுக்கும்படி கூறிவிட்டு, தரையில் ஒரு சாக்கை விரித்து, தலைக்கும் ஒரு சாக்கை மடித்து வைத்துக்கொண்டு படுத்த கிழவர் மிக விரைவிலேயே தூங்கிவிட்டதை அவருடைய சீரான குறட்டையொலி சுந்தரத்துக்குப் புலப்படுத்தியது.

இலண்டனிலே, நவீன சௌகரியங்களையும், பிரத்தியேகத் தாதியின் பராமரிப்பும் கொண்டதொரு முதியோர் இல்லத்தில், தனது கடைசி காலத்தைக் கழித்து தனது தந்தை, இரவிலே தனக்குத் தூக்கமே வருவதில்லை எனக் குறைப்பட்டுக் கொள்வதை இப்போது சுந்தரம் நினைத்துக் கொண்டார்.

அன்று பகல் முழுவதுமே பயணம்செய்த அலுப்பு, கிணற்று நீரில் தோய்ந்த சுகம், கிழவரின் விரால்மீன் குழம்பு, சீனட்டி அரிசிச் சோறு, இவையெல்லாம் சேர்ந்து சுந்தரத்தைச் சீக்கிரமாகவே நித்திரையில் ஆழ்த்திவிட்டிருந்தன.

* * * * *

அவர் ஆழ்ந்து தூங்கிய போதும், அவருடைய அடிமனது ஓயவில்லை. ஓவென்று இரைந்துகொண்டு இறங்கிய கலிங்கு நீரின் வீழ்ச்சிக்கு எதிராக, பளீரென ஒளிவிடும் விரால் மீன்கள் மீண்டும் துள்ளியெழுந்து கொண்டிருந்தன.

பின்னர் அவை திடீரென சமன் மீன்களாகிவிட்டன.

அத்திலாந்திக் சமுத்திரத்தில், செந்நிறம் கொண்ட சமன் மீன்களின் திரள் ஒன்றில் சுந்தரத்தினுடைய தந்தையும் ஒரு செம்மீனாக, வெகுதூரத்திற்கும் அப்பால், வடதுருவ மலைகளிடையே இருந்து வரும் நதியொன்று உற்பத்தியாகிய மூலத்தானத்தைத் தேடிச் செல்கிறார்.

'நான் அந்த இனிய நீரூற்றில்தான் பிறந்தேன்.... அது ஓடையாகிப் பாய்ந்த இடத்திலேதான் வளர்ந்தேன். அது கடலை நோக்கி ஓடும் நதியாக மாறி, அத்திலாந்திக் சமுத்திரத்தில் கலக்கும் கழிமுகத்தை நோக்கித்தான் இப்போது போகின்றேன்'

'அப்படி எத்தனையோ நதிகள் இருக்கின்றனவே! வடதுருவ மலைகளிடையே பல்லாயிரக்கணக்கான ஓடைகள் உள்ளனவே!.. அவற்றில் நீங்கள் ஜனித்த அந்தக் குறிப்பிட்ட நீரூற்றை எப்படி உங்களால் சென்றடைய முடியும்?'

'என்னால் அது முடியும்! என்னுள் நான் பிறந்த நீரூற்றின் சுகந்தம் உள்ளது! அது ஒரு தனித்தன்மை கொண்ட மணம்! ஒவ்வொரு ஓடைக்கும் தனித்தனியான வாசம் உண்டு! அது ஒரு தனியூற்று! உலகம் பிறந்த காலத்திலிருந்தே செம்மீன்கள் இப்படித்தான் சமுத்திரத்திலிருந்து தாம் பிறந்த இடத்தை நோக்கி யாத்திரை போகின்றன!'

'செம்மீன்கள் தாம் உற்பத்தியாகிய ஓடைகளை நோக்கி நெடும்பயணம் மேற்கொள்வது முட்டையிட்டு தமது சந்ததியைப் பெருக்கவல்லவா? நீங்கள் ஏன் போகின்றீர்கள்?... உங்களுடைய சந்ததியாகிய நாங்கள் எல்லோருமே இலண்டனில் அல்லவா இருக்கின்றோம்!'

'செம்மீன்கள் தாம் பிறந்த ஊற்றைநோக்கி யாத்திரை போவது தமது இனத்தைப் பெருக்குவதற்காக என்பது உண்மைதான்! ஆனால், அவை உயிரை விடுவதற்காகவும் அங்கு போகின்றன என்பது உனக்குத் தெரியாது!.. அப்போதுதான் அவற்றால் மீண்டும் வாழமுடிகின்றது!'

'என்ன? உயிரை விடுவது உயிரை அடைவதற்காகவா!?

'என்ன!.. இது கூட உனக்குத் தெரியாதா?'

தூக்கத்தில் இருந்த சுந்தரம் ஏதோ கனவு கண்டவர்போல் நித்திரை இலேசாகக் குழம்பி, பின் மறுபக்கமாகத் திரும்பிப் படுத்துக்கொண்டார்.

• • • • •

அடுத்தநாள் விடியக் கருக்கலிலேயே எழுந்த கிழவரும், சுந்தரமும் கொத்தியாம்பத்தை அடைந்த போது பொழுது விடிந்து கொண்டிருந்தது.

அங்கு சுந்தரம் இப்போது கண்டதற்கும், அவர் தன் மனதிலே அந்த இடத்தைப்பற்றி உருவாக்கி வைத்திருந்த காட்சிக்கும், மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம் இருப்பதைக் கண்டு அவர் மலைத்தே போனார்.

கண்ணுக்கெட்டிய தூரம்வரை இறுங்குபோற் குலைதள்ளி இலுத்துக்கிடந்த இளந்தென்னஞ்சோலை எங்கே?

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)



# மணிரத்தினத்தின் இருவர்

## நட்புக்காக ஒரு பாடல்

இருவர் படம் அதன் தொடக்க நாளிலிருந்தே பலவேறு வசவுகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் உள்ளான படம். திராவிட அரசியல் பற்றிய படம் என்றும் விடுதலைப் புலிகள் பற்றிய படம் என்றும், இனவிடுதலைக்கெதிரான பெருந்தேசியத்தை ஆதரிக்கும் படம் என்று பரவலான செய்திகள் ஐரோப்பிய / இந்திய / இலங்கைப் பத்திரிகைகளில் இடம் பெற்றன. செய்திகளை அடியொற்றியே மணிரத்தினத்தின் மீது காட்டமான முன்தீர்ப்புக்களும் வைக்கப்பட்டன.

எதிர்பார்ப்புக்களை எல்லாம் பொய்யாக்கிவிட்டு மறுபடியும் தானொரு முக்கியமான தமிழ் இயக்குனர் என்பதை மணிரத்தினம் நிரூபித்திருக்கிறார்.

இந்தியன் படத்திற்கும், அவ்வைசண்முகிக்கும், பிரபுதேவா நடனம் இடம் பெற்ற பம்பாய் படத்திற்கும் வந்திருந்த பெருங்கும்பல் இந்தப் படத்திற்கு காணோம். அநேகமாக ஐஸ்வர்யா ராயின் கவர்ச்சி / அதிரடி நடனங்களுக்காகப் போனவர்களுக்கு இப் படம் ஏமாற்றத்தையே தந்திருக்கும்.

இப் படம் நட்புக்கான ஒரு பாடல். எம்.ஜி. ராமச்சந்திரன் என்கிற நடிகனுக்குள் / அரசியல்வாதிக்குள் / சதாகாலமும் இருந்த மனிதனுக்கான அஞ்சலி. மணிரத்தினம் பற்றிய விமர்சனங்களில் நான் வலியுறுத்தி வந்த ஒரு அம்சம்



அவர் ஒரு அசலான இந்திய / தமிழ்த் தன்மையுள்ள படங்களைக் கொடுக்க முனைகிறவர் என்பதுதான்.

மணிரத்தினத்தை நிச்சயமாக சங்கர், ரவிக்குமார், 'ஹாலிவுட் பிரமித்தல்' செட்டுக்காரர்கள் போன்றவர்களோடு வைத்துப் பார்க்க முடியாது. ஒரு படைப்பாளியை, அவன் வெகுஜன சினிமாவுக்குள் இயங்கும் படைப்பாளியானாலும், அவனை அவன் வாழ்காலத்தில் அவன் செயல் பட்டுக்கொண்டிருக்கும் போதே முற்றிலும் / அவனை முற்றிலும் மதிப்பீடு செய்து முற்றுப்புள்ளி வைக்க முடியாது.

அவ்வகையில் அவரை இந்துத்துவவாதி, தமிழ்தேசிய எதிர்ப்பாளர் என்று நிராகரித்தவர்களை அவர் பொய்யாக்கி விட்டிருக்கிறார்.

படத்தின் முதலிலே சொல்லிவிடுகிறார்கள். இது உண்மைக் கதை அல்ல. இப்படி வலியுறுத்திச் சொல்வதிலிருந்தே இது உண்மைக் கதையின் கூறுகளைக் கொண்டிருக்கிறது என்பது சொல்லப்பட்டுவிடுகிறது. எம்.ஜி.ஆர், கருணாநிதி போன்றவர்களின் உறவில் தனிமனிதர்கள் என்கிற அளவிலும், அரசியல் மனிதர்கள் என்கிற அளவிலும் பரவலாக அவர்கள் பற்றி அறியப்பட்ட புறநிலைச் சம்பவங்கள் / உறவுகளின் அடிப்படையில் இப்படம் கட்டமைக்கப்படுகின்றது.

படம் மூன்று வகைகளில் இயங்குகிறது.

1. அவர்களின் ஆண் / பெண் உறவுகள், இரு பெண் உறவுகளின் பின்னிருக்கும் **மனோர்வியலை வியாக்கியானப் படுத்துகிறது.** (Interpretation) மனிதர்களுக்கிடையிலான உறவுகளை விகாரப்படுத்தி விடாமல் அதன் பின்னிருக்கும் மனம் சார்ந்த காரணங்களை விளக்க முயற்சிக்கிறது.

உ+ம்: எம்ஜி.ஆர் X ஜெயலலிதா / கருணாநிதி X கர்மாம்பாள். இவ் வகையில் மணிரத்தினம் ஏற்கனவே நிலவும் அசிங்கமான தமிழ்ச் சினிமா கொச்சை மரபை (செல்வமணி / இராம நாராயணன்) உடைத்திருக்கிறார்.

2. அதிகாரம் / பதவி போன்றன. மனித உறவுகளில் பெறும் இடத்தை. அதிகாரமும் அரசியலும் சுயாதீனமானவை- அதனுள் உள்ளிட நேரும் மனிதர்கள் தமது தெரிவாகக் கொள்ள முடிகிறவை சொற்பமே.

அதிகாரம் பற்றிய விமர்சன பூர்வமான பிரக்ஞை இல்லாத போது அதிகாரபோதை / லஞ்ச ஊழல் / சுயநலம் / வாரிசு அரசியல் போன்றவை உருவாகின்றன. இவர்கள் மக்களை 'பாவிக்க' நினைப்பார்கள்.

(வசனம்: லெனின் ஸ்டாலின் ஹிட்லர் போன்றோர் மிகச் சிரமப்பட்டு திரட்டிய மக்களை நீ சாதாரணமாகத் திரட்ட முடிகிறது.)


படம் முழுக்க எம்.ஜி.ஆர் X கருணாநிதி என்ற 'இருவர்' இற்கும் இடையில் நிலவும் இதத நட்பு X சந்தேகம் தொடர்ந்து பேணப்படுகிறது.

3. மிக வெளிப்படையாகத் தேர்ந்துகொள்ளும் சம்பவங்கள், முழுக் கதையையும் கட்டுப்படுத்துமானால், **நிகழ்காலத்தை; பார்வையாளன் அதே நிஜத்தை வெளிக்கொணர்கிறதா(?) என எதிர்பார்ப்பான்.**

இந்தச் சிக்கல், பார்வையாளனது எதிர்பார்ப்புக்கும் X இயக்குனரின் கதைத் தேர்வுக்குமான இச் சிக்கல் படத்தை; இயக்குனரை மட்டுப்படுத்திக் கொள்ள வைக்கும்.

கல்பனாவின் சாவு அவ்வகையில்தான் நேர்கிறது. மேலும் அவ்விடயத்தில் கல்பனா இறந்ததும் உறுதிப்படுத்தப்படவில்லை. அவள் **உயிர்த்து வருவதற்கான இடத்தை படம் திறந்த படி விட்டிருக்கிறது.**

அரசியல் பற்றின ஆய்வென்பது இங்கு 'மரணத்தை ஒரு



தற்காலிக முடிவாகக்கொண்டு' நட்புக்கான ஒரு மனித இரங்கலாக நிறைவு பெறுகிறது.

இப்படம்; அரசியல் கண்ணோட்டத்திலிருந்து திராவிட அரசியலை ஆய்வுக் கண்ணோட்டத்தில் விமர்சித்த படமல்ல, அவ்வகையில் இப்படம் அரசியல் சினிமா அல்ல.

ஒரு வகையில் சினிமாக் கலைஞர்களுக்கும் அரசியலுக்கும் உள்ள உறவை மிக நேர்மையாக அணுகிய படமென்றும் இதைக் காணலாம்.

நடிகனின் நோக்கம் ஆரம்பத்திலிருந்தே அரசியல் அதிகாரம் பெறுவது என்பதல்ல. அவனது ஏழ்மையான இரங்கத்தக்க வாழ்விலிருந்தே அவனது அரசியல் வடிவம் பெறுகிறது. வசனகர்த்தாவின் நோக்கம் ஆரம்பத்திலிருந்தே அரசியல் அதிகாரம் பெறுவதுதான்.

அரசியல் அதிகாரத்துக்கான திட்டங்களாகவே அவனது ஒவ்வொரு நடவடிக்கையும் இடம் பெறுகிறது. நடிகனை (அவனும் மனிதன்தான். நட்பும் நம்பிக்கையும் எதிர்பார்ப்புக்களும் கொண்ட உணர்ச்சிமயமான மனிதன்) தனது அரசியல் அதிகாரத்துக்காக பாவித்துக் கொண்ட வசனகர்த்தா; அவனது ஆளுமையை மிகக் கேவலமாக மதிப்பிடுகிறான்.

அறிவுஜீவிகளும் நிர்வாகப் புத்தியுள்ளவர்களும் உள்ள இடத்தில் எவ்வாறு நடிகன் வர முடியும்? என்பதுதான் அவரது உள்ளக் கிடக்கை. அது அதிகாரத்தின் பாற்பட்ட செயல். தனக்கு அருகில் இன்னொரு அதிகாரமுள்ள மனிதனை வைத்துப் பார்க்க முடியாத மனதின் வெளிப்பாடு.

ஒரே மாதிரி வாழ்க்கையைத் தொடங்கிய நண்பர்களில் ஒருவரை மற்றொருவர் **அடிப்படை மனிதனாக மதிக்க வொண்ணாத காரணத்தை** அதிகார போதையே தருகிறது.

கடற்கரையில் முதல்வருக்கும் மனைவிக்கும் நடக்கும் உரையாடலும், கட்சியைவிட்டு வெளியேற்றிய பின்னால் நடிகன் தெரிவிக்கும் மௌனமான எதிர்வினையும் மிகுந்த துக்கத்தை எழுப்புபவை. எத்தனை கொடுமையான மனித நிராகரிப்பு! தான் காரணமாகி வந்த அதிகாரம் தன்னையே நிராகரிக்கும் நடைமுறையை சகிக்க வொண்ணாத ஒரு மனத்தின் வெளிப்பாடுதான் நடிகனின் அரசியல் பிரவேசம்.

ஒரு மனிதனாக அவன் தேர்ந்து கொண்டவை இங்கு என்ன? அவனது எதிர்பார்ப்புக்கள் ஆசைகள் நோக்கங்களின் இடம் இங்கு என்ன? நேசித்தவளை மணக்க முடியாத அர்சியல். தனது வறுமையே அரசியலுக்கு அடித்தளமான வெகுஜன அரசியல். எங்கோ தொடங்கி எங்கேயோ அதிகாரத்தின் அச்சாணியாகச் சுழல வேண்டிய மனிதனின் துக்கம்.




திருமணத்தில் சந்திக்கும் இரண்டு நண்பர்கள், தொடர்ந்து ஏற்படும் தடுமாற்றம், இருவருக்கும் இடையில் மிகப் பெரிய இடைவெளியை உருவாக்கிக் கொண்டு மிகப் பெரிய கற்தூண்களில் உயர உயரமான கட்டடச் சுவர்கள். மிக அருகில் அருகருகே இருந்தாலும் மனம் நெருங்க முடியாது உயர்ந்து நிற்கும் விலகி நிற்கும் தூண்கள். அதிகாரமெனும் தூண்கள். முதல்வர் முதன்முதலில் நாற்காலியில் அமரும்போது தோன்றும் உண்மை உணர்வை; பெருமிதத்தைக் காட்டும் காட்சியோடு இக் காட்சியை சேர்த்துப் பார்க்க வேண்டும்.

இப் படத்தின் பலவீனமான அம்சமும் அதேவேளை பலமான அம்சமாக இருப்பது, இப் படம் நேர்கோட்டுப் படம் சொல்லலாக, ஒற்றைப் பரிமாணக் கதை சொல்லலாக இல்லை.

பலத்துக்கான காரணம்: அரசியலில் ஈடுபடும் மனிதர்களிடையிலான உறவுகளை, அரசியல் தவிர்ந்த மனித உறவுகளின் வீழ்ச்சியாக _ மனிதாபிமானமற்ற சூழலுக்குள் இருத்துபவையாக அதிகாரம் இருக்கிறதென்பதைத், சூழலையும் மீறி மனிதனுக்குள் தங்கியிருக்கும் மனித நேசத்தை இப்படம் சொல்ல முனைந்திருக்கிறது.

பலவீனத்துக்கான காரணம்: ஒரு தேசத்தின் கோடானு கோடி மக்களின் வாழ்வைப் பாதித்தவையாக; ஒடுக்கியவையாக; பிராந்திய அரசியல்; தேசிய அரசியலை பாதித்தவையாக இருப்பது.

கலாச்சாரம் / அரசியல் / பெண்கள் பிரச்சினைகளை கொச்சையாக அணுகியவை, அரசியலை கவர்ச்சி அரசியலாக, சினிமாவுக்கும், வாழ்வுக்கும் இடையிலான உறவை, மக்களை மயக்கும் 'போதையாக ஆக்கியவை போன்றவற்றுக்காக.

கடுமையாக விமர்சிக்கப்பட வேண்டிய அரசியல், அதன் தீவிரத் தன்மையில் பேசப்பட வேண்டிய அரசியல் இங்கு பேசப்படவில்லை.

படத்தில் இடம் பெறும் அரசியலில் இயங்கும் மனிதர்களாக இருப்பவர்கள், வசனகர்த்தாக்கள் / நடிகர்கள் / நடிகைகள் / அவர்களுக்குப் பின்னால் அலையும் அமைச்சர்கள் போன்றவர்கள்தான்.

திராவிட அரசியலில் மிகப் பெரும் கருத்தியல் சக்தியாக இன்று முக்கியத்துவம் பெற்று வரும் பெரியாரின் பாதிப்பு இப் படத்தில் கொஞ்சமும் இல்லை. படத்தில் இவர்களின் உறவு, அரசியல் அதிகாரம், லஞ்சஊழலில் அன்றாட வாழ்முறையாகிவிட்டவை போன்றவற்றை ஒரு சந்தர்ப்பத்தில்கூட பொதுமகனும் கேள்விக்குட்படுத்துவதாக காட்சிகளே இல்லை.

இப் படத்தில் மக்கள் இடம் பெறவே இல்லை. கும்பல், முக

(தொடர்ச்சி 18ம் பக்கம்)

யமுனா ராஜேந்திரன்

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

# காணி நிலம்

பள்ளப்பிலி ஓரமாக இருந்த சிறிய தோட்டங்களில் செழுமையாக நின்ற இறைப்பு வாழைகள் எங்கே?

இப்போ அந்தப் பெருவெளியில் அவை இல்லை! காட்டுப்புதர்களும், செடிகொடிகளும் வளர்ந்து படர்ந்துகிடந்தன. அவற்றிற்கு மத்தியில் தூரத்துக்கு ஒரு தென்னைமட்டும், காட்டுத் தீக்கு அகப்பட்டுத் தப்பியவைபோற் காணப்பட்டன.

இது என்ன கொடுமை!..எப்படி நடந்தது இது?... என்பதுபோல் சுந்தரம் தனக்குப் பக்கத்தில் அமைதியாக நின்றிருந்த கிழவரைப் பார்த்தார்.

"இதுதான் தம்பி எரிகுண்டு விழுந்த இடங்கள்!... படுபாவிகள்!... எங்கடை பிள்ளையளை மட்டுமே கொண்டாங்கள்!... எங்கடை தோட்டங்கள், வயல்கள், குடிமனைகள் எல்லாத்துக்குமல்லோ வேலுமெண்டு குண்டு போட்டு எரிச்சவங்கள்!" கிழவரின் குரலில் கசப்பும் கடுமையும் கரித்தன.

கண்ட காட்சி ஏற்படுத்திய அதிர்ச்சி நீங்கச் சுந்தரத்துக்குச் சில நிமிடங்கள் பிடித்தன. அதன் பின்னர்தான், அவருடைய கண்களுக்கு அந்தச் சுற்றாடல் சரியாகப் புலப்படத் தொடங்கியது. முன்னூறு ஏக்கருக்கும் அதிகமான அந்த விசாலமான வெளியில், புதர்களுக்கும் செடிகளுக்கும் மத்தியில், சிறு சிறு குடில்களும், கொட்டில்களும் தெரிந்தன. அவற்றில் மனிதர்கள் இருப்பதையும் அவர் கண்டார்.

சுந்தரத்தினால், தனது தந்தையின் தென்னந் தோட்டத்தையோ, அது இருந்த இடத்தையோ காண முடியவில்லை! முன்பு அச்சறுக்கையாக இருந்த வேலிகளை இப்போது காணவில்லை! அறிமுகமான அடையாளங்கள் யாவுமே அழிந்து இல்லாமற் போயிருந்த அந்த வெளியில், எல்லா இடமும் குறிப்பிடக்கூடிய வேறுபாடுகள் இன்றி ஒரே மாதிரியாகக் காட்சியளித்தன.

சுந்தரம் கிழவரை நோக்கித் திரும்பி, "உங்களுக்கும் கொத்தியாம்பத்திலை அஞ்சேக்கர் தென்னந்தோட்டம் இருக்குதெண்டு சொன்னியள்?... எங்கே அது?" எனக் குழப்பம் மிக்கவராய்க் கேட்டார்.

கிழவர் ஒரு மெல்லிய சிரிப்புடன் சொன்னார்," அது உந்த வெளியிலைதான் இருக்குது!.. ஆனால் எங்கை எண்டு குறிப்பாய்க் காட்டேலாது!.. அக்கம் பக்கத்துக்காணி அடையாளங்கள் இருந்தால்தானே இதுதான் எங்கடை காணியெண்டு சொல்லலாம்! இப்ப உள்ள அடையாளம் எங்கடை சுறுக்கேணிமுறிப்புக் குளமும், இந்த குமுளமுனைப் பாதைபோல சில இடங்கள்தான்.!"

"அப்ப எங்கடை காணி?!" அவசரமாகவும், சற்று ஆத்திரமாகவும் கேட்டார் சுந்தரம்.

சுந்தரத்துடைய பதட்டமான மனநிலையைப் புரிந்து கொண்டவராய், அவருடைய தோளை ஆதரவாகப் பற்றிய கிழவர் அமைதியாகச் சொன்னார்.

"தம்பி!.. உங்கடை காணியும், என்ரை காணியும் இந்தப் பெரிய நிலப்பரப்பிலை எங்கயோதான் இருக்குது!... ஆனால் அந்தக் காணியள் இதுதான் அப்பாவும் நானும் காடாய்க் கிடந்த நிலத்தை கஷ்டப்பட்டுக் காணியாக்கினம்... உண்மைதான்!... அதுக்குமுந்தி இந்தக் காணியெல்லாம் ஆருக்குச் சொந்தம்?... அரசாங்கத்துக்கோ?... அப்பிடியெண்டால் இந்த அரசாங்கங்கள் வரமுன்னம் அது ஆருக்குச் சொந்தம்?... அது எனக்கும் சொந்தமில்லை!.. உங்களுக்கும் சொந்தமில்லை! என்று சொல்லி, அர்த்தம் பொதிந்த சில வினாடிகள் தாமதித்தார் கிழவர்.

கிழவர் கூறியதைக் கேட்ட சுந்தரம் சட்டெனத் திரும்பி, அந்த நிலப்பரப்பில் ஆங்காங்கு தெரிந்த குடில்களையும், கொட்டில்களையும் பார்த்துவிட்டு, "இப்ப இந்த இடத்திலை கொட்டில் போட்டுக் கொண்டு இருக்கிற ஆக்கள் ஆர்?" எனக் கேட்டார்.

"இந்தச் சனங்களெல்லாம், ஏதோ ஒரு இடத்திலை தங்கடை தங்கடை பரம்பரைக் காணிபூமியிலை, காலங்காலமாய்ச் சீவிச்சுக் கொண்டிருந்த ஆக்கள்தான்! அதுகளின்ரை வீடுவாசல்களைக் கொளுத்தி, பொருள்பண்டத்தைக் கொள்ளையடிச்சு, குடும்பங்களையும் சிதற அடிச்சுப் போட்டாங்கள் சிங்களவர்!.. இதுகளெல்லாம் திரியாய், திருகோணமலைப் பக்கத்திலை சீருஞ்சிறப்புமாய் சீவிச்சினம்!.. மாத்திக்கட்ட கையிலை ஒரு துணியில்லாமல் வந்த சனங்களும் இதுக்கை இருக்குதுகள்!.. இதுகளுக்குத்தான் கொட்டில் போட்டுக் குடியிருக்க உதவி செய்திருக்குதுகள் பிள்ளையள்!" என நிதானமாய்க் கூறினார் கிழவர்.

"அப்பிடியெண்டால், இனி இந்தக் காணியள் எல்லாம் இந்தச் சனத்துக்கோ சொந்தம்?" ஒரு உண்மையை உணர்ந்தவர் போலக் கேட்டார் சுந்தரம்.

அதைக் கேட்ட கிழவருடைய முகத்தில் மீண்டும் அந்த மென்சிரிப்புத் தலைகாட்டியது. "இல்லைத் தம்பி!.. இந்தக் காணிநிலம் இந்த இடம் பெயர்ந்த சனத்துக்குச் சொந்தமில்லை!"

"அப்பிடியெண்டால்... அது ஆருக்குச் சொந்தம்?" அவசரமாகக் கேட்டார் சுந்தரம்.

"இது உங்களுக்குச் சொந்தமில்ல!.. எனக்கும் சொந்தமில்ல!.. இந்தச் சனங்களுக்கும் சொந்தமில்ல!.. இது இப்ப எங்கள் எல்லாருக்கும் சொந்தம்!"

கிழவர் கூறியதன் அர்த்தம் சுந்தரத்திற்கு முழுமையாகப் புரிவதற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. அவருடைய முகத்தில் பரவிய ஒரு ஒளி அவரது மனத்தின் தெளிவைப் பிரதிபலிப்பது போலிருந்தது.

அன்று மத்தியானம், ஓமந்தைக்குச் செல்லும் மினிவானில் சுந்தரத்தை ஏற்றி வழியனுப்பிவிட்டு நின்ற கிழவரின் கையில் சுந்தரம் கொடுத்த ஒரு இலட்ச ரூபாவுக்கான காசோலை இருந்தது.

"இதை எங்கடை பிள்ளையளிட்டைக் குடுங்கோ! எங்கடை காணிக்கை இருக்கிற ஆக்களின்ரை தேவைக்குப் பாவிக்கச் சொல்லுங்கோ!.. அடுத்தமுறை வரேக்கை என்ரை பிள்ளையளையும் கூட்டிக் கொண்டு வருவன்!"

எனச் சுந்தரம் உணர்ச்சி மேலிடக் கூறியதை நினைத்தார் கிழவர்.

அடுத்தமுறை சுந்தரம் வரும்போது தான் இருக்க மாட்டேன் என்பது அவருக்குப் புரிந்தது.

'நான் இருக்க மாட்டன்தான்!.. ஆனால் எங்கடை காணிநிலம் இருக்கும்!.. எங்கடை பிள்ளையளும் இருக்குங்கள்!' எனத் தனக்குள் சொல்லிக்கொண்டே பிள்ளைகளின் அலுவலகம் இருக்கும் வீட்டை நோக்கி உற்சாகமாக நடந்தார் கிழவர்.

(முற்றும்)

(17-ம் பக்கத் தொடர்ச்சி)

# இருவர்

மற்ற கும்பலே படம் முழுக்க வருகிறது. தமிழகத்தின் முப்ப தாண்டுகால அரசியலும் இத் தக் கும்பல் அரசியலாகத்தான் இருக்கிறது.

இந்தக் கும்பல் அரசியலை உருவாக்கியதில், தனி மனிதர்க



ளின் பங்கேற்பற்ற, விமர்சனங்க ளற்ற; விழிப்புணர்வற்ற கும்பல் அரசியலை உருவாக்கியதில் இவ் இருவரின் பங்கும், அது மக் களின் வாழ்நிலையில், கலாச் [illegible] பாதிப் பு[illegible]ங்களும் இப் படத்தில் இல்லை.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

இப்படி நேர்ந்துவிட்டதற் கான காரணமும் திரைக்கதை யில்தான் இருக்கிறது.

படத்தின் கடைசிக் காட்சிக ளில் இருவருக்கும் இடையிலான உறவு அநியாயத்துக்கு Romanticise பண்ணப் பட்டிருக்கிறது. அநேகமாக எம்.ஜி.ஆர் ரசிகர்க ளும், கருணாநிதி கட்சியைச் சேர்நதவர்களும் இக் காட்சிக ளில் தேம்பிததேம்பி அழுவார் கள் என கட்டாயமாக நம்ப லாம். ஒரு வகையில் தமிழக திராவிட அரசியல்காரர்களின் கோபத்தை மணிரத்தினத்தின் இப்படம் சமப்படுத்திவிடும். அரசியலில் ஈடுபட்ட சினிமாக் காரர்களுக்கு ஒரு ஆத்ம சந் தோஷத்தை இப்படம் தரும்.

இறுதியான பார்வையில், இப்படம் அரசியலும்; அரசி யல் அதிகாரமும், அவற்றிடை யில் வாழ நேர்ந்த மனிதர்க ளின்; தனி நபர்களின் உறவு பற்றியவையும் என்பதை எந்தப் பார்வையாளனும் உணரமுடி யும்.

தனிமனித உணர்வுகளை, உறவுகளை, அதன்பின் இருக் கும் காரணங்களை புரிந்து கொள்ளும்படி இப் படம் கோரு கிறது. அவ்வகையில் தமிழ்ச் சினிமாவில் இப்படம் மிகுந்த முக்கியத்துவம் உடையது.

படத்தின் கதை சொல்வல், காட்சிகள், காலத்தை மீளச் செய்தல், பிரபலமான மனப்ப திவுகள் சரியாகப் பயன்படுத்து வது, மொழிவளத்தை திராவிட அரசியலின் சரியான வெளிப் பாட்டு முறையாக வலியுறுத்து வது, காலத்தை மீட்டும் புத்தி பூர்வமான இசை போன்றன மிகுந்த சிரத்தையுடன் மேற் கொள்ளப்படுகிறது.

கல்பனா X ஆனந்தத்திற்கு இடையிலான மனத்தளவி லான, தூரத்தைக் காட்டும் காட்சி ஆயிரத்தில் நாளொரு வன் பாடல் காட்சி. (இக் காட்சி பற்றி விவாதித்த என் நண்பர் சுஜேந்திரனுக்கு நன்றி) கல்பனா பாலைவனத்தில் வர ண்ட மணலில் ஆட, ஆனந்தம் செழிப்பான பனி வெளியில் பாட முற்றிலும் விலகிய நிலை யிலான Editing.

ரகுமானின் பாடல்கள் சிரு ஷ்டி பூர்வமானவை. பழைய டியூன்கள், பழைய வார்த்தை கள் (நறுமுகையே, செம்புல பெயல் நீர் போல் பாடலின் மறு ஆக்கம்) கறுப்பு வெள் ளைப் பின்னணி காலத்தை அழகாக சிருஷ்டிக்கிறது. வைர முத்துவின் கவிதைகள் திரா விட இயக்கத்தின் மயக்கும் சொற்கட்டுகள்.

சில மனித செயல்கள், மோன ரிஸம்; எம்.ஜி.ஆர். மெதுவாக இருமுவது வாயைப் பொத்திக் கொள்வது, சரோஜாதேவியின் நடை போன்றன சரியாகப் பாவிக்கப்படுகின்றன. அன்பே வா பாடல், வேட்டைக்காரன் பாடல், மலைக்கள்ளன் உடை கள், போலீஸ் தொப்பி காட்சி



கள், ஆற்றில் படுத்து நீராடுதல், மகளுக்குத் தமிழ் கற்பிக்கும் வசனகர்த்தா முதல்வர்.

படத்தின் மிகப் பெரிய பலம், இறந்த அல்லது வாழும் மனிதர்களை, அவர்களது உற வுகளை மிக நாகரிகமாக அணு கியிருப்பது. பெண்களின் உறவு களை மிகமிக நாகரிகமாக அணு கியிருப்பது இந்த நாகரிகம் அவர்களது அரசியல் பற்றிய விமர்சகர்களாக ஆகும்போது கறாராகவே படைப்பு நாகரிகத் துடன் சொல்லப்பட்டிருக்கி றது.

நடனக் காட்சிகளில் தமிழ் சினிமா அசிங்கம் முற்றிலும் தவிர்க்கப்பட்டிருக்கிறது. மிக மெலிதான உணர்ச்சிகளைக் காண்பிக்க நீலநிறம் அதிகமா கக் கையாளப்படுகிறது. இறுதிக் காட்சியின் மிக நீண்ட டேக் தவிர மற்றபடி காட்சிகளும்; நடி கர்களும் உணர்ந்து செயல்பட் டிருக்கிறார்கள் / செயல்பட்டி ருக்கிறது.

இப் படத்தில் சொல்லப்ப டாத; ஆனால் இவர்களால் பாதிப்புற்ற கோடானுகோடி தனிமனிதர்களின் அனுபவங்க ளும் உறவுச் சிக்கல்களும், இவர் களால் சிதறுண்ட வாழ்வு கொண்ட மனிதர்களின் வீழ்ச் சியும் இன்னொரு பக்கத்தில் உண்டு.

வரலாறு மாபெரும் மனி தர்களின் தனிநபர் உறவுக ளைப் பரிவுடன் பார்ப்பதால், புரிந்து கொள்வதால் மட்டும் உருவாவதில்லை; கோடான கோடி தனிமனிதர்களின் வீழ்ச் சியுண்ட தனிமனித உறவுகளை பரிவுடன் பார்ப்பதால்தான் உருவாகிறது.

இருவர் படம் அரசியலின் பெயரில் கொச்சைப்படுத்தப்ப டும் இரண்டு மாபெரும் மனி தர்களின் தனிமனித உறவு களை / சிக்கல்களை / நேசத் தைப் புரிந்து கொள்ளத் தூண் டும் படம். அச் செய்தி படத் தில் தெளிவாக அழுத்தமாக இருக்கிறது. அதிகாரத்திலுள் ளும் ஜீவனும் இருக்கும் கொஞ்ச நஞ்ச மனிதத்தைச் சொல்லும் படம் எனும் அளவில் இப் படம் முக்கியமானது.

அதேவேளை இவ்விரு மனி தர்கள் அதிகாரத்தின் பெயரில் சமூக வாழ்க்கைக்கும், தனி மனிதர்களின் வாழ்க்கைக்கும் ஏற்படுத்திய பாதிப்பை, கல் பனா போன்றவர்கள் உயிர்த்து வந்து ஆடிய உரையாடல்களை நிகழ்கால மனிதர்கள் தங்களுக் குள் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு சிந்திப்பதற்கான பிரதேசத்தை, கருத்தாடலை மணிரத்தினத்தின் இருவர் படம் தனது பிரதான அக்கறைக்குள் கொண்டிருக்கவில்லை. இவ் வாறு விடப்பட்ட வெற்றிட மொன்றை மணிரத்தினம் நமக் குத் திறந்து விட்டிருக்கிறார் என்பதே இப்படத்தின் முக்கி யத்துவம்.

இப்படம் நட்புக்கான பாட லேயல்லாது, பேரழிவு பற்றிய துயருறுதலோ விமர்சனமோ அல்ல. ஆனால் இது வழக்க மான தமிழ் சினிமா மரபைச் சார்ந்த படமல்ல என்பதே இப் படத்தின் தகுதிக்குச் சான்றாகி றது.

# பாட்டு வருகுது... பாட்டு வருகுது... சீடியில பாட்டு வருகுது கேக்கிறதுக்கு சகிக்காதவை ஓடுங்கோ...... தூர ஓடுங்கோ!

த..த..ரின்னா..த..த..ரின்னா த..த..ரி..ரி..ரி!

.. சாய்.. என்ன இந்த இழவை சரிவரமாட்டேங்குது. நல்ல கொட்டுத் தேனைக் குடிச்செண்டாலும் ஒரு மாதிரி குரலை சரியாக்கிப் போட்டனெண்டால் பாட்டுப் பாடியாவது நாலுகாசு உழைச்சுக் கொள்ளலாம். அததோடை நல்ல மதிப்பு மரியாதை.. சும்மீடு எல்லாம் கிடைக்குமெல்லே! ஆனா அதாலை ஏதேனும் வில்லங்கம் வருமோ எண்டுதான் கொஞ்சம் யோசிக்க வேண்டியிருக்குக் கண்டியளோ!

இப்ப.. சினிமாப் பாட்டுக் கச்சேரியள் பாக்கப்போனா வில்லங்கங்களும் தேடிவரப் பாக்குதெல்லே. அதுதான் சும்மா சொல்லி வச்சனான்.

ஒரு கவனம் சோத்துக்கு.. எங்கட சொந்தச் சனம் மாரடிச்சு மாய்ஞ்சாலும் நாங்கள் இஞ்சை எங்கடை ஆவை தேவையளை ஒரு எப்பனும் விட்டுக்குடுக்கமாட்டம் கண்டியளோ! சினிமாப் பாட்டுக்கச்சேரி, டிசுக்கோ கூத்துக்கச்சேரி எண்டு நிகழ்ச்சியளுக்கெல்லாம் அடிச்சுப்பிரண்டு ஆறர் செய்து எங்கடை 'கலைப்பக்தியை' வெளிக்காட்டுறம். ஆனால் நாட்டிலுள்ள சனத்தின்ரை பசி, பட்டினியை நீக்கிறத்துக்கு காசு சேர்க்க ஒரு நிகழச்சியை நடத்தினா மட்டும் "உது புலியளின்ரை நிகழ்ச்சி" எண்டு சொல்லி எங்கட காலுகள் கொஞ்சம் பின்னடிக்கவும் பாக்குதெல்லே, அடிக்கடி..!

வீடியோவிலை படம் பாக்கேக்க அதிலை வாற பாட்டுக்களை துரத்திப்போட்டு வெறும் கதை வசனத்தைக் கேட்டு புளகாங்கிதம் அடையிற சனம், மேடையிலை அந்த பாட்டுகளைக் கேக்க இவ்வளவு ஆவலாயிருக்கிறது ஏனெண்ட விசயம் இன்னும் என்ரை மரமண்டைக்கு விளங்குதில்லை. ஆராவது கொஞ்சம் விளங்க வைச்சியளெண்டா அவையளுக்கு நான் மெத்தப் பெரிய உபகாரமாயிருப்பன் கண்டியளோ!

என்ரை கூட்டாளி ஒருத்தன் சொன்னான், "சங்கீதம் என்டுறது ஒரு மனிசனுக்கு ஆத்மார்த்த சுகம் குடுக்கிறது. அதிலை சனங்கள் இலயிக்க விரும்புறது நோமல், உன்னைப் போலை அறளை பேந்ததுகளுக்கு இது எங்கை விளங்கப்போகுதெண்டு" கொஞ்சம் சூடாகவே பேசிப்போட்டான்.

நான் இல்லையெண்டேல்லை... எங்கடை காலத்திலை ஏணையுக்கை பிள்ளையைப் போட்டு தாலாட்டுறதிலையிருந்து, செத்தாப்பிறகும் பிரேதத்துக்கு ஒப்பாரி சொல்லி அழுகிறது

## ஆருக்குச் சொல்லி அழ?

வரையும் இசையுணர்வு வாழ்க்கையோடை கலந்திருந்தது. சங்கீத வித்வான்கள் எண்டா என்னெண்டு தெரியாத கறுட்டுக்கார பரமுவும், மேசன் வேலை செய்யிற பொன்னுவையும் திருவிழாக்களிலை நடக்கிற 'மேளச் சமா'

வீடியோவிலை படம் பாக்கேக்க அதிலை வாற பாட்டுக்களை துரத்திப்போட்டு வெறும் கதை வசனத்தைக் கேட்டு புளகாங்கிதம் அடையிற சனம், மேடையிலை அந்த பாட்டுகளைக் கேக்க இவ்வளவு ஆவலாயிருக்கிறது ஏனெண்ட விசயம் இன்னும் என்ரை மரமண்டைக்கு விளங்குதில்லை, ஆராவது கொஞ்சம் விளங்க வைச்சியளெண்டா அவையளுக்கு நான் மெத்தப் பெரிய உபகாரமாயிருப்பன் கண்டியளோ!

மணித்தியாலக்கணக்கா அசையாமை வைச்சிருக்கெண்டா அதுக்கு காரணம் அந்த இசை [illegible] சுகம் எண்டதாம் உண்[illegible]!

ஆனா... பேந்து பெடியளின்ரை போராட்டம் தொடங்கினாப்பிறகு சமூகத்துக்கு மிச்சம் அவசியமான தெருக்கூத்துகளும்.. விடுதலை ஒழிப்பு நாடகமும்.. போராட்டம் சம்பந்தமான கலை வடிவங்களும் சனத்தை சிந்திக்க வைச்சுது. இதுகளைப் போலை தானுங்கோ ஒரு முறையான கலை வடிவம் இருக்க வேணும் எண்டுறது என்னுடைய தாழ்மையான ஆசை பாருங்கோ...

என்னடா இண்டைக்கு உளர்த்துழாவாரங்கள் ஒண்டும் பறையாமலுக்கு இந்தான் ஏதேதோ புசத்துது எண்டு நீங்கள் புறுபுறுக்கிறியள் போலை... சரி... சரி.. விசயத்துக்கு வாறனே.

இந்த நாடுகளிலை... சிலர் கலையளைப் பரப்புறம் எண்டு சொல்லிப்போட்டுப் பாருங்கோ சமூகத்திலை களையளை நடுகிற வேலையவெள அவைக்குத் தெரிஞ்சோ..? இல்ல.. தெரியாத மாதிரி நடிச்சுக்கொண்டோ.. கனகச்சிதமாக செய்து கொண்டிருக்கினம்.

போன கிழமை ஒரு வீட்டை போனன். அந்த வீட்டையிருந்த கடுக்கண்டு விட்ட பெடியன் றேடியோப்பெட்டிக்கு முன்னாலை நிண்டு 'வாளை மீன் பொரியல்' கேட்டு காத்தார் உரு வந்து ஆடுறது போலை கையைக் காலை வெட்டி, இழுத்து ஆடிக்கொண்டிருந்தான். என்ன விசயம் பொடி.. உந்த வெட்டு வெட்டுறான் எண்டு மெல்லக் காதைக் கூராக்கினா, அந்த றேடியோவிலை ஏதோ காட்டுக் [illegible]தல் மாதிரி போய்க்கொண்டிருந்திச்சு.. இன்னும் கொஞ்சம் உத்துக் கேட்டன், தமிழிலைதான் ஒரு பாட்டு (???) போய்க்கொண்டிருந்திச்சு... உன்னாணை இந்த நைன்ரியாலை நம்பவே முடியேல்லை.

அட.. பெடியனை இந்த உலுப்பு உலுப்புற மகா சங்கீதக் கடலிலை நானும் கொஞ்சம் நீராடி எழும்புவம் எண்டு சொல்லிக் காதைக் குடுத்தா, சில பாட்டுக்களிலை வக்கிரமும், விரசமும் அப்பிடியே இழையோடிக் கிடந்திச்சு. மெல்லவா இடத்தைவிட்டுக் கழண்டிட்டன். உங்களுக்கும் அந்த வசனங்களைச் சொல்லலாம் தான்....! என்னத்துக்கு அதுகளை.. விட்டிடுங்கோ. அவ்வையின்ர தமிழை ஐரோப்பா எங்கும் பரப்ப வாறம் எண்டு சொல்லிக் கொண்டு.. அதை கூறுபோட்டு சீரழிக்கிறது அவ்வளவு நல்லதில்லையுங்கோ.

உண்மையிலை எங்களுக்குத் திறமையிருக்கெண்டு நினைச்சா(!) அதை இங்கையிருக்கிற நல்ல தலைமைத்துவங்களோடை இணைஞ்சு வெளிக்காட்டினா நாட்டுக்கும்..... எங்கட இன சனத்துக்கும் நல்லது. அதை விட்டுட்டு நட்டாமுட்டித் தனமா நாங்கள் தான் பெரிசு எங்களை விட்டா கெம்பாப்பிள்ளை இல்லை எண்ட வணர்விலை நடந்தா இந்த நாடுகளிலை கலை எண்ட பெயரிலை இருக்கிற சீரழிவுகளுக்குள்ள சிக்கி நாங்களும் எங்கட தலைமுறையளும் மண்ணாப் போக வேண்டியதாத்தான் வரும்.

உண்ணாணை உந்தப் பெடியளிலை எனக்கொண்டும் கோவமில்லை. அருமையான வயது. எத்தினையோ சாதனையளை செய்து முன்மாதிரியா நடக்க வேண்டிய பருவம். சந்தியளிலை நிண்டு சுதிபண்ண இப்ப சோக்காய்த்தான் கிடக்கும். ஆனா காலம் கடந்தாப் பிறகு ஐயோ... எங்கடை காலத்தை இஞ்சு சதத்துக்கும் பிரயோசனமில்லாமலுக்கு சிலவழிச்சுப் போட்டமே.. எண்டு கவலைப்படக்கூடாதெண்டதுக்காகச் சொல்லி வைக்கிறன். ஏனெண்டால்.... முன்னம் கனபேர் நான் மேல சொன்ன மாதிரி இருந்து.... இப்ப கொஞ்சம் கொஞ்சமாய்.... திருந்திக் கொண்டிருக்கினம் கண்டியளோ!

'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படுவான்' எண்ட வள்ளுவன் வாக்குக்கேத்தபடி வாழாட்டிலும் பறவாயில்லை..... கலையளைப் பரப்புறம் எண்டு சொல்லி நாலு சனத்துக்கு அரியண்டம் தராமலுக்கு உவையள் நடந்தாலே கோடி புண்ணியம் கிடைக்கும் பாருங்கோ!

"என்ன......? உவர் அருமைத்தம்பியரும் ஏதாவது சீடியிலை எங்கட வள்ளுவரைப் பற்றி பாட்டடிச்சு விடலாம்தானே....? நாங்கள் என்ன வேண்டாம் எண்டனாங்களே....?" எண்டு கேக்கிறியளே?

ஐயோ சாமீ.. பிச்சை வேண்டாம் நாயைப் பிடியுங்கோ! நான் போறன்.

**அருமைத்தம்பி**

மேற்கு இலண்டன் மாநகரில்
துவாரகா
Cash & Carry
இல்லை என்பது இங்கில்லை
N°: 199, The BROADWAY, Southall, Middx.
T.P: 0181 / 813 9126
(ADV)

லண்டன் மாநகரில்
ஶ்ரீ லட்சுமி என்ரபிறைசஸ்
கன்னியர் முதல் சிறுவர் வரை
முதல் தர புடவை மாளிகை
SREE LAKSHMI ENTERPRISES
IMPORTER & EXPORTER, WHOLESALER & RETAILER
Large Collection of Wedding Sarees, Silk Sarees & Barathanatya Costumes
50 THE BROADWAY, SOUTHALL, MIDDLESEX, UBI 1QB
TEL: 0181-843 9495 / 01831-662 824
· FAX: 0181-606 9709
(ADV)

இலண்டனில் நகைத் தெரிவுகளுக்கு...
ராஜூ பட்னி அன் சன்
PATTNI HOUSE
58-60 EALING ROAD WEMBLEY, MIDDX HAO 4TQ
TEL: 0181-903 6677 / 2859, 0181-902 0577
FAX: 0181- 903 4887
(ADV)

## உலகச் செய்திகள்



# மெல்லெனக் கலையும் ஆதிக்கம் ஹொங்கொங்கின் தலைவராக றீற்ரா தெரிவு

150 வருட காலமாக பிரித்தானிய காலனி ஆதிக்கத்துக்குள்ளாகி இருந்த ஹொங்கொங் சீனாவிற்கு சென்றடையும் நடவடிக்கைகளின் இன்னுமொரு முக்கிய அம்சமாக தற்காலிக பாராளுமன்றத்தின் தலைவர் தெரிவு கடந்த வாரம் நடைபெற்றுள்ளது.

காபந்து அரசின் தலைவராக திருமதி றீட்டா பா(f)ன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது தெரிவை அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் சீனாவில் இயங்கும் ஜனநாயக இயக்கங்கள் கண்டித்துள்ளன. ஜூலை 1-ம் திகதி சீனாவின் ஆட்சிக்குள் ஹொங்கொங் வந்த பின் அங்கு காலனி ஆதிக்க காலத்தில் இருந்த சில வசதிகள் இல்லாமல் போகலாம் அல்லது பாதிக்கப்படலாம் என்பதே இவர்களின் அச்சம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது ஒரு புறமிருக்க பிரித்தானியாவைத் தவிர ஐரோப்பிய சமூகத்தைச் சேர்ந்த எந்த நாடும் ஹொங்கொங்கில் கொண்டு வரப்படவுள்ள குடியுரிமைச் சட்டதிருத்தங்களை (Civil law) கண்டிக்கவில்லை. சீனாவிடம் ஹொங்கொங் கையளிக்கப்படுவது அமைதியாக நடைபெற வேண்டும் என்ற தங்கள் விருப்பத்தை ஐரோப்பிய சமூகம் தெரிவித்துள்ளது. 150 ஆண்டுகளுக்கு முன் சீனாவிடம் ஆலோசிக்காமல் பிரித்தானியா கொண்டு வந்த குடியுரிமைச் சட்டங்களில் மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் உண்டெனவும் அதற்கு பிரித்தானியாவிடம் ஆலோசனை பெறவேண்டிய அவசியம் இல்லை எனவும் சீனா தெரிவித்துள்ளது.

தாய்வானில் அமெரிக்கா செலுத்தும் செல்வாக்கு சீனாவுக்கு தலையிடியாக இருப்பது போல், ஹொங்கொங்கும் சீனாவுக்கு தலையிடி தரும் ஒரு பிரதேசமாக மாறலாம் என்ற அச்சம், சீன இராஜ தந்திரிகள் மத்தியில் உருவாகக் கூடிய கருத்துக்கள் தற்போது வெளியாகி வருகின்றன.



# அமெரிக்க பொருளாதாரத்தில் பெரு வளர்ச்சி ஏற்றுமதிச் சந்தையில் அமோக முன்னேற்றம்

அமெரிக்க டொலரின் பெறுமதி கடந்த வாரம் உயர்ந்துள்ளது. அமெரிக்க பொருளாதாரத்தில் காணப்பட்ட பெரு முன்னேற்றமே இதற்குக் காரணம் என பொருளியலாளர்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்கா பொருளாதார வளர்ச்சியில் ஏற்றுமதிச் சந்தை பெரும் பங்கு வகிக்கின்றமையும் கம்யூனிச ஆட்சிக்குள் இருந்த நாடுகள் உடைக்கப்பட்டமையும் அங்கு முதலாளித்துவ சந்தை விஸ்தரிப்பும் இந்த அமோக வளர்ச்சிக்குக் காரணம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்றுமதிச் சந்தை வளர்ச்சியால் அமெரிக்காவில் வேலை இல்லாதோர் தொகை குறைந்து வருவதாகவும் விரைவில் வேலை இல்லாதோரே இல்லை என்ற நிலை உருவாகக் கூடிய அளவு வேகத்தில் தற்போதைய அமெரிக்க பொருளாதார வளர்ச்சிப் போக்குக் காணப்படுவதாகவும் கடந்த வாரம் வெளியாகிய பொருளாதாரப் புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன. இது குறித்து பல சர்வதேச நாடுகள் தமது ஆர்வத்தைக் காட்டியுள்ளதுடன், இந்த ஏற்றுமதி வியாபார வளர்சித் திட்டங்களை உற்று அவதானிக்கவும் ஆரம்பித்துள்ளன.







# தென்கொரியாவை ஸ்தம்பிதமடையச் செய்வோம் - தொழிற் சங்கத் தலைவர்

தென்கொரியாவை ஸ்தம்பிதமடையச் செய்வோம் என தென் கொரிய தொழிற்சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார். தடைசெய்யப்பட்ட இத் தொழிற் சங்கத் தலைவர் கடந்த வாரம் வரை கத்தோலிக்க தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்திருந்தார். கடந்த வாரம் இத் தொழிற்சங்கம் ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்டத்தில் 2 இலட்சம் போர் பங்கு பற்றினர். இவ் ஆர்ப்பாட்டம் பொலிசாரின் குண்டாந் தடிப் பிரயோகத்துடன் முடிவடைந்தது. பெப்ரவரி 18-ம் திகதி மீண்டும் ஒரு பாரிய வேலை நிறுத்தம் செய்ய திட்டமிட்டுள்ளதாக தெரிவித்த அவர், தென் கொரியாவை நிலை குலையச் செய்யுமளவுக்கு பாரிய வேலை நிறுத்தம் ஒன்றை திட்டமிடுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.



லைபீரிய தீவிரவாதிகள் ஆயுதங்களை ஒப்படைக்க ஆரம்பித்துள்ளனர்

# பாகிஸ்தானில் பாராளுமன்றத் தேர்தல் நவாஸ் செரிப்பின் கட்சி முன்னணியில்

கடந்த 03.02.97 திங்களன்று நடைபெற்ற பாகிஸ்தானிய பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் நவாஸ் செரிப் தலைமையிலான பாகிஸ்தானிய இஸ்லாமியக் கட்சி (Pakistan Muslim League) முன்னணியில் நிற்பதாக கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன. இரண்டாவது இடத்தில் கடந்த நவம்பர் 5 ஆம் திகதி தனது கட்சியைச் சேர்ந்த ஜனாதிபதியால் ஊழல் குற்றம் சாட்டப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவின் கட்சியான பாகிஸ்தானிய மக்கள் கட்சி இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. மூன்றாவதாக பிரித்தானிய செல்வந்தர் ஒருவரின் மகளைத் திருமணம் செய்த கிரிக்கெட் வீரர் இம்ரான் கானின் நீதிக் கட்சி (Justice Movement) இருப்பதாக அக் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

217 ஆசனங்களைக் கொண்ட பாகிஸ்தானிய பாராளுமன்றத்தில் ஒன்பது தொகுதிகளில் இம்ரான் கானின் கட்சி போட்டியிடுகின்றது.

தொல்லை மேல் தொலை காணும் பூட்டோ குடும்பம்

1977-ஆம் ஆண்டு ஜெனரல் ஜியாவுல் ஹக்கினால் சுல்பிகார் அலி பூட்டோ கவிழ்க்கப்பட்டதில் இருந்து தொல்லை மேல் தொல்லைகளைச் சந்தித்து வரும் பூட்டோ குடும்பத்தைச் சேர்ந்த இருவர் இத் தேர்தலில் போட்டியிடுகின்றனர். கடந்த செப்டம்பரில் பெனாசிர் பூட்டோவின் சகோதரர் Murtaza மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. பெனாசிர் பூட்டோவின் மற்றுமொரு சகோதரரான Shahnawas பிரான்சில் மர்மமான முறையில் 1985 ஆம் ஆண்டு கொல்லப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. பிரித்தானிய காலனியாதிக்கம் இந்தியாவில் இருந்து செல்லும்போது 1947-ம் ஆண்டு உருவாகிய பாகிஸ்தான் இன்னும் அரசியல் பொருளாதார நிலையில் ஸ்திரமடையாத ஒரு நாடாக இருந்து வருகின்றது.

## பாகிஸ்தான் சில குறிப்புக்கள்

**ஜூலை 1977:** ஜெனரல் ஜியாவுல் ஹக்கினால் சுல்பிகார் அலி பூட்டோவின் ஆட்சி கவிழ்ப்பு. இராணுவ ஆட்சி அமுல்.

**மார்ச் 1978:** எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரை கொலை செய்த குற்றத்திற்காக சுல்பிகார் அலி பூட்டோவிற்கு மரண தண்டனை விதிப்பு.

**ஏப்பிரல் 1979:** சுல்பிகார் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார்.

**ஏப்பிரல் 1986:** பிரித்தானியாவில் அகதியாக வாழ்ந்த பெனாசிர் பூட்டோ நாடு திரும்பினார்.

**ஒகஸ்ட் 1988:** மர்மமான விமான விபத்தொன்றில் ஜெனரல் ஜியாவுல் ஹக்கும் அவரது பல இராணுவ ஜெனரல்களும் பலி.

**நவம்பர் 1988:** திருமதி. பெனாசர் பூட்டோ பிரதமராகத் தெரிவு.

**ஒகஸ்ட் 1990:** திருமதி. பெனாசிர் பூட்டோ ஜனாதிபதியால் பதவி நீக்கம். நவார் செரிப் பிரதமராக நியமனம்.

**ஒக்டோபர் 1993:** நவார் செரிப் பதவி நீக்கம். தேர்தலில் PPP கட்சி வெற்றி. பெனாசிர் பிரதமரானார்.

**செப்டம்பர் 1996:** பெனாசிரின் சகோதரர் Murtaza மர்மமான முறையில் பொலிசாரினால் சுட்டுக் கொலை.

**செப்டெம்பர் 1996:** ஆப்கானிஸ்தானிய தலிபன் இயக்கத்துக்கு பெனாசிர் அரசு உதவுவதாக சர்வதேசக் குற்றச்சாட்டு.

# துருக்கிக்கும் ஜேர்மனுக்கும் முரண்பாடு?

ஜேர்மனிய நீதிபதி ஒருவர் கடந்த வாரம் வழங்கிய தீர்ப்பொன்றில் துருக்கி நாட்டு அரசும் முன்னாள் பிரதமரும், தற்போதய வெளிநாட்டு அமைச்சரும், அவரது குடும்பத்தினரும் ஐரோப்பாவுக்கான போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தில் சம்பந்தப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

ஜேர்மன் நீதிபதியின் இக் கருத்தை வன்மையாகக் கண்டித்துள்ள துருக்கியின் பதவியில் உள்ள இஸ்லாமியக் கட்சியின் தலைமையிலான அரசு விடுத்துள்ள அறிக்கையில், அந் நீதிபதி தனது கருத்துக்காக மன்னிப்புக் கோரவேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு அச் செய்தி உண்மையாயின் ஆதாரங்களை வெளியிடுமாறும் கோரியுள்ளது. அரச மட்டங்களில் முரண்பாடுகளை உருவாக்க வல்ல இச் செய்தி குறித்து எந்த ஐரோப்பிய நாடும் இது வரை கருத்தெதையும் வெளியிடவில்லை.

# சைன்ரோலஜி மதக்குழுவுக்காக அமெரிக்கா குரல் கொடுத்தது

பிரான்சிலும், ஜேர்மனியிலும் கண்டனத்துக்குள்ளாகி வரும் சர்வதேச மதக் குழுவான சைன்ரோலஜி மதக் குழுவின் உரிமைகளுக்காக அமெரிக்க இராஜாங்க அமைச்சைச் சேர்ந்த நிக்கோலா பேர்ன்ஸ் என்ற அதிகாரி குரல் கொடுத்துள்ளார்.

பிரெஞ்சு அரசினாலும், ஜேர்மன் அரசினாலும் குறிப்பிடத்தக்க கண்டனத்துக்கும் நீதி விசாரணைகளுக்கும் உள்ளாகி வரும் சைன்ரோலஜி மதக் குழு, அமெரிக்கரான Lon Bon Hubbard இனால் 1950 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. சைன்ரோலஜி மதக் குழு சர்வதேச ரீதியில் பல இலட்சக்கணக்கான பக்த கோடிகளைக் கொண்ட அமைப்பாகும். பிரான்சில் இம் மதக் குழுவின் பக்த கோடியில் ஒருவர் "மனிதனை மனமாற்றம் செய்து மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக" நீதிமன்ற தண்டனைக்குள்ளானார் என்பது குறிப்பிடத்தக்கது.

## நெட்டன்யாகு அரசாங்கம் மீது ஊழல் குற்றச்சாட்டு

தீவிர யூத கட்சியைச் சேர்ந்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் நெருக்குதலுக்கு இணங்கி, இஸ்ரேலியப் பிரதமர் ஊழல் நடவடிக்கையில் இறங்கியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக் குற்றச் சாட்டுத் தொடர்பான விசாரணைக்காக பிரதமர் நெட்டன்யாகு நீதி மன்றத்திற்கு அழைக்கப்படுவார் என எதிர் பார்க்கப்படுகின்றது.

சட்டமா அதிபர் நியமனம் தொடர்பாக யூத தீவிரவாதக் கட்சி ஒன்றுடன் ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்ட பிரதமர் மேற்படி கட்சி விரும்பிய ஒருவரை சட்டமா அதிபராக நியமித்தார் எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# சவூதி அரேபியாவுக்கும் அமெரிக்காவுக்கும் முரண்பாடு

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கடந்த வருடம் ஜூன் 25-ம் திகதி சவூதி அரேபியாவில் உள்ள அமெரிக்க படைத்தளம் ஒன்றில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளில் அமெரிக்கத் தலையீடு இரு நாடுகளுக்குமிடையே முரண்பாட்டை வளர்த்துள்ளது.

விசாரணை தொடர்பான தகவல்களை முழுமையாக தம்மிடம் வழங்குமாறு அமெரிக்கா கேட்டதை சவூதி அரேபியா நிராகரித்ததாலேயே இந்த முரண்பாடு வளர்ந்துள்ளது. சவூதி அரேபியாவில் நிலை கொண்டுள்ள அமெரிக்கப் படைகள் சவூதிய அரசின் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

1990 ஆம் ஆண்டு வளகுடா யுத்தத்தின் போது சவூதியில் நிலை கொண்ட அமெரிக்க படைகள் ஈராக் மீது பாரிய தாக்குதல்களை நடாத்தின என்பது குறிப்பிடத்தக்கது.

# நேட்டோ அதிகார எல்லை விஸ்தரிப்பு தீவிரமடைகின்றது?

ரஷ்யாவுக்கும் மேற்குலகுக்கும் இடையே நேட்டோ அணியின் எல்லை விஸ்தரிப்பு தொடர்பாக விரிசல் அதிகரிக்க ஆரம்பித்துள்ளது. இது தொடர்பாக ரஷ்ய பிரதமர் விக்டர் செர்னோர்மிடின் விடுத்த அறிக்கையில் வார்சோ ஒப்பந்த நாடுகளில் சிலவற்றை நேட்டோ அணியுடன் இணைக்கும் முயறசிகள் எமது நாட்டுக்கு பலனளிக்கும் வகையும் இருக்காது எனக் குறிப்பிட்டுள்ளார். இது குறித்த பேச்சு வார்த்தைகளுக்காக நேட்டோ செயலாளர் நாயகம் ரஷ்யா செல்லவுள்ளார். இது ஒருபுறமிருக்க பிரெஞ்சு ஜனாதிபதிக்கும் ரஷ்ய ஜனாதிபதி பொறிஸ் ஜெல்சினுக்குமான சந்திப்பு ஒன்று கடந்த வாரம் நடைபெற்றுள்ளது. இச் சந்திப்பிலும் நேட்டோ விஸ்தரிப்பு தொடர்பாக பேசப்படுமா என்பது குறித்து செய்திகள் வெளியாகவில்லை.

இச் சந்திப்புக்கு முன்னோடியாக அமெரிக்க ஜனாதிபதியும் பிரெஞ்சு ஜனாதிபதியும் இரு மணி நேரமாக தொலைபேசி மூலம் பேச்சுக்களை நடாத்தியதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

## சீ.ஐ.ஏ நடவடிக்கைகளில் மனிதாபிமானம் சேர்க்கப்பட்டது!

சீ.ஐ.ஏ என்ற அமெரிக்க உளவு நிறுவனம் தமது எதிர்கால நடவடிக்கைகளில் "மனித உரிமைகளை மீறாத வகையில் தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும்" என அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் பல நாடுகளில் குறிப்பாக லத்தீன் அமெரிக்க நாடுகளில் கொலைகள் உட்பட பல உட் சதி நடவடிக்கைகளில் ஊடுருவல் சீ.ஐ.ஏ உறுப்பினர்கள் செயல்பட்டார்கள் என்பது வெளிப்படையாக நிரூபிக்கப்பட்டதன் எதிரொலியாகவே இப் புதிய விதி அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாம்.

ஒருவரை மிரட்டுதல், உடலியல் துன்புறுத்தல் செய்தல், மற்றும் கொலைகள் என்பன இனித் தவிர்க்கப்படுமாம்!

# பெண்கள் என்றுமே பூஜை வைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்

கடந்தவாரம் வத்திக்கானில் கார்டினல் தரத்தில் உள்ள மத குரு ஒருவர் விடுத்த அறிக்கை ஒன்றில் பெண்கள் என்றுமே கத்தோலிக்க தேவாலயங்களில் பூஜை வைக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார். கார்டினல் Joseph Ratzinger என்பவர் விடுத்த அறிக்கையில் பெண்கள் பூஜை வைக்க அனுமதிக்கப்படக் கூடாது என்பது என்றென்றைக்கும் நிலைக்க வேண்டிய விதி. இது மாற்றப்பட முடியாதது எனத் தெரிவித்துள்ளார். பாப்பரசராக வரும் தரத்தில் உள்ள இவர் மேலும் தெரிவிக்கையில் இதை மீறும் எவரும் கத்தோலிக்க மதத்தில் இருந்து நீக்கப்பட வேண்டியவர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# வாரக் குறிப்பு

**26.01.96 ஞாயிற்றுக்கிழமை**

- அமெரிக்க ரஷ்ய உறவுகளுக்கு ஜெல்சின் என்ற தனி நபர் அவசியமில்லை என அமெரிக்க ஜனாதிபதி கிளின்டன் தெரிவித்துள்ளார்.
- அல்பேனியாவில் மக்கள் கிளர்ச்சி. இராணுவம் சேவைக்கு அழைப்பு.
- இஸ்லாமிய தீவிர வாதிகளுடன் அல்ஜீரிய அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனக் கோரி நடாத்தப்பட்ட ஊர்வலத்தை அரசு தடை செய்துள்ளது.
- நியூ டெல்கியில் பொது இடங்களில் புகை பிடித்தல் தடை செய்யப்பட்டுள்ளது.

**27.01.97 திங்கட்கிழமை**

- பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஆளும் கட்சியால் கொண்டு வரப்பட்ட கல்விச் சீர்திருத்தச் சட்டம் ஒரு வாக்கு வித்தியாசத்தால் தோற்கடிக்கப்பட்டது.
- தலிபன்கள் சமாதான உடன்படிக்கைக்கு முன்வருவதாக அறிவித்துள்ளனர். அதிகாரபங்கீட்டுக்கு உடன்பட முடியாது என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.
- தென் கொரியாவுடனான பேச்சு வார்த்தைகளை வட கொரியா திடீரென நிறுத்தியுள்ளது.

**28.01.97 செவ்வாய்க்கிழமை**

- அமெரிக்க ஜனாதிபதிக்கும் ரஷ்ய ஜனாதிபதிக்குமிடையிலான மார்ச் மாத சந்திப்பு திட்டமிட்டபடி நடைபெறும் என அமெரிக்கா அறிவித்துள்ளது.
- ஐரோப்பாவில் பேர்லின் சுவர் தகர்க்கப்பட்டது போன்ற நிகழ்வு ஒன்று சீனாவில் அவசியம். அது பொருளாதார விற்பனை நடவடிக்கைகளுக்கு நல்லது என அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் தெரிவித்துள்ளார்.
- துருக்கியின் முன்னாள் பிரதமர் தான்சு சில்லர் மீதான ஊழல் வழக்கொன்றில் அவர் சிறை செல்லக்கூடும் என்ற செய்திகள் வெளியாகியுள்ளன.

**29.01.97 புதன்கிழமை**

- ஜெயிர் புரட்சிக்காரர்களுக்கு ஆதரவாக ருவண்டா இராணுவமும் உகண்டா இராணுவமும் சென்றுள்ளன. ஜெயிர் அரசுக்கு ஆதரவாக ஐரோப்பிய கூலிப் படைகள் செயற்படுவதாக செய்திகள் ஏற்கெனவே வெளியாகி இருந்தன.
- அல்பேனிய சோசலிசக் கட்சியைச் சேர்ந்த 500 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கைது.
- பெல்ஜியத்தில் கொண்டுவரப்பட்டுள்ள புதிய ஓய்வூதியச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கானோர் ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தியுள்னர்.

**30.01.97 வியாழக்கிழமை**

- மகாத்மா காந்தி மதவெறியன் கோட்சேயால் 1948-ம் ஆண்டு ஜனவரி மாதம் 30-ம் திகதி சுட்டுக் கொல்லப்பட்ட நினைவு அநுஷ்டிப்பு.
- சிரியாவை எச்சரித்த இஸ்ரேல், தமது நாட்டுக்கு எதிராக யுத்தம் புரியும் லெபனானுக்கு உதவ வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டுள்ளது.
- சீனாவில் "ஆத்மார்த்த புரட்சி" என்ற தலையங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அரச நடவடிக்கை ஒன்றில் மக்களை பொது இடங்களில் எச்சில் உமிழ வேண்டாம் எனக் கேட்கப்பட்டுள்ளது.
- பர்ம தீவிரவாதக் குழுவொன்று தாய்லாந்து எல்லையில் உள்ள கிராமம் ஒன்றினை தீயிட்டு நாசமாக்கியுள்ளனர். 1000 இற்கும் அதிகமான மக்கள் அகதிகளாகினர். மூவர் பலி.

**31.01.97 வெள்ளிக்கிழமை**

- செச்செனியாவின் புதிய ஜனாதிபதியாக மஸ்கடோவ் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- முன்னாள் இராணுவ ஜெனரல் ஒருவர் அல்ஜீரிய இஸ்லாமியத் தீவிரவாதிகளால் கொலை செய்யப்பட்டுள்ளார்.
- செக் நாட்டுக்கும் ஜேர்மனிக்கும் இடையேயான உறவுகளை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளை ஜேர்மன் அங்கீகரித்துள்ளது. பாராளுமன்றம் ஆரம்பம்.
- யூதர்களிடம் கொள்ளையடிக்கப்பட்ட தங்கம் சுவிஸ் வங்கிகளில் வைப்பிலிடப்பட்டது தொடர்பான விசாரணைகளை நடாத்தும் பொலிசார் வங்கிக் கணக்குகளை பரிசீலிக்க பாராளுமன்றம் அங்கீகாரம்.

**01.02.97 சனிக்கிழமை**

- பிரபல பிரெஞ்சு வர்த்தகரும் அரசியல் வாதியுமான பேர்னார்ட் தப்பி விரைவில் சிறையிலிடப்படலாம் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.
- சௌகஸில் பாரிய விமான விபத்து. 23 பேர் பலி. விபத்துக்கான காரணம் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.
- வீடற்ற ஜேர்மன் பிரஜை ஒருவர் பிரெஞ்சுத் தலைநகர் பாரிஸ் 11 வீதி ஒன்றில் பிணமாக மீட்கப்பட்டுள்ளார். இவர் குளிரினால் தாக்கப்பட்டே பலியானதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
- ஈராக்கிய அதிபர் சதாம் ஹூசைன் தனது மனைவியையும் இரு பெண் பிள்ளைகளையும் வீட்டுக் காவலில் வைத்துள்ளார். இப் பெண் பிள்ளைகளின் கணவர்களை கொலை செய்தவர்களுக்கு சதாம் மன்னிப்பு வழங்கியதை எதிர்த்ததாலேயே இவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இம்ரானின் அரசியல் வீச்சில் ஆட்டமிழப்பாரா பெனாசிர்?




இந்திய உப கண்டத்தில் ஒரு மாபெரும் சக்தி பாகிஸ்தான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இப் பிராந்தியத்தில் இந்தியா எத்தகைய இடத்தை வகிக்கிறதோ அதே அளவு முக்கியத்துவம் பாகிஸ்தானுக்கும் உண்டு. உபகண்டத்தில் நடந்துமுடிந்த, இன்னமும் புகைந்து கொண்டிருக்கும் பல பிரச்சினைகளுக்கு பின்னணியில் பாகிஸ்தான "பாவிக்கப்பட்டது" யாவரும் அறிந்ததே. அதே போல் இந்தியாவின் ஒவ்வொரு நடவடிக்கையையும் கட்டுப்படுத்தப் பாவிக்கப்படும் நாடாக பாகிஸ்தானே இருந்து வருகிறது.

பாகிஸ்தான் பிரித்தானியாவின் ஆட்சியில் இருந்து விடுபட்டு நாற்பத்து ஒன்பது ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் 25 ஆண்டுகள் இராணுவ ஆட்சியிலே கழிந்துள்ளன. அடுத்த 24 ஆண்டுகளிலும் பல அரசுகள் தேர்தல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டாலும் அவைகளும் தங்களது பூரண காலம் வரை அதிகாரத்தில் இருக்கவில்லை. அந்த வகையில் ஓரளவிற்காவது நிலைத்து நின்றது.



தந்தையாரின் கொலைக்குப் பின் வெளிநாட்டில் வாழ்க்கை நடத்திய இவர் 1986ம் ஆண்டு தனது நாட்டுக்குத் திரும்பினார். 1987ம் ஆண்டில் 'சிந்திய' வர்த்தக குடும்பத்தைச் சேர்ந்த அசிப் அலி சர்தாரியை மணம்முடித்தார். இவரது ஆட்சி இரண்டாம் முறை கலைக்கப்பட்டதற்கு இவரது கணவரது துஷ்பிரயோக நடவடிக்கைகளும் காரணம் எனக் கூறப்பட்டது. அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் நாட்டினை பாதாளத்திற்கு இட்டுச் சென்றார் என்ற குற்றச்சாட்டு இருப்பதால் பெனாசிர் மீண்டும் பதவிக்கு வருவாரா என்பது ஒருவகை கணிப்பீடு.

சுல்பிகார் அலி பூட்டோவின் அரசு மட்டுமே. ஆனால் அதுவும் 1977-ம் ஆண்டில் ஜெனரல் ஷியாவுல் ஹக்கினால் சதியொன்றின் மூலம் அகற்றப்பட்டது. பதவியில் இருந்து அகற்றப்பட்ட "சுல்பிகார் அலி பூட்டோ" பின்னர் தூக்கிலிடப்பட்டார். அதன் பின் பதினொரு ஆண்டுகள் இராணுவமே பாகிஸ்தானில் அதிகாரத்தை வைத்திருந்தது. ஷியாவின் ஆட்சியானது 1988-ம் ஆண்டு அவர் விமான விபத்தில் இறந்ததுடன் முடிவுக்கு வந்தது. அந்த வருடம் நடத்தப்பட்ட தேர்தலில் அலி பூட்டோவின் "பாகிஸ்தான் மக்கள் கட்சி" யின் தலைமைப் பதவியை அவரது மகளான பெனாசிர் பெற்றுக் கொண்டார்.

தேர்தலின் மூலம்பதவியைக் கைப்பற்றிய பெனாசிரின் ஆட்சி இரண்டு வருடங்கள் மட்டுமே நீடித்தது. பாகிஸ்தானின் அரசியலில் ஆயுதப்படைகளின் ஆதிக்கம் பெருமளவில் உள்ளது. இதனை ஆபத்து எனக் கருதிய பெனாசிர் இராணுவத்தின் அதிகாரங்களை குறைக்க முற்பட்டார். ஆனால் ஜனாதிபதியுடன் நெருக்கமாக இருந்த இராணுவமோ ஜனாதிபதியின அதிகாரத்தை பயன்படுத்தி பெனாசிரின் ஆட்சியை கலைத்து விட்டது.

இதனை அடுத்து நடந்த பொதுத் தேர்தலில் இஸ்லாமிய ஜனநாயக முன்னணியின தலைவர் "நவாஸ்செரிப்" பிரதமராகப் பதவியேற்றார். நவாஸ் செரிப் பதவியேற்றதின் பின்னர் பாகிஸ்தானின் பொருளாதாரத்தைப் பெரிதும் சீராக்கும் முயற்சியில் ஈடுபட்டார். இவரது காலத்திலேயே போட்டிப் பொருளாதாரக் கொள்கை பாகிஸ்தானில் அறிமுகப்படுத்தப்பட்டது. இவரது ஆட்சிக் காலத்தில் பாகிஸ்தான் தேசிய வருமானத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்தது. ஆனாலும் அவரது ஆட்சியும் மூன்று வருடங்களிலேயே கலைக்கப்பட்டது.

சியாவுல் ஹக் ஆட்சியின் போது ஜனாதிபதிக்கு அதிக உரிமைகள் வழங்கப்பட்டது. இந்த அதிகரித்த உரிமைகளைக் குறைக்க நவாஸ்செரிப முற்பட்டபோது, ஜனாதிபதி இம்முறையும் முந்திக்கொண்டார். நவாஸ் செரிப்பின் ஆட்சி கலைக்கப்பட்டது. அதன் பின் 1993-ம் ஆண்டு நடந்த தேர்தலில் மீண்டும் பெனாசிர் பூட்டோ பிரதமர் பதவியைக் கைப்பற்றிக் கொண்டார். ஆனால் அவரது ஆட்சியின் போது பாகிஸ்தான் பாரிய பின்னடைவுகளைக் கண்டது. பொருளாதாரத்தில் வீழ்ச்சி மட்டுமல்ல, பிராந்திய ரீதியாக இனப் பிரிவுகளுக்கிடையே மோதல்கள் ஏற்படத் தொடங்கின.

இவ்விதமான கலவரங்களில் சிந்துமாகாணமே பெரிதும் பாதிக்கப்பட்டது. கராச்சி நகரம் "ஆசியாவிலேயே பாதுகாப்பில்லாத நகரம்" என கணிக்கப்பட்டது. சட்டம், ஒழுங்கு சீர்கெட்டமை, அமைதியின்மை போன்றவை காரணம் காட்டி பெனாசிரின் இரண்டாவது ஆட்சியை மூன்று வருடங்களிலேயே ஜனாதிபதி லெகாரி கலைத்தார். பெனாசிரின் ஆட்சியின் போது நிலைமை மோசமானதற்கு அவரைச் சுற்றியிருந்த ஆலோசகர்களே காரணம் எனச் சொல்லப்பட்டது.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

1990ம் ஆண்டு தேர்தலில் பிரதமர் பதவிக்கு வந்தவர் பாகிஸ்தான் முஸ்லீம் லீக்கின் தலைவராவார். ஜனாதிபதிக்கான அதிகாரத்தை மட்டுப்படுத்தும் வகையில் நடவடிக்கைகளை எடுத்ததால் ஜனாதிபதிக்கும் அவருக்கும் ஏற்பட்ட இழுபறி நிலையில் 93ம் ஆண்டில் பிரதமர் பதவியிலிருந்து விலகிக்கொண்டார். இவரும் பெரும் வர்த்தக சமூகத்தைச் சேர்ந்தவரே. ஆனால் இவரது பொருளாதாரக் கொள்கையால் பாகிஸ்தான் பெரும் மாறுதல்களைக் கண்டது. இம்முறை தேர்தலில் இவருக்கு வெற்றி வாய்ப்பு அதிகளவில் உள்ளது.

இந் நிலையில், இம்மாதம் மூன்றாம் திகதி ஒரு பொதுத் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. இதுவரை காலமும் இரண்டு பெருங்கட்சிகளின் பலப் பரீட்சையை மட்டுமே கண்டு வந்த பாகிஸ்தான், இம்முறை மற்றுமொரு பெரும் அணியினரையும் சந்திக்கிறது. பிரபல பாகிஸ்தான் கிரிக்கட் விளையாட்டு வீரரான இம்ரான்கான் தனியான ஒரு கட்சியை தாபித்து தேர்தலில் போட்டியிடுகிறார்.

பாகிஸ்தானின் முழுச் சனத்தொகை ஏறக்குறைய 140 மில்லியனாகும். இந்தச் சனத்தொகை ஒவ்வொரு வருடமும் 3.2 விகிதத்தால் அதிகரித்துச் செல்கிறது. நாட்டின் 90 விகிதமானோர் ஏழைகளாகவோ அல்லது நடுத்தரவர்க்கத்தினராகவோ தான் இருக்கின்றார்கள். சனத்தொகையின் முப்பது முதல் நாற்பது விகிதம் வரையிலானவர்கள் வறுமைக் கோட்டுக்கு கீழேயே வாழ்கிறார்கள். இதிலும் கல்விகற்றோர் தொகை 35 விகிதத்திற்கு குறைவானவர்களாகவே இருககும் அதேவேளை பெண்களில் 20 விகிதத்திற்கும் குறைவானவர்களே கல்வியறிவைப் பெற்றிருக்கிறார்கள். பாகிஸ்தானின் சனத்தொகையின் 70 விகிதத்திற்கும் அதிகமானோர் கிராமப் புறங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். சராசரியாக ஒரு பாகிஸ்தானியரின் வருடாந்த வருமானம் 400 அமெரிக்க டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் கிராமப் பகுதிகளில் ஆதிக்கம் செலுத்துபவர்கள் "சாதார்கள்" என அழைக்கப்படும் நிலப்பிரபுக்களே. இவர்களே பெரும்பாலான நிலங்களையும் தொழிற்சாலைகளையும் சொந்தமாக்கி வைத்திருக்கிறார்கள். இந்த நிலையில் அவர்களது தொழிற்சாலைகளிலோ, அல்லது நிலத்திலேயோ தான் ஏராளமான ஏழை மக்கள் வேலை செய்கின்றனர். பல பகுதிகளில் இநத சர்தார்களே அரச பிரதிநிதிகளாயும் செயற்படுகின்றார்கள். இந் நிலையில் அப்பாவி மக்கள் தங்களது சுய விருப்பத்தின்படி எதுவுமே செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். சர்தார்களே அரச பிரதிநிதிகளாகவும் இருப்பதால் அவர்களது ஆணையை மீறுவது என்பதும் முடியாத காரியம். தேர்தலில் பங்கு பற்றுபவர்களிலும் பெரும்பாலானோர் நிலப்பிரபுக்களும், வர்த்தகருமே. அதிகம் கல்வி அறிவில்லாத நிலையில், நிலப்பிரபுக்களால் "குத்தகைக்கு வாங்கப்பட்டுள்ள நிலையில்" தங்களது சுய விருப்பின் படி பிரதிநிதிகளை தெரிவு செய்ய ஏழைகளுக்குமுடியாமல் போகிறது. பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்படுபவர்களில் 10 விகிதமானோரே இவ்விதம் சுயவிருப்பின் பேரில் தெரிவு செய்யப்பட்டவர்கள் என கணிப்பு ஒன்று கூறுகிறது.

இம்முறை தேர்தலில் 49 கட்சிகளைச் சேர்ந்த அபேட்சகர்கள் உட்பட 7000 பேர்கள் பங்குபற்றுகிறார்கள். பிரதான போட்டியாளர்களாக பெனாசிரும், நவாஸ் செரிப்பும் இருக்கும் அதே வேளை பாகிஸ்தானுக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவரும் ஏழைகளுக்காக பெரும் இலவச வைத்திய சாலை ஒன்றைத் திறந்து அதன் மூலம் தனது செல்வாக்கை உயர்த்திக் கொண்டவருமான இம்ரான்கானும் மூன்றாவது பிரிவாக போட்டியில் கலக்கிறார். அத்துடன் அண்மையில் கொல்லப்பட்ட பெனாசிரின்



'டெஹ்றிக் ஈ. இன்சாப்' எனும் புதிய கட்சியின் தலைவர். பாகிஸ்தானின் முன்னாள் கிரிக்கட் அணித் தலைவர். லஞ்சம் முறைகேடுகளை ஒழித்து சுத்தமான நிர்வாகத்தை ஏற்படுத்துவேன் என்கிறார். பொது மருத்துவமனை ஒன்றைக் கட்டி ஏழைகளுக்குச் சிகிச்சைகளை வழங்கி மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றாலும் இவரது திருமண வாழ்வில் சில பிரச்சினைகளை உள்நாட்டில் சந்தித்துள்ளார்.

சகோதரரான முர்தாஸ் பூட்டோவின் மனைவியும் போட்டியிடுகிறார்.

தேர்தல் முடிவடைந்த நிலையில் மீண்டும் அமையப்போவது சிறுபான்மைப் பலம் கொண்ட அரசா, அல்லது இதுவரை காலமும் ஏமாற்றப்பட்டு வந்த மக்கள் உறுதியான பாராளுமன்றமொன்றை தெரிவுசெய்வார்களா என்பதை அடுத்து வரும் நாட்கள்தான் தீர்மானிக்கும்.

**- உதயன் -**




# தமிழீழ பெண் சாதனையாளர்கள்

## மாலா, யமுனா

பெண் என்றால் பேதை என்ற எண்ணம் மறையாத எமது சமூகச் சூழலில், அக் கருத்தை உடைத்துக் கொண்டு புறப்பட்ட பல பெண்கள் பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளனர். கலை இலக்கியத் துறைகளில், கல்வியியற் துறையில், விளையாட்டுத்துறையில் என்று தமிழ்ப் பெண்கள் புரிந்த சாதனைகள் அதிகம். அந்த வகையில் வீரதீர விளையாட்டில் சாதனை புரியும் இரு தமிழீழப் பெண் வீராங்களைகளான செல்விகள் மாலா, யமுனா ஆகியோர், தமிழீழததில் இருந்து வெளிவரும் 'நாறு' சஞ்சிகைக்கு அளித்த செவ்வியில் இருந்து.

○ **வீரதீர சாகச விளையாட்டில் துணிகரமாக இறங்கியுள்ளீர்களே இதனை எவ்வாறு ஆரம்பித்தீர்கள் ?**

☆ பாடசாலையில் ஓட்டம், ஈட்டி எறிதல், உயரம் பாய்தல் போன்ற விளையாட்டுகளில் ஆர்வமாக ஈடுபட்டோம். அந்த உந்துதலுடன், எமது அண்ணன், மச்சான், அயலவர்கள் என்று பல ஆண்கள் இவ் விளையாட்டில் ஈடுபட்டமையும் எம்மை ஊக்கப்படுத்தியது. எமது உறவினரான சான்டோ செல்வராசா அவர்கள் எமது விருப்பத்தை ஏற்று, எமக்குப் பயிற்சிகளைத் தந்தார். உடல் இறுகுவதற்குப் படிப்படியான பயிற்சிகள் பெற்றோம். இவ்வாறு ஆரம்பித்து இப்போது 25 கிலோகிராம் பாரம் தூக்கி அடிக்கக் கூடியதாக வளர்ந்து உள்ளோம்.

○ **வயிற்றில் வாகனங்களை ஏற்றிச் சாகசம் செய்கிறீர்கள். அது எவ்விதம் சாத்தியமாகிறது ?**

☆ காரினதோ, சைக்கிளினதோ ரயர் காற்றுப்போனால் எங்ஙனம் அதன் 'றிம்' பாதிக்கப்படுகிறதோ அது போன்றே எமது உடலிலும் காற்றை உள்ளிழுத்து வைக்காமல் விட்டால் வாகனம் ஏறும்போது எலும்புகள் முறிந்துவிடும். நாம் காற்றை உள்ளிழுத்து வைத்தே இச் சாகசத்தைப் புரிகின்றோம். இத்தகைய சாகசத்தைச் செய்வதற்கு எமது மனவுறுதியே கைகொடுக்கிறது.


○ **வாகனம் உங்கள் மேல் ஏறும்போது உங்கள் மனோ நிலையைக் கூற முடியுமா ?**

☆ ஆரம்பத்தில் பயமாகத்தான் இருந்தது. இப்பொழுது மக்களின் உற்சாகமும், ஆரவாரிப்பும் எமக்கும் உற்சாகத்தையே அளித்துள்ளது.

○ எத்தகைய வாகனங்களை உடலில் ஏற்றுகிறீர்கள் ?

**மேலும் எவ்வாறான சாதனைகளைப் புரிய விரும்புகிறீர்கள்.**

☆ பயிற்சியின்போது கெம்பிரிஜ்கார், இப்பொழுது கன்டர் உழவு இயந்திரம். எதிர்காலத்தில் ஆண்கள் போன்று லொறி, மோட்டார் சைக்கிள் போன்றவற்றை வாயால் இழுத்து சாதனை புரிய விருப்பமும் எண்ணமும் இருக்கிறது.



○ **பெண்கள் அடங்கி, ஒடுங்கி வாழவேண்டும் என்ற சமூகச் சூழலில் பிறந்த உங்களுக்கு சமூகத்திடமிருந்தும் பெற்றோரிடமிருந்தும் ஆதரவு கிட்டியதா ?**

☆ இத்தகைய வீரதீரப் பயிற்சிகளை மேற் கொண்டபோது எமது சமூகததில் பலரும் ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். எனினும் எமது பெற்றோர் உற்சாகம் தந்தனர். உறவினர்களும் தூண்டுதல் அளித்தனர். நாமும் துணிந்து நின்றோம். இன்று சமூகம் எம்மைப் பாராட்டுகிறது. எமக்குக் கிடைத்த வெற்றி எமது பெண்கள் எல்லோருக்கும் தூண்டுதலாக அமையும் என நாம் எண்ணுகிறோம்.

○ **உங்களது அன்றாட அலுவல்களில் இது பாதிப்பை ஏற்படுத்தவில்லையா ?**

☆ இல்லை. நாம் காலையும், மாலையும் இரு மணி நேரம் பயிற்சி எடுப்போம். மிகுதி நேரத்தில் எமது வீட்டு வேலைகள் செய்வோம். ஓய்வு நேரத்தில் புத்தகங்கள் படிப்போம். இதனால் பாதிப்போ, நெருக்கடிகளோ எமக்கு ஏற்படவில்லை.

○ **உங்களது மணவாழ்வில் இது பாதிப்பை ஏற்படுத்தாதா ?**

☆ ஏற்படுத்தாது என்றே எண்ணுகிறோம். ஆனாலும் எமது பெற்றோர் மணவாழ்வில், குறிப்பாக குழந்தைப் பேற்றில் பாதிப்பை உண்டுபண்ணும் என அஞ்சுகின்றனர். இதனால் தொடர்ந்து இவ் வீரதீர விளையாட்டில் ஈடுபடுவதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர்.

○ **வீரதீரச் செயல் புரியும் நீங்கள் உங்கள் கணவன் எப்படி இருக்க வேண்டும் என எதிர் பார்க்கிறீர்கள் ?**

☆ எம்மைப்போல சாதனை புரியும் ஒருவரை விரும்புகிறோம். ஆனால் அவர் வெறும் சாதனை வீரராக இருந்தால் போதாது. எமது தேசத்துக்குத் தன்னை ஈடுபடுத்தி தன்னலமற்ற சேவை புரியும் ஒரு கடமை வீரனான கணவனையே நாம் அடைய விரும்புகிறோம். இது எமது விரும்பம் மட்டுமே; பெற்றோரின் விருப்பமும் உள்ளதல்லவா?

○ **இத்தகைய வீரதீரப் பயிற்சிகளைப் பாடசாலை மட்டத்துக்குக் கொண்டு செல்லமுடியுமா ?**

☆ ஆம். வயது வந்த மாணவர்களுக்கு உடற் பயிற்சியின் ஓர் அங்கமாக இப்பயிற்சிகளை அளிக்கலாம்.

○ **இப்பயிற்சியில் ஈடுபட விரும்பும் பெண்களுக்கு என்ன ஆலோசனை கூறுவீர்கள் ?**

☆ எல்லாவற்றுக்கும் தேவை மனவுறுதியே. அது இருந்தால் தான் சாதனை புரிய முடியும் என்றனர் புன்னகையுடன்.

பேட்டி: வன்னி உமா

# தலைப் பேன்கள் கூட நோய்க் காவிகளாகலாம்

முன்னர் எங்கள் ஊர்களிலெல்லாம் பேனை ஒழிப்ப தெறகென நிபுணத்துவம் பெற்றவர்கள் அநேகம் இருப்பர். மாலை நேரங்களில் பக்கத்து வீட்டுச் செய்திகள் தொடக்கம் படமாளிகையில் காண்பிக்கப் படும் திரைப்படங்கள் பற்றியும் அலசிக்கொண்டே இந்த நிபுணிகள் பேன் ஒழிப்பு சிகிச்சையினை மேற்கொள்வார்கள். ஏன்? நீங்கள் கூட சிலவேளைகளில் இவ்வாறான சிகிச்சையை (?) கொடுத்திருக்கலாம் அல்லது பெற்றிருக்கலாம். ஆனாலும், இம்மாதிரியான முறைகள் எதுவும் பேனை முற்றாக ஒழித்து விடாது என்பது துரதிர்ஷடவசமாக அவர்களுக்குத் தெரியவில்லை.

உண்மையில், பேன்கள் சுயமாக வாழ இயலாதவை. ஒட்டுண்ணி வகையைச் சேர்ந்த இவை மனிதர்களின் உடம்பில் குறிப்பாக தலையில் தங்கி அழுக்கையும், தலைச் சருமத்திலிருந்து இரத்தத்தையும் உறிஞ்சி உயிர் வாழும். பேன்கள் மூன்று வகைப்படும்.

1. **தலைப்பேன்**
2. **உடற்பேன்**
3. **பொச்சுப்பேன்**

இவற்றில் தலைப்பேனும், உடற்பேனும் உருவ அமைப்பில் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை. பொச்சுப் பேன் (Pubic louse) மட்டும் வித்தியாசமான உருவமைப்புக் கொண்டது.

**தலைப்பேன்**

நீண்ட கூந்தலுள்ள பெண்களிடமும், முடியினை சுகாதாரமாக பராமரிக்காதவர்களிடமும் பேன்கள் அதிகளவில் பெருக வாய்ப்புண்டு. பேன் உள்ளவர்கள் உபயோகித்த சீப்பு, தலையணை, படுக்கை விரிப்புகள் மூலமாகவும் அடுத்தவர்களுக்கு இவை தொற்ற வாய்ப்புண்டு.

ஒரு பேன் ஒரு வாரத்தில் சுமார் 300 முட்டைகள் வரை இடும். இம் முட்டைகள் ஒரு வாரத்தில் குட்டிப் பேன்களாக மாறிவிடும்.

பேன் தலையை கடிக்கும் போது அதன் உமிழ் நீரில் கலந்துள்ள நச்சுப் பதார்த்தம் கடித்த இடத்தில் ஒரு எரிச்சலை உண்டாக்கும். இதன் காரணமாகத் தான் தலையை அடிக்கடி விறாண்டிக் கொள்ள நேரிடுகிறது.

இவ்வாறாக விறாண்டிக் கொள்ளும் போது தோல் அழற்சி உண்டாகி கிருமிகள் புகுந்து புண்களை ஏற்படுத்தும். இது மட்டுமல்ல இப் பேன்கள் நோய்க்கிருமிகளை கூட காவிச் செல்கின்றன. குடற் காய்ச்சல் (Typhus), ரெஞ்சுக் காய்ச்சல் (Trench fever) போன்றவை பரவுவதற்கும் இப் பேன்கள் காரணம்.

**உடற்பேன்**

தலைப் பேனைப் போன்ற எண்ணிக்கையில் உடற்பேன் இருப்பதில்லை. சிலருக்கு கண் இமை, புருவம், தொப்புள் இவற்றில் கூட இப்பேன்கள் காணப் படலாம். இந்த இடங்களை முறையாக சுத்தப்படுத்துவதன் மூலம் இப்பேன்களை ஒழிக்கலாம்.

**பொச்சுப் பேன் (Pubic Louse)**

இப் பேன்களால் அதிகம் உடற்தொல்லைகள் ஏற்படுவதில்லை என்றாலும், மிகவும் அருவருப்புத் தரக்கூடியது. பெண்களின் பிறப்புறுப்புப் பகுதிகளிலும், கபடப் பகுதிகளிலும்




இவை ஒட்டி வாழக்கூடியவை. பிறப்புறுப்பு பகுதிகளிலுள்ள முடிகளில் நன்றாக ஒட்டிக் கொண்டு வளரும். இப் பேன்களை ஒழிக்க வேண்டுமானால் அதிக கவனத்துடன் இந்த உறுப்புக்களை சுத்தப்படுத்த வேண்டும். தினமும் சோப்பு நுரையினால் அல்லது நல்ல சம்பூவினால் கழுவுதல் நல்லது.

தலைப் பேனை ஒழிப்பதற்கு நல்ல மருந்துகள் மருந்துக் கடைகளில் கிடைக்கும். தலைமுடி உதிர்பவர்கள் இம் மருந்துகளை உபயோகிக்க முன்னர் ஆலோசனை பெற்றுக் கொள்வது நல்லது.

தலைப் பேன் தவிர்ந்த மற்றய இரு பேன்களையும் ஒழிப்பதற்கு அவை தங்கி வாழும் பகுதி முடிகளை அகற்றி விடுவது நல்லது.

தொகுப்பு:
வர்ஷிகா-வைஷ்ணவி


**வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும், உங்கள் மங்கல வைபவங்களுக்கும், ஊர்து யாத்திரை போன்றவற்றிற்கும் தேவையான வாகன வசதிகளுக்கு;**



**நித்தி**
**வாகன சேவை**
Tel: 01 43 03 07 08
01 48 05 02 14 / 01 49 23 97 32
பிரயாண வசதி கருதி:
06 07 34 80 51

# எதிரொலிகள்

## நடுநிலமை = முகம் இழத்தல்

ஈழமுரசிற்கு உன் நிரந்தர வாசகன் எழுதிக்கொள்வது, ஐரோப்பிய நாடுகளிலே தமிழர்கள் குடியேறி, தமது முகவரிகளை தொலைத்தவர்களாக வாழும் இந்த சூழ்நிலையில், அவர்களுடைய அறிவுப் பசியைப் போக்கவென ஆரம்பத்திலே சில தமிழ்ப் பத்திரிகைகள் தோன்றின. இருந்த போதிலும், எமது மக்களின இந்த முகவரியற்ற கீழ்நிலை வாழ்விற்கு காரணமான எமது தேசிய இனப் பிரச்சனை பற்றிப் பேசாது, நடுநிலைமை என்ற எமது இக்கால போராட்ட வாழ்வுக்கு ஒவ்வாத ஒரு நிலையை எடுத்துக் கொண்டு பத்திரிகையை நடாத்துவது என்பது, தமிழ் இனத்திற்கும், தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் பங்கமே விளைவிக்கும்.

ஒரு பத்திரிகையின் தரம், தனியே எழுத்திலே அல்லாது, அது சார்ந்துவரும் நிழற்படங்களிலேயும் தங்கியுள்ளது. நூறு வரிகள் சொல்லும் விடயத்தை ஒரு நிழற்படம் கூறிவிடும். அந்த வகையில் சமகால நிகழ்வுகளுடனான நிழற்படங்களை தாங்கிவருவதும் மிகவும் பாராட்டப்படக்கூடிய விடயமாகக் காணப்படுகிறது. மற்றும். நீ தாங்கி வெளிவரும் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், உலக விடயங்கள் என்பனவும் தரமானவையே. மேலும், உலகமெல்லாம் சிதறிக்கிடக்கும் எமது சிந்தனையாளர்களை ஒன்றிணைத்து மென்மேலும் தரத்துடன் நீ வெளிவர வேண்டும் என்பதே என் அவா.

உன் வாசகன்
கரிகாலன்
(சூரிச், சுவிஸ்)

## தமிழில் இடலாமே!

பத்திரிகை ஆசிரியர் அவர்கட்கு!

உங்கள் பத்திரிகையை தவறாது படித்து வரும் வாசகர்களில் நானும் ஒருவன். பத்திரிகையில் திகதி இடும்போது தமிழைப் புறக்கணித்து ஆங்கிலத்தை அப்படியே தமிழில் எழுதுகிறீர்கள். (உ+ம்: நவம்பர் என்பதை கார்த்திகை என்று இடலாமே!). மேலும், சினிமாப் பகுதியில் அதிகமாக யமுனா ராஜேந்திரனின் கட்டுரைகள் இடம்பெறுகின்றன. அவர் மேலைநாட்டு சினிமாக்களைப் பற்றியே அதிகம் விமர்சிக்கின்றார். அப்படங்கள் நாம் பார்த்தோ அல்லது கேட்டோ அறியாதவை. அவை பற்றி நாம் அறிவதால் என்ன பயன். விடுதலையை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்ட படங்கள் பற்றிய விமர்சனத்தை முன்வைத்தால் இக்கால கட்டத்திற்கு ஏற்றதாக இருக்கும் என நம்புகிறேன். 'நாற்று' இது மிகவும் வரவேற்கப்பட வேண்டிய பகுதி.

அன்புடன், ஈழமுரசு வாசகன்
புவனேஸ்வரன்
(லு பெக், பிரான்ஸ்)

## இனியாவது செய்வார்களா?

அன்பின் ஈழமுரசிற்கு–

உங்களின் 16.01.97 இதழ் படித்தேன். செய்திகளையும், கட்டுரைகளையும் மிகவும் சிறப்பாகவும் உடனுக்குடன் அறியத் தருவதிலும் ஈழமுரசிற்கு நிகர் எதுவுமில்லை.

உங்களின் 16.01.97 இதழின் 27-ம் பக்கத்தில் இடம்பெற்ற "தமிழீழ மாணவர்களிற்கு மத்திய கல்லூரி பழைய மாணவர்கள் நிதி உதவி" எனும் தலைப்பில் இடம்பெற்ற செய்தியானது புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் உள்ள பல பழைய மாணவர் சங்கங்கள் செய்யத் தவறியமையை இம் மாணவர்கள் செய்தமை பாராட்டுக்குரியது. லண்டனில் இப்படியான சங்கங்களின் "தலைவர்களும் செயலாளர்களும்" 80-ம் ஆண்டு காலம் பகுதிக்கு முன் வந்தோரே. இவர்களுக்கு எமது நாட்டில் நடப்பவை பற்றியே கவலை இல்லை. அதுமட்டுமன்றி அங்கம் வகிக்கும் இளம் அங்கத்தவர்களையும் நாட்டுப் பற்றின்றி ஆங்கிலேயர்கள் தமது ஆண்டு விழாவைக் கொண்டாடுவது போன்றே கொண்டாட வழி சமைத்துக் கொடுக்கிறார்கள்.

டிஸ்கோ, கிளப் என்று வருடாந்த ஒன்று கூடலை ஒழுங்கு செய்யும் இவர்கள் மத்தியில், சுவிஸ் பழைய மாணவர்கள் செய்த உதவியானது பாராட்டுதற்கும் போற்றுதற்கும் உரியதாகும்.

இனியாவது இப்படியான செயற்பாடுகளை செய்வதற்கு ஆவன செய்வார்கள் எனில் இது ஈழமுரசிற்கும் தமிழீழ மாணவர்களுக்கும் ஒரு இனிமையான செய்தியாகும் என நினைக்கின்றேன்.

அன்புடன்
சி. பாஸ்கரன்
(யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவன்)
(பிரித்தானியா)

## விடயச் சிறப்பு கொண்டது 100வது இதழ்

அன்பு நண்பர்களுக்கு,

ஈழமுரசு நூறாவது இதழ் _ சிறப்பிதழ் கிடைத்தது. நன்றி.

'ஈழமுரசு' ஆரம்பித்த வரலாறும், ஆசிரியர் கஜன் அதன் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் உற்சாகத்தோடும் ஊக்கத்துடனும் உழைத்த கதையும் தெரிந்து மகிழ்கிறேன்.

கஜன் அவர்களின் கனவுக்கு ஏறப நூறாவது இதழை விஷயச் சிறப்பு கொண்ட இதழாகத் தயாரித்துள்ள உங்கள் அனைவரது உழைப்பும் ஈடுபாடும் பாராட்டுதலுக்குரியது.

சிறப்பிதழில் ஒவ்வொரு கட்டுரையும் உயர்வானது. 'முகம் இழந்த மனிதர்கள்' கட்டுரையில் முடிவுரையாகக் கூறியிருப்பது தற்கால யதார்த்த உண்மையை அழுத்தமாக பதிவு செய்திருக்கிறது. 'அவ்வை யார்?' நல்ல ஆய்வுக் கட்டுரை. 'பட்டி மன்றம்' வளர்ந்துவரும் ஒரு போக்கு பற்றிய 'தீவிரமான விசாரணை'யாக அமைந்த நல்ல கட்டுரை. 'பழந்தமிழ் இலக்கியங்கள் முதல் தற்கால சினிமா வரை பட்டிமன்றத்தில் பேச்சாளர்கள் எடுத்துப் பயன்படுத்தும் மேற்கோள்கள் அவர்களது வாதங்களுக்கு வலு சேர்ப்பதை விடவும் அவர்களைப் பற்றிய விம்பங்களுக்கே வலுச் சேருகின்றன' என்பது சரியான மதிப்பீடாகும். 'புகலிடச் சூழலில் புலம்பெயர் தமிழ் இளைஞர்களின் உளப் பிரச்சினைகளும் ஒரு சில தீர்வுகளும்' விசேடமான கவனிப்புக்கு உரிய பயன் மிகு கட்டுரை. 'ஈழத்து நவீன தமிழ்க் கவிதை' ஈழத்துக் கவிஞர்கள் பற்றியும், ஈழத்துக் கவிதை வளர்ச்சி குறித்தும் நல்ல முறையில் அறிமுகப்படுத்தப்படுகிறது. இதர விஷயங்களும் படித்து சுவைத்து சிந்திக்க தூண்டும் விதத்தில் உள்ளன.

வாழ்த்துக்கள். எனது புதுவருட வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அன்பு
வல்லிக்கண்ணன்
(சென்னை)

## மூலக் கருத்து சிதையக் கூடாது

ஆசிரியர்,
ஈழமுரசு,
ஐயா, வணக்கம்.

இலங்கை சண்டே லீடர் பத்திரிகையில் திரு. காமினி விக்கிரமரட்ன எழுதிய கட்டுரையை கடந்த இரு வாரமாக தமிழில் திருமாறன் தர, அதைப் பிரசுரித்துள்ளீர்கள். நன்றி.

ஒரு வேற்று மொழி ஆக்கத்தை தமிழில நேரடியாக மொழி பெயர்ப்பதென்பது ஒருவகை. கட்டுரையின் சில பகுதிகளை எடுத்து (பொதுவாக சாரத்தை) மூலக் கருத்துக்கு முரண்படாத வகையில் தருவது இன்னொரு வகை. இவை பத்திரிகை உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. ஆனால், கட்டுரையை வாசித்துவிட்டு மொழிமாற்று செய்பவர் மூலக்கருத்தை முற்றிலும் சிதைத்து தன் பாணியில் தன்கருத்துக்களை தமிழில் தருவதென்பது ஒப்புக்கொள்ள முடியாது என்பது மட்டுமல்ல, கட்டுரை மூலத்தை எழுதியவருக்குச் செய்யும் துரோகமும், வாசகர்களை ஏமாற்றி குழப்பும் நடவடிக்கையுமாகும். திரு. காமினி விக்கிரமரத்தினாவின் கட்டுரை கருத்துச் சிதைவில்லாமல் முழுமையாகத் தரப்பட்டிருக்குமானால் அது தமிழீழம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் உறுதியாக செயல்படுபவர்களுக்கு உந்துதலும் உற்சாகமும் தருவதாக இருந்திருக்கும்.

மொழிபெயர்ப்பு என்பதோ அல்லது கட்டுரையின் சாரத்தை தரும் முயற்சியோ கத்தி மேல் நடப்பது போன்றது.


திரு. விக்கிரமரத்தினாவின் கட்டுரையின் சரியான வெளிப்பாடும் தாக்கமும் மொழிபெயர்ப்பில் தரப்படவில்லை என்பதாலேயே இம்மடலை எழுதினேன். தவிர, குறை காணும் நோக்கத்துடன் அல்ல என்பதை தயை கூர்ந்து உணர்க.

நன்றி.

சக்கரவர்த்தி
(சுவிஸ்)


# ரோஸ் ஏஜன்சி

*No.1*
*for Money Super Plus*
*Fast Bankcredit for*
*Tamils in Switzerland.*




Eco Agency என்ற பெயரில் இயங்கிவந்த எம் நிறுவனம் கடந்த 15.10.1996 முதல் Rose Agency எனப் பெயர் மாற்றம் அடைந்துள்ளது. எம் சேவை முன்பு போல் 100 சதவீதமும் உங்கள் திருப்திக்காகவே தொடர்ந்திருக்கும். எம் நிறுவனம் பல வங்கிகளுடன் கூட்டாக இயங்குவதன் மூலம் இன்றுவரை பல தமிழர்களின் பணத்தேவைகளை நிறைவு செய்துள்ளது. மேலும் இலகுவான முறையிலும், நியாயமான வட்டிவீதத்திலும், கூடிய விரைவிலும் எவ்வித சேவைக் கட்டணமும் இல்லாமல் உங்கள் பணத்தேவைகளைப் பூர்த்தி செய்யக் காத்திருக்கிறோம். உதாரணமாக இங்குள்ள பட்டியலைக் கவனிக்கவும்.

இங்கு தரப்பட்ட தொகைகளைவிட தேவையான மேலதிக தொகைக்கு விபரம் எம்மிடம் கோரவும். சுவிஸ் விசா B அல்லது C பத்திரமுள்ளவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டால் நாம் மேலதிக விபரங்கள் விரிவாகவும், விளக்கமாகவும் உங்களுக்குத் தருவோம்.

SOMASUNDARAM RAMALINGAM
METTLENSTRASSE 1
4554 ETZIKEN (SO)
SWITZERLAND.
Tel: 032 614 40 51
Natel: 077 46 16 94
Fax: 032 614 40 51

| கடன் தொகை | 12 மாதங்கள் | | 18 மாதங்கள் | | 24 மாதங்கள் | | 36 மாதங்கள் | | 48 மாதங்கள் | | 60 மாதங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் | வட்டி மாத்திரம் 13.9% | கட்டுத் தொகை வட்டியும் முதலும் |
| 10.000 | 726.80 | 893.90 | 1071.80 | 615.10 | 1422.80 | 475.80 | 2148.20 | 337.45 | 2902.40 | 268.80 | 3683.00 | 228.05 |
| 15.000 | 1090.20 | 1340.65 | 1607.70 | 922.65 | 2134.80 | 713.95 | 3223.20 | 506.20 | 4353.60 | 403.20 | 5523.00 | 342.05 |
| 20.000 | 1453.60 | 1787.80 | 2143.60 | 1230.20 | 2846.80 | 951.95 | 4298.20 | 674.95 | 5804.80 | 537.60 | 7368.00 | 456.10 |
| 25.000 | 1817.00 | 2234.75 | 2679.50 | 1537.75 | 3558.80 | 1189.95 | 5371.40 | 843.65 | 7256.00 | 672.00 | 9206.00 | 570.10 |
| 30.000 | 2180.40 | 2681.70 | 3215.40 | 1845.30 | 4270.80 | 1427.95 | 6446.40 | 1012.40 | 8707.20 | 806.40 | 11049.00 | 684.15 |
| 35.000 | 2543.80 | 3128.65 | 3751.30 | 2152.85 | 4982.80 | 1665.95 | 7521.40 | 1181.15 | 10158.40 | 940.80 | 12889.00 | 798.15 |
| 40.000 | 2907.20 | 3575.60 | 4287.20 | 2460.40 | 5694.60 | 1903.95 | 8596.40 | 1349.90 | 11609.60 | 1075.20 | 14732.00 | 912.20 |





இவ் வாரம் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடும் செல்வன் கு. வீரேஸ்வரனை பலகலையும் கற்று சிறப்புடன் வாழ்கவென குட்டி மாமாவும் மற்றும் சிறுவர் முற்ற சகோதர சகோதரிகளும் வாழ்த்துகிறோம்.

# உங்கள் கை வண்ணம்

## இவ்வாரக் கைவண்ணங்கள்



செல்வி
த. ஜெனித்தா
வயது: 12 (14.09.1985)
இடம்: Rheineck (SG), Swiss.



### வாழை

(1) வாழையில் பல இனங்கள் உண்டு.
(2) வாழையில் இலை, பூ, பழம், காய், மடல், முதலியவற்றை, பெறுகின்றோம்.
(3) வாழையில் மொந்தன், கப்பல், கதலி, கிறப்பர், ஆனை, சாம்பல் என்று இனவாழைகள் உண்டு.
(4) வாழை பரம்பரை பரம்பரையாக இனத்தைப் பெருக்கின்றது.
(5) வாழை உயர்ந்து இலை பரப்பி வளர்ந்திருக்கும்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



செல்வி
த. ஜெகதா
வயது: 8 (15.03.1989)
இடம்: Rheineck (SG), Swiss.



### பசு

(1) பசு ஒரு மிருகம்.
(2) பசுவில் பல இனங்கள் உண்டு.
(3) பசு பால் தரும்.
(4) பசு புல், தவிடு, புண்ணாக்கு, வைக்கோல் என்பன உண்ணும்.
(5) பசு பல நிறங்களில் உண்டு.



இக் கதையை எழுதி அனுப்பியவர்

செல்வி. துஷாந்தி சுகுமாரன்
வயது: 10 (02.07.1987)
இடம்: 8041 Zurich Switzerland.

## காகமும் முத்துமாலையும்



காகம் ஒரு மரத்தில் கூடு கட்டி வாழ்ந்தது. அது தினமும் அக்கூட்டில் முட்டை இட்டு வந்தது. அந்த மரத்தில் ஒரு பாம்பும் வசித்து வந்தது. அது காகத்தின் முட்டைகளைத் தினமும் குடித்து வந்தது. தன் முட்டைகளைப் பாம்பு குடிப்பதை நினைத்து காகம் வருந்தியது. ஒரு நாள் காகம் நரியிடம் சென்று ஆலோசனை கேட்டது. நரி கூறியபடி காகம் அரசியின் முத்துமாலையைத் தூக்கிச் சென்றது. சேவகர்கள் காகத்தைப் பின் தொடர்ந்து விரட்டலாயினர். காகம் புற்றைநோக்கி வேகமாகப் பறந்து வந்தது. சேவகர்கள் பார்க்கும்படி மாலையைப் பாம்புப் புற்றினுள் போட்டது. சேவகன் புற்றை உடைக்கும் போது பாம்பு சீறிவந்தது. சேவகர்கள் பாம்பைக் கொன்று முத்துமாலையை எடுத்துச் சென்றனர்.
புத்திமான் பலவான் ஆவான்.

## சந்திரனில் முதல் காலடி

1959-ல் மனிதன் சந்திரனில் இறங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 1969 இலேயே இம்முயற்சி நிறைவேறியது.

அமெரிக்க விஞ்ஞானிகளைப் போலவே ரஷ்ய விஞ்ஞானிகளும் சந்திரனில் கால்பதிக்கும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ரஷ்யாவின் 'லுனா' எனப்படும் விண்கலம் 1959-ல் மேற்கொண்ட முயற்சி கைகூடவில்லை. ஆனால் 1966-ல் புதிய 'லுனா' விண்கலம் முதன் முறையாக சந்திரனில் இறங்கியது. 1968-ல் மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனைச் சுற்றிவந்தார்கள். பின் 1969-ல் அமெரிக்க விண்வெளி வீரர்கள் சரித்திர சாதனை படைத்தார்கள். 'அப்பலோ II' எனும் விண்கலம் மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனில் தரையிறங்கியது.

1969-ம் ஆண்டு ஆடி மாதம் 21-ம் நாள் நீல்ஆம்ஸ்ரோங் சந்திரனில் காலடி வைத்த முதல் மனிதனாவார். அப்போது அவர் கூறிய வரிகள் சரித்திரத்தில் மாறா இடம்பெற்றுள்ளன.

'இது மனிதனுக்கு ஒரு சிறிய காலடிதான் ஆனால் மனித இனத்துக்கு ஒரு மாபெரும் பாய்ச்சல்' என்பதே அந்த வரிகள்.



### சிங்கக் குட்டிகள்

*எங்கள் அப்பா பெரியவர்,*
*பிடரி மயிர் அடர்ந்தவர்,*
*சிங்கம் அவர் செம்பழுப்பர்,*
*தங்கப்பாதம் கனத்தவர்.*
*இரைந்து கத்தும் அவர் குரலை*
*எங்கிருந்தும் கேட்கலாம்.*
*இறைச்சி தின்பார் அவர், நாங்கள்*
*இன்னும் பால் குடிக்கிறோம்.*

## கலை நிகழ்வுகள்

# தளபதி கிட்டுவின் நினைவில் தோய்ந்த மழலை கலைஞர்கள்

கடந்த 19.01.1997 ஞாயிறு அன்று சுவிஸ் செங்காலன் நகரில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தளபதி கேணல் கிட்டுவினதும், அவரோடு இந்திய அரசின் சதியால் வங்கக்கடலில் சங்கமமாகிய ஒன்பது போராளிகளினதும் நான்காவது ஞாபகார்த்த எழுச்சிவிழா தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் நடாத்தப்பட்டது.

சுமார் மூன்று மணியளவில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. நடராசா முரளிதரன் அவர்களால் தேசியக் கொடி ஏற்றிவைக்கப் பட்டதைத் தொடர்ந்து, மௌன அஞ்சலியோடு, மாவீரர் குடும்பத்தினரால் ஈகைச்சுடர் ஏற்றி வைக்கப்பட்டு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின.

செங்காலன் மாநில தமிழ்ச் சிறார்களின் மழலைப் பேச்சுக்கள், கவிதைகள், நாட்டிய நிகழ்ச்சிகள், பேச்சு, சிறப்புரை என்பன இடம் பெற்ற இவ்விழாவில் செங்காலன் 'றவீன்றாளாசஸ்வராலய' இசைக்குழுவினரின் எழுச்சி கானங்கள் இடம் பெற்றன. எம் மூத்த தளபதி கேணல் கிட்டுவின் நான்காவது ஞாபகார்த்த எழுச்சிவிழா மேடையே இவ் இசைக் குழுவின் முதல் மேடை என்பதும் மக்களை வியப்புக்குள்ளாக்கும் வண்ணம் மிகவும் சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு தமிழர் புனர்வாழ்வுக்கழக சர்வதேச ஒருங்கிணைப்பாளர் திரு. டாக்டர் மகேஸ்வரன் அவர்களும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். அவர் தனது உரையில் ஈழத்தில் அல்லலுறும் எம் மக்களின் நிலைகளையும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அடுத்த பத்தாண்டு திட்டங்கள் பற்றியும் குறிப்பிட்டு கடந்த ஆண்டுகளில் மற்றைய நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்களோடு ஒப்பிடுகையில் சுவிஸ் வாழ் தமிழர்களின் நிதியே அதிகமானது என்றும், உங்கள் பங்களிப்பை தொடர்ந்தும் நாம் நாடி நிற்கின்றோம் என்றும் குறிப்பிட்டிருந்தார்

சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் தனது சிறப்புரையில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சிகள் பற்றி குறிப்பிடுகையில், செங்காலன் தமிழ்ச் சிறார்கள் கிட்டத்தட்ட 19 பேர்வரை கலந்து கொண்டு நாம் தமிழர், எமது நாடு தமிழீழம் எமது நாட்டை மீட்டெடுக்க நாம் ஒன்றுபடவேண்டும் என்பதை




குறிப்பிடத்தக்கதாகும். எனவே இவர்களின் இசைப் பயணம் தொடர நாமும் வாழ்த்திடுவோம். மற்றும் திருக்கோணேஸ்வர நடனாலய செங்காலன், கூதிச் மாணவிகளினது எழுச்சி நடனங்கள் உட்பட "பெண்ணுக்கு பெண்ணே பகை" எனும் சிர்திருத்த நாட்டிய நாடகமும் இடம் பெற்றன. திருக்கோணேஸ்வர நடனாலய ஆசிரியை திருமதி.மதிவதனி சுதாகரன் அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட நடன நிகழ்ச்சிகள் என்பதோடு, வழமை போலல்லாது தங்களது மழலைக் கவிதைகள், பேச்சுக்கள் மூலமும் தெரியப்படுத்தியிருந்தார்கள் என்பதோடு, மற்றைய நிகழ்ச்சிகளை விட இன்றைய நிகழ்ச்சியில் பங்குபற்றிய சிறார்களின் எண்ணிக்கை அதிகமானது. ஆகவே அவர்களும், அவர்கள் பெற்றோர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள் எனக்கூறி அத்தோடு நின்றுவிடாது இனி வருங்காலங்களிலும் அவர்களிற்கு ஊக்கமளித்து எமது கலை கலாச்சார நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவதற்கு பெற்றோர்கள் கவனமும், ஊக்கமும் செலுத்த வேண்டும் என்றும் கூறியிருந்தார். நிகழ்ச்சிகளின் மத்தியில் தேசிய பாதுகாப்பு நிதி சேகரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிய சிறார்களை ஊக்கப்படுத்துமுகமாக திரு.ந. முரளிதரன் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டு இறுதி நிகழ்ச்சியாக தேசிய கொடியிறக்கப்பட்டு புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம் என்ற கோசத்தோடு நிறைவுற்றது.

# புலர்வின் பூபாளம்

## சர்வதேசக் கலைமாலை - ஒரு பார்வை

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஒஸ்லோ, நோர்வே கிளையினரால் கடந்த 25.01.1997 அன்று "புலர்வின் பூபாளம்" எனும் சர்வதேசக் கலைமாலை நிகழ்த்தப்பட்டது. Bull Teater, Salen ல் இடம் பெற்ற இக் கலைமாலை நிகழ்வு மாலை 7 மணி அளவில் தமிழ் மண்ணில் உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் போராளிகளுக்காகவும், மக்களுக்காகவும் இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகியன.

தமிழீழத்தில் ஓர் இடத்தை விட்டு வெவ்வேறு இடங்களுக்கு சூரியக் கதிர் நடவடிக்கையின் பின்னர் இடம் பெயர்ந்து அல்லலுறும் எம்மக்களின் துயர் துடைக்கும் நல்ல பணிக்காக நடத்தப்பட்ட இந்த சர்வதேசக் கலைமாலையில் முதலில் அரங்கேறியது "இதயம் தரும் கலை" எனும் நடனம். பரதத்தின் அடிகளையொற்றி வடிவமைக்கப் பட்ட இந் நடனம் கண்களுக்கு குளிர்மை சேர்த்தது. இந் நடனத்தை வழங்கிய இப் பெண் மணிகளும் தங்கள் அபிநயங்களை திறம்பட வெளிப்படுத்தி இருந்தது பாராட்டத்தக்கது.

இசையால் வசமாகி இதயமெது என்பதும், இசையை ரசிப்பதற்கு மொழி அவசியமற்றது என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய எமது மக்களும், அன்று "பொஸ்னிய இசை", "[illegible] அமெரிக்க இசை" என் [illegible] ஆரவாரத் [illegible] ழுந்து ரசித்தார்கள். பொஸ்னிய இசையை கேட்கும் போது மொழி விளங்காவிடினும் ஏதோ சோகமான பாடல் என்பது மட்டும் விளங்கியது. ஆனால் இறுதியில் அதைப்பாடிய பாடகரே கூறினார் இது காதல் பாட்டு என்று. அப்போதுதான் விளங்கியது இது எமது மக்களின் சோகமான வாழ்வு போன்று, சோகக் காதல் பாட்டு என்று. "தென் அமெரிக்க இசை" என்றால் அதற்கென்று ஒரு தனிச் சிறப்புண்டு. இது தென் அமெரிக்க மக்களான இந்தியாளர் அவர்களுக்குச் சொந்தமான இசை. இதே இனத்தைச் சேர்ந்த ஒரு இசைக் கலைஞன், சகலகலாவல்லவன் என்று சொன்னால் மிகையாகாது. மிகவும் திறம்பட இரண்டே பாடல்களை பலவகையான வாத்தியக் கருவிகளின் உதவியுடன் தானே இசையமைத்துப் பாடிச் சென்றார். ஐந்நூற்றி ஐம்பது தமிழ் மக்கள் அவரை மனந்திறந்து கரகோசம் எழுப்பியதை காணக் கூடியதாக இருந்தது.

இதனையடுத்து "தாயகம்" எனும் தமிழீழ அழகு, சோகம், வாழ்வு போராட்டம் இயற்கை வளம் அனைத்தையும் அள்ளி செதுக்கியெடுத்த இனிமையான பாடலுக்கு, மிகவும் வடிவாக நடனமாடி தமிழீழத்தைக் கண்முன்னே கொணர்ந்து தந்தார்கள் ஏழு பெண்மணிகள். நாம் எங்குதான் வாழ்ந்தாலும் எமது கலைகலாச்சாரம், பாரம்பரியங்களை அழிந்துபோக விடமாட்டார்கள் என்பதற்கு அந்த ஏழு சிறு பெண்மணிகளும் எடுத்துக்காட்டு.

எமது சொந்த நாட்டிலேயே அகதிகளாக இடம் பெயர்ந்து சொல்லில் அடங்கா துன்ப துயரங்களை, அவலங்களை, கொடுமைகளை, அனுபவிக்கும் மக்களை எம்முன் காண்பிக்க "விவரணம்" காண்பிக்கப்பட்டது. இதில் எந்தவித அரச நிதி உதவிகளும் இன்றி எமது தமிழ மக்களின் கரங்களை நம்பி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பல வகையான தார்மீகக் கடமைகளை செய்வதை இவ் விவரணத்தில் காணக் கூடியதாக இருந்தது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சர்வதேச இணைப்பாளராக கடமையாற்றும் திரு ஜெயகேஸ்வரன் அவர்கள் உரையாற்ற வரும்போது மண்டபத்தில் நிகழ்ச்சிகளைக்காண வந்திருந்த நோர்வேயின மக்களை மதித்து முதலில் ஆங்கிலத்தில் சில வார்த்தைகளைக்கூறி, பின்னர் தமிழில் உரையாற்றினார். இது தமிழரின் பண்பாட்டை எடுத்துககாட்டியது.

அவர் தமது உரையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்றால் என்ன என்று யாருக்கும் சொல்லத் தேவையில்லை என்றும் அதனுடைய நோக்கங்கள், பணிகள் அயராத உழைப்பைப் பற்றி எல்லாம் தெளிவாக எடுத்துக் கூறினார். நோர்வே வாழ் தமிழீழ மக்கள் கடந்த வருடங்களில் பல்வேறு வழிகளிலும் நிதிகளைத் திரட்டி தமிழீழத்தில் வாழும் எமது மக்களுக்கு உதவி வந்துள்ளனர், என்று குறிப்பிட்டு பாராட்டியதுடன், குழந்தைகளுக்கு தாயகப் பற்றை வளர்க்க வேண்டியன பெற்றோரின் கடமைப்பாடு பற்றியும் சுட்டிக்கூறினார்.

இதனைத் தொடர்ந்து "அரிச்சந்திர மயானகாண்டம்" எனும் நாடகம் அரங்கேறியது. இச் சர்வதேசக் கலைமாலைக்குப் பொருத்தமான நிகழ்வாக இது அமைந்தாலும் அரிச்சந்திரன் கதை தொடர்பான விளக்கம் முதலில் கொடுக்கப்பட்டு நாடகத்தை தொடங்கியிருந்தால், சிறியோர் முதல் பெரியோர்கள் வரை ரசித்திருப்பார்கள். இருப்பினும் எத்தனையோ வருடங்களின் பின் எடுக்கப்பட்ட நல்லமுயற்சி பாராட்டப்படவேண்டியது.

இதன் பின்னர் இடைவேளையும் அதனைத் தொடர்ந்து டென்மார்க் "ராகமாலிகா" இசைக்குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. இவ்விசைகுழுவினரில் ஒரு வித்தியாசத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இசை நிகழ்ச்சி தொடங்கியதில் இருந்து நடுப்பகுதி வரையும் தமிழீழப் பாடல்களைப் பாடி, மண்டபத்தில் அடர்ந்திருந்த மக்ளை தமிழீழத்திற்கு அழைத்துச் சென்று அதன் பின்னர் தான் தென் இந்திய சினிமாப் பாடல்களுள் எம்மக்களை மூழ்கவிட்டார்கள். இவ்விசைக் குழுவிடம் நாம் சிறப்பம்சமாக காணக் கூடியதாக அமைந்த ஒன்று, சுரத்தட்டினை மீட்டிய பெண் மணி. எமது தமிழீழப் பெண்கள் ஆண்களுக்கு நிகராக தமிழீழத்தில் பல சாதனைகளைப் படைக்கிறார்கள். அங்கு பெரிய புதிய தமிழ் பெண் சமுதாயம் கட்டியெழுப்பப்படுகிறது. அதே போல் இங்கு புலம்பெயர் நாடுகளில் எங்கள் தமிழ் பெண்கள் செயற்படுவார்களா? செயற்படுகிறார்களா என்ற ஏக்கமும், ஆதங்கமும் இருந்தது எனக்கு. இந்த இசைக் குழுவில் தலைமைதாங்கி, ஒருங்கிணைந்து செயற்பட்ட அந்தப் பெண்ணைப் பார்க்கும் போது, தமிழீழப் பெண்கள் தமிழீழத்தில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் சாதனை படைக்கப் போகிறார்கள் என்பது உறுதியாகியது. பெண்களுக்கு சம உரிமை, சம நீதி என்று பல அறிவாளிகள் பத்திரிகை, புத்தகங்களில் எழுதியிருந்தாலும், நடைமுறையில் காண்பது மிகவும் அரிது. இனி மேல் மலரும் புதிய விஞ்ஞான உலகில் எமது பெண்களும் புதிய சக்திகளாக திகழப்போகிறார்கள் என்பதற்கு செல்வி ஜெ. தர்ஷினி ஒரு எடுத்துக் காட்டு.

இந்த சர்வதேச கலைமாலைக்கு 400க்கும் அதிகமான தமிழ், நோர்வேஜிய மக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டியிருந்தார்கள். இன்னிசை நிகழ்ச்சியின் இறுதிப்பாடலாக "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும் நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்" பாடல் மக்கள் கரவோசையுடன் எழ, தமிழீழம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு அனைத்து மக்களும் எழுந்து அந்த விடிவை நோக்கிச் சென்றார்கள்.

- சிவாவசீகரன்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# புலம் பெயர்ந்த தமிழீழ மக்களின் புனர்வாழ்விற்கு 10 கோடிருபா தேவை

"புலம்பெயர்ந்த தமிழீழ மக்களின் நிரந்தர புனர்வாழ்வுக்கென பத்துக்கோடி ரூபா செலவில் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இதில் பெருந்தொகையான பணத்தை வெளிநாடுகளில் வசிக்கும் தமிழர்களிடமும், பொது நிறுவனங்களிடமிருந்தும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எதிர்பார்க்கின்றது" என சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் டாக்டர். சி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

ஜேர்மனி தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் கூட்டம் SCHWERTE நகரில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார். பிரதிநிதிகள் கூட்டத்திற்கு ஜேர்மனித் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் திரு.இ.ஆனந்தராஜா தலைமை வகித்தார்.

திரு. மகேஸ்வரன் தமதுரையில் தொடர்ந்து கூறியதாவது;

"தமிழீழத்தில் இடம் பெயர்ந்த மக்கள் உயிர்வாழத் தேவையான அடிப்படை வசதிகளை எதிர்நோக்குகின்றார்கள். அவர்களுக்கு உதவுவது என்பது கோயில் குளம் கட்டுவதைவிட புனிதமானதொரு சேவை. மக்கள் இரவோடிரவாக இடம் பெயரும்போது ஏற்படும் சிரமங்கள் சொல்லில் அடங்கா.

ஜேர்மனி போன்ற வசதியான நாட்டில் அகதிகளாக இருப்போருக்கே பல பிரச்சினைகள் என்றால் அங்குள்ள நிலைமைகளை நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். புலிகளை அழிக்கிறோம் என்று வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்யும் சிறீலங்கா அரசு, தமிழ் மக்களை கூண்டோடு அழிக்க கங்கணம் கட்டிநிற்கின்றது.

நாம் வெளிநாட்டிற்கு எமது நாட்டுப் பிரச்சினையை தெளிவாக எடுத்துக் கூறவேண்டும். தமிழீழத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஏனைய சர்வதேச அமைப்புகளுடன் சேர்ந்து துன்பப்படும் மக்களுக்கு உதவி செய்கின்றது. பன்னிரண்டு வருடங்களுக்கு முன்பே சிறீலங்காவில் பதிவு செய்யப்பட்ட அமைப்பு தமிழர் புனர்வாழ்வுக்கழகம்.

இடம் பெயர்ந்த மக்கள் சுய தேவைகளை தாமே கவனித்துக் கொள்வதை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் உறுதிப்படுத்துகின்றது. அதற்கான நிரந்தர திட்டங்களை ஏற்படுத்துவதே கழகத்தின் நோக்கம்.

எமது கழகம் ஏழு அம்ச அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் புனர்வாழ்வு நடவடிக்கைகளை கடந்த நவம்பர் மாதம் முதல் தமிழீழத்தில் நடைமுறைப்படுத்தி வருகின்றது. சிறீலங்கா இராணுவத்தாக்குதல் ஏற்பட்டு மீண்டும் இடம் பெயர்வு ஏற்பட்டாலும் அதற்கும் ஏற்ற மாற்றுப் புனர்வாழ்வுத் திட்டங்கள் இதில் அடங்கும்.

இத் திட்டத்திற்கென் பத்துக்கோடி ரூபா உதவி தேவைப்படுகின்றது. வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடமிருந்தும், உதவிநிறுவனங்களிடமிருந்தும் பெருந்தொகையான பணத்தை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எதிர்பார்க்கின்றது.

எதிர்வரும் ஜூலை மாதம் கறுப்பு ஜூலையை முன்னிட்டு 'துயர் துடைக்கும் பத்து நாட்கள்' என உலகம் முழுவதிலும் தமிழர் துயர்துடைக்க நிதிசேகரிக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முடிவு செய்துள்ளது. அந் நாட்களில் மேலும் கண்காட்சிகள், கலை நிகழ்ச்சிகள் என்பன நடாத்தப்படும் என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஜேர்மனிக் கிளையின் பொறுப்பாளர் திரு.இரா.சிவனேசன் பேசுகையில், தமிழீழ மக்களுக்கு இப்போது புனர்நிர்மானம், பொருளாதார மேம்பாடு, மருந்து ஆகியவை முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்றும், இதனை நிறைவேற்றுவது புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் கடமை என்றும் குறிப்பிட்டார். மேலும் இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழக ஜேர்மனி கிளைப்பொறுப்பாளர் திரு. கா. சிவநாதனும் கலந்து கொண்டார்.

(V.R. வரதராஜா_ஜேர்மனி)

# தமிழர் கலை பண்பாட்டுக்கழக ஜேர்மனிக்கிளை நடாத்தும் அன்னை பூபதி கவிதைப்போட்டி 1997

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜேர்மன் கிளையின் கலைபண்பாட்டுக் கழகம் வருடாவருடம் நடாத்திவரும் அன்னை பூபதி நினைவுக் கவிதைப் போட்டிகளின், 1997_ம் ஆண்டிற்கான போட்டியை, நடாத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

**கவிதைப் போட்டிக்கான விதிகள்:**

போட்டியில் பங்குபற்றுவோர் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து, கவிதையின் பிரதியொன்றையும் இணைத்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொடர்பு முகவரிக்கு 01.04.1997 ற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பரிசுக்குரியவராக தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், வயதை உறுதிப்படுத்த அடையாள அட்டை அல்லது பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் கேட்கப்படுவர்.

அனைத்துப் பிரிவுகளும் "அன்னை பூபதி" என்னும் தலைப்பிலேயே கவிதைகளை எழுதி அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட கவிதைகளுக்குரிய போட்டியாளர்கள் பின்னர் அழைக்கப்பட்டு, பரிசுக்குரியவர்கள் தெரிவுசெய்யப்படுவர்.

**போட்டியாளர் கவிதை படிப்பதற்கான நேர எல்லை**

**கீழ்ப்பிரிவு - மூன்று நிமிடங்கள்**
**நடுப்பிரிவு - ஐந்து நிமிடங்கள்**
**மேற்பிரிவு - ஏழு நிமிடங்கள்**
**அதிமேற்பிரிவு - பத்து நிமிடங்கள்.**

**பிரிவுகளுக்கான வயதெல்லைக்கணிப்பு:**

**கீழ்ப்பிரிவு: 01.01.1987 அன்றும் அதற்குப் பின்னரும் பிறந்தவர்கள்**

**நடுப்பிரிவு: 31.12.1981 இற்கும் 01.01.1987 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.**

**மேற்பிரிவு: 31.12.1977 இற்கும் 01.01.1982 இற்கும் இடையிற் பிறந்தவர்கள்.**

**அதிமேற்பிரிவு: 31.12.1977 அன்றும் அதற்கு முன்னரும் பிறந்தவர்கள்.**

**விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**


KULTURELLE ORGANAIZATION
DER TAMILIENE. EV
POSTFACH 1160,
37441 BAD SACHSA

தமிழர் கலைபண்பாட்டுக் கழக ஜேர்மன் கிளை.

# ஓயாத அலைகளில் சேர்ந்த நிதி

கடந்த 26.01.97 ஞாயிற்றுக்கிழமை இத்தாலி பொலோனியா நகரில் முல்லை முகாம் மீதான தாக்குதலான சரித்திரப் புகழ் மிக்க "ஓயாத அலைகள்" வீடியோப் பிரதி வெண்திரையில் காண்பிக்கப்பட்டது. 60 பேர் வரையிலான தமிழ்மக்களே வாழுகின்ற பொலோனியா நகரில் "ஓயாத அலைகள்" ஊக்குவிப்பு நிதியாக 37 பேர் தாமாகவே முன்வந்து 1.885 மில்லாக்களை வழங்கியுள்ள

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சாளரம்

ரிப்பதாயுள்ளது.

ஏனெனில் சொல்லணிகள் குறித்தும் (Rhetorics) இலக்கணத்தின் தனிமொழி (Muta Language) குறித்தும், இலக்கண மற்றும் கவிதையியல் (Poetics) பற்றிய கோட்பாடுகளின் வளர்ச்சி, வரலாறு குறித்துமான ஆய்வுகளில் அவர்கள் மூழ்கியிருக்கிறார்கள்.

தமிழில் செய்யப்படும் இம்மாதிரியான ஆய்வுகள், கல்வியியல் ஆய்வுகளென்பது சாதாரணமான விஷயமாக இருககும். பிரான்ஸ், அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள கல்வித்துறை வட்டாரத்தினரிடையே சாதாரணமான எதிரொலிகளை உண்டாக்கும்.

வேறு பிரச்சினைகள் உள்ளன. தனி மனிதத்துவம், இனம் (Ethnicity) என்பவற்றின் வரையறைகள்; இங்கு நிலவும் பல்வேறு விஞ்ஞானங்களின் நிலைகள், அவை பற்றிய விளக்கங்கள்; தமிழ்ச் சூழலில் தனி மனிதத்துவம் என்பதை வடிவமைக்கிற விஷயங்கள் என இந்தப் பிரச்சினை பலவற்றோடு தொடர்பு கொண்டுள்ளது.

வேர்களை நோக்கித் திரும்ப வேண்டும். அடிப்படையான, கருத்து நிலைகளை நோக்கி, அடிப்படையான மதிப்பீடுகளை நோக்கித் திரும்ப வேண்டும் என இதை அர்த்தப்படுத்தினால் நான் இப்படியான வாதங்கள் குறித்து எப்போதும் சந்தேகம் கொண்டிருக்கிறேன். மரபான மதிப்பீடுகள், பழைமை குறித்த

# தமிழ்: மரபும் தற்காலமும்

## ப்ரான்ஸுவா குரோவுடன் ஒரு நேர்காணல்: ரவிக்குமார்

**ஆறுபதுகளில் ஆரம்பத்திலிருந்து தமிழில் ஆராய்ச்சி செய்துவரும் ப்ரான்ஸுவா குரோ (Francois Gros) பாரீஸில், பாரீஸ் பல்கலைக் கழகத்தின் கீழ்வரும் உயர் ஆராய்ச்சி நிறுவனத்தில் (Ecole Pratique Des Hautes Etudes) தென்னிந்திய வரலாறு மற்றும் மொழியியலுக்கான (Philology) பேராசிரியராகப் பணிபுரிகிறார்.**



**பாண்டிச்சேரி பிரெஞ்ச் இன்ஸ்டியூட்டின் இந்தியாவியல் துறையில் தனது ஆராய்ச்சிப் பணியைத் துவக்கிய குரோ 1977 முதல் 1989 வரை தூரகிழக்கு நாடுகளுக்கான பிரெஞ்சு ஆய்வு நிறுவனத்தின் இயக்குனராகப் பணி புரிந்தார்.**

**சங்கத் தமிழிலிருந்து தற்காலத் தமிழ் வரை நீளும் இவரது ஈடுபாடு பல்வேறு தமிழ் படைப்புகளை பிரெஞ்சு மொழிக்குக் கொண்டு சென்றுள்ளது. பரிபாடல் (1968) திருக்குறள் காமத்துப்பால் (1993) இரண்டும் பிரெஞ்சு நூல் வடிவம் பெற்றுள்ளன. தற்காலத் தமிழ்ச் சிறுகதைகளில் மொழி பெயர்ப்பு வெளிவரவுள்ளது.**

**வருடத்தில் சிறு பகுதியைப் பாண்டிச்சேரியில் தனது ஆராய்ச்சிப் பணிகளுக்காகச் செலவிடும் குரோ பிரான்சின் தென்கிழக்கில் உள்ள லியோன் நகரத்தில் வசிக்கிறார்.**

*முப்பதாண்டுகளுக்கும் மேலாகத் தமிழில் இயங்கிவரும் நீங்கள் தமிழ் மொழியை, அதன் ஆற்றலை எப்படி மதிப்பிடுகிறீர்கள்?*

ஒரு மொழியை மதிப்பீடு செய்யுமளவிற்குத் தகுதி படைத்த ஒரு நபராக என்னை நான் கருதிக் கொள்ள மாட்டேன். ஒரு மொழியை மதிப்பிட ஒருசில சோழர் காலக் கோயில்களில் இருக்கும் அளவுகோலைப் போன்ற ஏற்பாடு எதுவும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. வேறொரு மொழியை, கலாச்சாரத்தைச் சேர்ந்தவர் என்கிற வகையில் அத்துடன் ஒப்பிட்டுப் பார்த்துப் பதில் கூறும்படி நீங்கள் கேட்டால் அப்படி ஒப்பிட்டுப் பார்ப்பதும் தர மதிப்பீடு செய்வதும் அர்த்தமற்றவையென நான் சொல்வேன். "படிநிலைப் படுத்துதல் என்பது அர்த்தமற்றது. எந்தக் கலாச்சாரம் மிகவும் வளர்ச்சியடைந்ததாயுள்ளது எனக் கண்டறியும் நோக்கத்தோடு கலாச்சாரங்களை ஒப்பீடு செய்யும் எந்தவொரு முயற்சியும், தனது நிகல்களைத்தானே வெறுக்கின்ற மேறகத்திய கலாச்சாரத்தின் மற்றுமொரு கீழ்த்தரமான வெளிப்பாடுதான்" என டேனிஷ் எழுத்தாளர் பீட்டர் ஹாக (Peter Heg) எழுதியதை இங்கு மேற்கோள் காட்டுவது பொருத்தமாயிருக்கும். நான் மதிப்பீடு செய்ய விரும்பவில்லை. மாறாக இந்தச் சூழலைப் புரிந்து கொள்ளவே விரும்புகிறேன்.

*நீங்கள் தமிழ் மரபைப் புரிந்து கொள்ளும் விதம் பற்றி கொஞ்சம் விளக்க முடியுமா?*

ஒரு கலாச்சாரத்தைப் புரிந்துகொள்ள மேற்கொள்ளப்படும் வேறுபட்ட அணுகுமுறைகள் என்பவை ஒரு நீண்ட, முதிர்ந்த மரபின் விளைவாகவோ அல்லது புதிதாக ஒன்று உள்வாங்கப்படும் போது உண்டாகும் தாக்கத்தினாலோ ஏற்படுகின்றன. தொழில்நுட்பத் (Technology) தளத்தில் போலவே ஒருவர் கலாச்சாரப் பரிவர்த்தனைகள் குறித்துப் பேசியாகவேண்டும். இது ஒரு போதும் ஒரு வழிப்பட்டதல்ல. உதாரணமாகக் குறிப்பிட்டால் தமிழில், சமஸ்கிருதத்தில் தோன்றிய ஏராளமான உரைகளைச் சொல்லலாம். தமிழ் இலக்கண மரபென்பது_ தொலகாப்பியத்திலிருந்து சங்க இலக்கியம் பற்றி எழுதப்பட்ட மத்தியகால உரைகள் வரை_ தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு மரபின் முக்கியமான உதாரணமாக உள்ளது. இது தனது சொந்தக் கண்டுபிடிப்புக்களை மீண்டும், மீண்டும் செறிவூட்டி, தான் கண்டடைந்த விளைவுகளை விரிவுபடுத்தி மேலும் உயர்ந்த நுட்பங்களை நோக்கிக் கொண்டு செல்கிறது. இது மேற்கத்திய நாடுகளைச் சேர்ந்த இலக்கிய வரலாற்று ஆசிரியர்களை, மொழியியலாளர்களை வசீக

மறுபுறம், புத்தகங்களின் வரலாற்றை, அவற்றின் வேறுபாடுகளை, வாசிப்புப் பழக்கங்களை இன்ன பிறவற்றை ஆராய்கின்ற வரலாற்றறிஞர்கள்_ பிரான்ஸில் ரோஜெ ஷாத்தியெ, அமெரிக்காவில் ராபர்ட் டார்ட்டன் உள்ளனர். அவர்கள் புதிய பார்வையை, எழுத்துலகம் பற்றிய புதிய சிந்தனையைத் தூண்டியுள்ளனர். அவர்களது ஆய்வுமுறையை இந்தியாவிற்கும் விரித்துப் பார்ப்பது மிகவும் சுவாரஸ்யமான விஷயமாயிருக்கும். ஏனென்றால், இங்கு ஆரம்பத்திலிருந்து இன்றிருக்கும் வாடகை நூலகங்கள்வரை வாசிக்கும் பழக்கங்களின் சமூகவியல் குறித்து நமக்கு எதுவுமே தெரியாது. ஒரு கோவில் அர்ச்சகர், ஒரு சிறிய ஜமீன்தார், ஒரு வழக்கறிஞர் முதலியோரின் கலாச்சார உள்ளடக்கத்தைப் புரிந்து கொள்ள, அவர்களுடைய நூலகத் தொகுப்பில் இருக்கும் ஓலைச்சுவடிகள், பிரதிகள் ஆகியவற்றின் பட்டியல்கள், வேறு மொழி நூல்கள் போன்றவற்றை நாம் சமூக வரலாற்று நோக்கில் கவனித்தாக வேண்டும்.

இந்த அணுகுமுறையை எந்தவித கலாச்சாரப் பிரச்சினையும் இல்லாமல் உள் வாங்கிக்கொள்ள முடியும். ஏனென்றால் இந்தியாவும் கூட எழுத்துக்கள், புத்தகங்கள், இலக்கியவாதிகள் சார்ந்த ஒரு உலகம்தான். இதில் முரண்பாடு ஏதுமில்லை.

சிகாகோ பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதப் பேராசிரியராக இருக்கும் ஷெல்டன் பொல்லாக், தென்னாசியாவில் [illegible] எழுதுவதை நோக்கமாகக் [illegible] மேற்கொண்டிருக்கும் ஆராய்ச்சித் திட்டம் இந்த வகையில் கவனத்துக்கு உரியதாகும்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

*கலாச்சாரப் பரிவர்த்தனையில் எல்லாவற்றையும் உள்வாங்கிக் கொள்ள முடியுமா?*

இங்கு லெருவா குரோன் (Leroi Gourhan) என்பவர் கண்டுபிடிப்பு, மற்றும் கடன்வாங்கி உள்வாங்குதல் பற்றிக் கூறியதை நினைத்துக் கொள்கிறேன். அவர் சொன்னார்: "தான் கண்டுபிடிக்கவிருப்பதைத்தான் ஒருவர் கடன் வாங்குகிறார்"

**உலக அளவில் அறியப்பட வேண்டுமெனில் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட வேண்டும். மற்ற மொழிகளுக்கு இருப்பது போன்று தமிழுக்கு வாதிடுபவர்கள், ஆதரவு தேடுபவர்கள் (Lobby) இல்லை. அது போலவே சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் குறைவாகவே உள்ளன.**

ஒன்றுக்கொன்று சுயேச்சையான, ஒன்றுக்கொன்று வளைந்து கொடுக்கும் தன்மை உடைய கட்டமைப்புக் கூறுகளின் அடிப்படையில் நாம் செயல் படுகிறோம் என அவர் கருதினார். புதிய கணணிகளை நாம் உருவாக்குகிறோம். வெளியிலிருந்து சில கூறுகளை நாம் வாங்கிச் சேர்ப்பதன்மூலம் அவற்றை நாம் சாதகமான முறையில் மேம்படுத்தமுடியும். ஆனால், அப்படிச் சேர்க்கப்படுகிற கூறுகள் ஏற்கனவே இருக்கின்ற அமைப்போடு பொருந்திப் போவதாயிருக்க வேண்டும். இது தத்துவத் துறையில் உள்ள சில கோட்பாடுகளுக்கும், இலக்கிய வடிவங்களுக்கும்கூடப் பொருந்துமென நான் நினைக்கின்றேன். இருக்கின்ற நிகவுக்கு மிகவும் அன்னியப்பட்டதாக வெளியிலிருந்து வரும் கூறு இருக்குமானால் அது நிராகரிக்கப்பட்டுவிடும்.

*தமிழில் சுயமான கோட்பாட்டை உருவாக்க வேண்டும் என்கிற குரலை எப்படிப் பார்ப்பீர்கள்?*

இப்போதைய சூழலில் இதுபற்றிக்கூறுவது அவ்வளவு சாத்தியமில்லை. மக்கள் தமது கலாச்சாரத்தை, சூழலைப் புரிந்து கொள்ளும் தேடலோடிருக்கிறார்கள். மண்சார்ந்த சுயமான அடையாளம் என்பதைக் கேள்விப்படும் போது, எதிர்கொள்ளும் போது எனக்கு ஒரு வித தயக்கம் உண்டாகிறது.

சுயமான அடையாளம் என்கிறபோது அதில் பல் ஏக்கங்கள் என்பவற்றை நான் ஐயத்தோடு பார்க்கின்றேன்.

*தற்காலத் தமிழ் சிறுகதைகளை பிரெஞ்சுக்கு மொழிபெயர்த்துள்ளீர்கள். அவை உலகத் தரத்துக்கு உள்ளனவா?*

தற்கால இலக்கியத்தின் மீதான எனது ஈடுபாடு மொழிசாாநதது. இங்கு பல்வேறு பிரதிகளை மானுடவியல் நோக்கில் அணுகமுடியும். தற்கால வாழ்க்கை நிலைகளைக் கூறுவனவாக, அறிமுகப்படுத்துபவையாக அவை இருக்கின்றன. தமிழ் வாழ்க்கையை மானுடவியல் ரீதியில் அணுகுவதற்கான மிகச் சிறந்தவழியாக எனக்கு அது தோன்றுகிறது. ஆனால் இலக்கியமென்று பார்த்தால் பிரச்சினை சிக்கலாகி விடுகிறது.

உலக அளவில் அறியப்பட வேண்டுமெனில் மொழிபெயர்ப்புகள் செய்யப்பட வேண்டும். மற்ற மொழிகளுக்கு இருப்பது போன்று தமிழுக்கு வாதிடுபவர்கள், ஆதரவு தேடுபவர்கள் (Lobby) இல்லை. அது போலவே சந்தர்ப்பங்களும் வாய்ப்புக்களும் குறைவாகவே உள்ளன.

'சமஸ்காரா' நாவலுக்குக் கிடைத்தது போல் நல்ல மொழிபெயர்ப்பு தமிழுக்குக் கிடைக்கவில்லை. இங்கே மொழிபெயர்ப்பவர்கள் தம்முடைய கருத்தியல் சட்டகத்துக்குள் படைப்பை அடக்கி விடுகிறார்கள். அதனால் அதன் அசலான தொனி அடிபட்டு விடுகிறது. இப்படியாகப் பார்த்தால் நாம் மொழிபெயர்ப்பிலுள்ள பிரச்சினைகளைப் பேச வேண்டிவரும்.

அடுத்து, இங்கு வீர்யம் மிக்க படைப்புகள் உள்ளனவா என்று கேட்டால் நிச்சயம் உள்ளன என்று சொல்வேன். உதாரணமாக வேண்டுமென்று கேட்டால் ஜி. நாகராஜனின், புதுமைப்பித்தனின், மௌனியின், லா.ச.ராவின் சில சிறுகதைகளை நான் குறிப்பிடுவேன். இவர்களைத் தமிழின் முழுமையான எழுத்தாளர்களாகக் கருதமுடியும்.

பிரபஞ்சனின் 'சங்கம்' சிறுகதை மானுடவியல் நோக்கில் முக்கியமானது. ஆனால், உலகத் தரத்தில் உள்ள ஒரு சிறுகதையாக அதை எடுத்துக் கொள்ள முடியாது.

'கோவேறுகழுதைகள்' நாவலில் பார்த்தால் இமையத்திடம் ஒரு கதை இருப்பது தெரிகிறது. ஒரு முக்கியமான பிரச்சினையை அவர் சொல்ல முயன்றுள்ளார். நல்ல முயற்சி. ஆனால் ஒரு எல்லைக்குமேல் அது போகவில்லை. அம்பையின் 'வீட்டில் மூலையில் ஒரு சமயலறை' கதையின் இறுதி வரிகள் அக் கதையை அவரது கருதியல் சட்டகத்துக்குள் அடைத்து விடுகின்றன.

இதில் இன்னொரு விஷயமும் வருகிறது. நுட்பம் என்கிற விஷயம். இமையத்தின் நாவல் பல முறை 'எடிட்' செய்யப்பட்டு மறுபடி எழுதப்பட்டதாக அறிந்தேன். இத்தகைய ஒரு 'எடிட்டிங்' ஒரு எழுத்தாளரின் விருப்பத்திறகு உகந்ததாக இல்லாமல் இருந்தாலும் கூட, மறுபுறம் அது அவருக்குக் கிடைத்த அதிர்ஷ்டம். அப்படி 'எடிட்' செய்யப்படாதிருந்தால்தான் இத்தனை நேர்த்தியான பிரதியாக அது அமைந்திருக்காது.

நுட்பம் என்கிற விஷயத்தைப் பொறுத்தவரை பயிற்சியும் அவசியமாகிறது. அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் சிலவற்றில் எப்படிக் கதை எழுதுவது எனக் கற்றுத் தருகிறார்கள். ஒரு படைப்பை உருவாக்குவது எப்படியென்று யாரும் யாருக்கும் கற்றுத் தந்துவிடமுடியாதுதான். ஆனால அதே சமயம் ஒரே படைப்புக்குள் என்னென்ன கூறுகளை எப்படியெப்படி அமைப்பது, அந்த வெளியை (Space) எப்படிப் பயன்படுத்திக் கொள்வது போன்ற விஷயங்களை ஒருவர் பயிற்சி மூலம் தெரிந்து கொள்ளமுடியும். ஒரு படைப்பின் தீவிரத்தை நீங்கள் உணரும்போது பொதுவான உலகத் தரம் ஒன்று உள்ளதென்றுதான் நினைப்பீர்கள். ஆனால் ஒரு படைப்பில் எங்கே எப்படி தீவிரமான வெளிப்பாடு அமைய வேண்டும் என அடையாளம் காட்டுவது சிரமமானது.

(மிகுதி அடுத்த இதழில்)

# பத்தோடு பதினொன்று

## மாயமான இராணுவ அணி

இது நடந்தது முதலாம் உலகப்போர் சமயத்தில். ஒரு நாள் "NOR FOLK" படைப்பிரிவின் ஐந்தாவது அணியைச் சேர்ந்த 267 பேர் சகலவிதமான ஆயுதங்களுடனும் ஒரு காட்டுப் பகுதியை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். ஆனால் திடீரென அவர்கள் அனைவரும் காணாமல் போனார்கள். திரும்பி வரவேயில்லை. அவர்களது ஆயுதங்களோ அல்லது உடல்களோ கூட எங்கு தேடியும் கிடைக்கவில்லை.

அந்த இராணுவ நடவடிக்கையில் பின்னால் சென்ற வேறொரு அணியைச் சேர்ந்த படைவீரர் குறிப்பிடுகையில் முன்னால் முன்னேறிக் கொண்டிருந்த அணியினர் பாரிய முகில் கூட்டமொன்றினால் சூழப்பட்டனர் என்றும் அந்த முகிற் கூட்டம் மேலெழும்பியபோது அவர்களும் அத்துடன் கொண்டு செல்லப்பட்டனர் என்றார். என்ன நம்பமுடியவில்லையா?

## ஜப்பானியரின் திருமண ஆசை

பாரீஸ் நகரம் உலகின் அழகான நகரம் என்பது உலகவியலாளர்களது கணிப்பு. பிரான்சின் தொல் பொருள்களையும் கலையம்சம் மிக்க கட்டிடங்களையும் ரசிக்க வருடம் தோறும் பல இலட்சம் மக்கள் வருவதுண்டு. அதிலும் ஈபிள் கோபுரத்தின் அருகில் நின்று புகைப்படம் பிடிப்பதென்பது இவர்களுக்கு அலாதியான விடயம் தான். ஆனால் ஜப்பானியர்களைப் பொறுத்தவரை எல்லாவற்றையும் விட பாரீசில் திருமணம் முடிப்பதற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

ஜப்பானில் பயண முகவர்கள் பாரீசுக்கு செல்லவென்று, அதிலும் திருமண விசேட பயணச் சலுகைகள் பலவற்றையும் அறிமுகம் செய்கிறார்கள். விசேட விலையில் பயணச்சீட்டு, மற்றும் தேனிலவுக் குழுக்கள் (Honey Moon Group) போன்றவற்றை ஒழுங்குசெய்து விசேட விலைகளில் பல வாரங்களை பாரீசில் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். ஜப்பானியர்களின்

வருடாவருடம் 300 ஜப்பானிய சோடிகளுக்கு திருமணம் பாரீசில் நடக்கிறது. அவர்களது திருமண அல்பத்தில் பாரீசிற்கான விமான டிக்கட்டும் ஈபிள் கோபுரத்தின் முன் நின்று எடுக்கும் புகைப்படமும் பிரதான இடத்தை வகிக்கின்றன.



300 mariages japonais célébrés tous les ans à Paris

வெளிநாட்டு பயண இடங்களில் ஹவாய், அவுஸ்திரேலியா போன்றவற்றிற்கு அடுத்தபடியாக பிரான்சே உள்ளது.

## மின்னியக்கக் கரப்பான் பூச்சிகள்

முன்னூறு மில்லியன் வருடங்களாக மூக்கில் "அண்டெனாவை" வைத்துக்கொண்டு மனிதனால் செல்ல முடியாத இடங்களுக்குள் கூட செல்லக்கூடியவைதான் கரப்பான் பூச்சிகள். உலகில் இவைகள் இல்லாத நாடுகளே இல்லையென்றே சொல்லலாம். அந்த அளவிற்கு இவற்றின் ஆதிக்கம் பெருகியுள்ளது. பல நாடுகளிலும் அதன் காலநிலை, மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலை போன்றவற்றிற்கு இணங்க கரப்பான் பூச்சிகள் உருவத்தில் மாறுபட்டு காணப்படுகின்றன. இவற்றைக் கண்டாலே பலருக்கு 'அலர்ஜி'. பலரது காதுகள் கூட இவற்றால் பதம்பார்க்கப்பட்டுள்ளன.

இப்படி எல்லாருக்கும் அருவருப்பையும், வெறுப்பையும் உண்டாக்கும் இந்தக் கரப்பான் பூச்சிகள் மேல் விஞ்ஞானிக்கு பொறாமை. காரணம் தம்மால், தமது நவீனதொழில்நுட்பத்தால், அடையமுடியாத இலக்குகளை இந்த கரப்பான்பூச்சிகள் சென்றடைகின்றனவே என்பதுதான். இதன் விளைவாக அவர்களது சிந்தனையில் உதித்ததுதான் இந்த "மின்னியல் கரப்பான் பூச்சி" ஜப்பானில் "Isao Shimoyana" எனும் டோக்கியோ நகர ஆய்வாளரும் "Ryohei Kanzaki" எனும் ஓசாகா நகர விஞ்ஞானியும் இணைந்து இதனை உருவாக்கியுள்ளார்கள். அரைவாசி உண்மையான கரப்பான் பூச்சி



யும் மிகுதி அரைவாசி சிறிய மின்சாதனங்களாலும் தயாரிக்கப்பட்டுள்ள இதன் தலைப்பா[illegible] சிறிய [illegible] பொருத்தப்பட்டுள்ளது. தன்னியக்க முறையில் இது இயக்கப்படுகிறது.

மனிதனால் உட்புகமுடியாத பல சிறுகுழாய் வழிகளுக்குள்ளும் மற்றும் கட்டுமானங்களுக்குள்ளும் ஆராய்வுகளை நடத்த இது பெரும் உதவியாயிருக்கும் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

14.01.1997 முதல்
உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களுக்காக
INTERNET சேவை
TamilWeb International
http://www.tamilweb.com
உங்களுக்குத் தேவையான அனைத்துத் தேவைகளும் ஒரே இடத்தில்
★ தேனி தேடல் இயந்திரம் (Theni Search Engine)
★ உலகில் முதன் முதலாக தமிழில் Chat
★ International Tamil Directories
★ Webdesk (Discussion) ★ Tamil web-magazine
வர்த்தகர்களே!
Internetல் உங்கள் நிறுவனத்தை விளம்பரம் செய்திட எம்மை நாடுங்கள்
தொடர்புகளிற்கு: Tel / Fax: (+47) 56 18 02 15

வித்தைகளில் பலவகையானவற்றைக் கண்டிருக்கிறோம். வாய்களுக்குள் இருந்து துணிகளை நீளமாக எடுத்தல், சிறு உருளைகளை வாய்க்குள் போட்டு பூக்களாய் அவைகளை எடுத்தல் போன்றவைகள் ஒருவகை வித்தைகளே. ஆனால் சீனாவின் "XIAN" நகர வாசியில் இந்த வித்தியாசமான நிகழ்ச்சியைக் காணலாம். உண்மையான சிறு பாம்பை மூக்கின் வழியாக உள்ளே நுழைத்து வாய்வழியாக அதனை எடுக்கிறார் இவர். இதனைப் பார்ப்பதற்காகவே இந்த சரித்திர புகழ்பெற்ற நகரத்திற்கு உல்லாசப் பயணிகள் வருகிறார்கள். பாம்புகளை படங்களில் பார்க்கும் போதே எமக்கு மேனி சிலிர்க்கின்றது. ஆனால் இவரது துணிவு பாராட்டத்தக்கதுதான்.

## மறைந்துபோன கப்பல்

அக்டோபர் மாதம் 1981-ம் ஆண்டு 12,000 தொன் எடை கொண்ட அமெரிக்க சரக்குக் கப்பலான "THE POET" எகிப்தை அண்மித்தபோது திடீரென காணாமல் போனது. அது மறைவதற்கு முன் எந்த விமான ஆபத்து செய்திகளும் அனுப்பப்படவில்லை. துறைமுகத்திற்கு கப்பல் வந்து சேராத நிலையில் 3000,000 சதுர மைல்கள் பரப்பளவில் தீவிர தேடுதல்கள் நடத்தப்பட்டும் கப்பலைக்கண்டு பிடிக்கவோ அல்லது சிறு சிதைவுகளைக் கூடவோ இன்றுவரை காணமுடியவில்லை.



The best in quality
the very best in price
M.R.
MODE
collection

எம்.ஆர். மொட் கொலெக்ஷன்
3-வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
15.02.97 விசேட மலிவு விற்பனை
நேரம்: காலை 9.00 - பிற்பகல் 16.00 மணி
பட்டு, பாவாடை, புது விதமான பஞ்சாபி சூட், குழந்தைகளுக்கான நீட்டுப்பாவாடை, பாட்டி சூட் கொலெக்ஷன் ஆட்பனாரன், கொட்டன் சில்க், சொந்தத் தயாரிப்பில் உருவாக்கிய புதுவிதமான பனாரஸ், முத்து பனாரஸ், சுறை ஆகியவற்றை நீங்கள் விரும்பிய வண்ணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
Taunus Str.52-60
60328, Frankfurt/M
Tel:/Fax: 069/251308



# ஞானம் சென்ரர் தொலைபேசி அட்டைகள் ஏனைய தொலைபேசி அட்டைகளை விட விலை குறைந்தவை



# 100 Frs.

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **ALLEMAGNE** | **50 Mn** |
| ANGOLA | 13 Mn |
| ARABIE SAUDIE | 17 Mn |
| ARGENTINE | 20 Mn |
| **BENGLADESH** | **14 Mn** |
| BELGIQUE | 40 Mn |
| BOLIVIE | 16 Mn |
| **BURKINA FASO** | **17 Mn** |
| BURUNDI | 13 Mn |
| CAMBODGE | 12 Mn |
| CAMEROUN | 15 Mn |
| **CANADA** | **62 Mn** |
| REP. C.AFRIQUE | 10 Mn |
| CONGO | 14 Mn |
| **COTE D'IVOIRE** | **18 Mn** |
| CHILI | 21 Mn |
| CHINE | 17 Mn |
| COLOMBIE | 23 Mn |
| CUBA | 15 Mn |
| DANEMARK | 41 Mn |
| EGYPTE | 16 Mn |
| ESPAGNE | 33 Mn |
| ETHIOPIE | 12 Mn |
| FINLANDE | 35 Mn |
| **GABON** | **15 Mn** |
| **GHANA** | **17 Mn** |

| DESTINATION | DURÉE D'APPEL |
|---|---|
| **HAITI** | **17 Mn** |
| HONG KONG | 33 Mn |
| **INDE** | **20 Mn** |
| ISRAEL | 20 Mn |
| ITALIE | 35 Mn |
| JAPON | 36 Mn |
| LIBAN | 15 Mn |
| LUXEMBOURG | 35 Mn |
| **MALI** | **15 Mn** |
| MAROC | 24 Mn |
| MAURICE | 13 Mn |
| MEXIQUE | 31 Mn |
| NORVEGE | 45 Mn |
| **PAKISTAN** | **16 Mn** |
| PAYS-BAS | 40 Mn |
| PHILIPPINES | 18 Mn |
| POLOGNE | 25 Mn |
| PORTUGAL | 29 Mn |
| **SENEGAL** | **14 Mn** |
| **SINGAPOUR** | **40 Mn** |
| **SRI LANKA** | **17 Mn** |
| **SUISSE** | **45 Mn** |
| **THAILANDE** | **16 Mn** |
| TUNISE | 24 Mn |
| VENEZUELA | 27 Mn |
| ZAIRE | 18 Mn |

நிமிடங்கள் யாவும் ஒவ்வொரு தடவையும் அறிவிக்கப்படும்

# GNANAM CENTER COMMUNICATION

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris.

Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14

M°: La Chapelle / Gare du Nord

## 02.02.97 மாவடிவேம்பில் எதிரி முகாமைத் தகர்த்து வெற்றி பெற்றுத் தந்து விரமரணமடைந்த மாவிரர்களின் பெயர் விபரங்கள்

லெப். குமரேசன், மேஜர் கருணாநிதி (சீனு), லெப். சிவ நேசகுமார், லெப். சாந்த ரூபன் (சாந்தகரன்), லெப். இருபா, 2ம் லெப். சிவானந் தன், 2ம் லெப். மலர்முடி யான், 2ம் லெப். கண்ணா ளன், 2ம் லெப். நாகராசா, வீரவேங்கை குரு, வீரவேங்கை சிவபாதம், வீரவேங்கை குமா ரவேல், வீரவேங்கை செம் பருதி, வீரவேங்கை ரவிவர் ணன்,, வீரவேங்கை லோகேஸ் வரன்.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### பா.ம.க....

திரிகையையும் அறிமுகம் செய்து வைத்து அது ஒன்றே தமிழீழத் தில் நடக்கின்ற உண்மைச் செய்திகளையும் தமிழ் மக்க ளின் அவல நிலைகளையும் வெளியுலகிற்கு எடுத்துச்சொல் லும் பத்திரிகை என்றும், தமிழ் கப் பத்திரிகைகள் ஈழமுரசுச் செய்திகளை மறுபிரசுரம் செய்ய வேண்டும் என்றும் தெரிவித் ததாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### விடுதலைப்...

வர்களாக உருவாக்கப்பட்டுள் ளதாகவும் எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் தமது நடவ டிக்கைகளை நடத்தி முடிக்கக் கூடியவர்கள் எனவும் தெரிவிக் கப்படுகிறது.

இவர்களிடம் அதி நவீன சக்திவாய்ந்த இலகு துப்பாக்கிக ளும் ஒரு வாரத்திற்குத் தாக்குப் பிடிக்கக்கூடிய தகர உணவு வகைகளும் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விசேட அணி தேவைகளுக்கு ஏற்றபடி 10 பேர் கொண்ட அணிகளாகப் பிரிந்து ஒரே நேரத்தில் பல எதிரியின் நிலை களை தாக்க வல்லதாகவும் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் அவ் ஆங்கிலப் பத்திரிகை தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

(32ம் பக்கத் தொடர்ச்சி)

### ஸ்கன்டிநேவிய...

பிரச்சினைகளுக்கும் உள்ளாகக் கூடாது என்பதில் நாம் அக் கறை கொண்டுள்ளோம் என வும் டென்மார்க்கின் சிரேஷ்ட அமைச்சக பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ரோகான் தளுவத்தை இந்தியா பயணம்

இந்திய வெளியுறவு அமைச் சர் இந்திர குமார் குஜ்ரால் சிறீ லங்காவிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு திரும்பியவுடன் சிறீலங்கா இரா ணுவத் தளபதி ரோகான் தளு வத்தை கடந்தவாரம் இந்தியா விற்கு சென்றுள்ளார்.

தளுவத்தையின் பயணம் தனிப் பட்ட நோக்கத்திற்கானது எனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் சிறீ லங்காப் படையினருக்கு இந்தி யாவில் மேலதிக பயிற்சிகள் வழங் குவது தொடர்பாக நடவடிக்கை களை மேற் கொள்ளவே அவர் சென்றதாகத் தெரியவந்துள்ளது.

இவர் இராணுவத் தளபதியாக பதவி ஏற்ற பின்னர் இரண்டா வது முறையாக மேற்கொள்ளும் வெளிநாட்டுப் பயணம் இதுவா கும். தனது மனைவி ஜெயந்தி யுடன் சென்ற இவர் கர்நாடக மாநிலத்தில் தங்கியிருக்கிறார்.

இவர் புட்டபத்தியில் உள்ள சாயிபாபாவின் ஆச்சிரமத்துக்குச் சென்று அவரிடம் ஆசி பெற்றதா கவும் தெரிய வந்துள்ளது.


ஜேர்மனியில்

### முல்லைச்சமர்

* COSIMA KINO * Sieglindestr.10 U+S-Bundesplatz. BERLIN — 10.02.1997 திங்கட்கிழமை நேரம்: 13.30 மணிக்கு
* COSIMA KINO * Sieglindestr.10 U+S-Bundesplatz. — 10.02.1997 திங்கட்கிழமை நேரம்: 13.30 மணிக்கு
* COSIMA KINO * Sieglindestr.10 U+S-Bundesplatz. — 10.02.1997 திங்கட்கிழமை நேரம்: 13.30 மணிக்கு
* COSIMA KINO * Sieglindestr.10



நெதர்லாந்தில்

முல்லைச்சமர்

### ஓயாத அலைகள்

காற்றுவெளி

08.02.97 (சனி) மாலை 4.00 மணி
Roosendaal, City Theater

09.02.97 (ஞாயிறு) மாலை 4.00 மணி
Roermond, Nassaustraat 79

16.02.97 (ஞாயிறு) மாலை 2.00 மணி
Sittarad, Eishen howerstraat 724

Leiden, Schagen, Denhaag, Beverwijk, Landgraaf, Assen ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக காண்பிக்கப்பட இருக்கிறது.


தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive


### வாணன் வாகன சேவை




உங்களின் பிரயாணத்
தேவைகளுக்கும் தளபாடங்கள்
பொருட்கள் ஆகியவற்றை ஏற்றி
இறக்கவும் எந்த வேளையிலும்
தயாரான சேவை

**வாணன் வாகன சேவை**

தொடர்புகளுக்கு:
Tel: 42 55 29 35 / 48 33 47 54 / 06 09 26 88 35


## 4ம் ஆண்டு நினைவாஞ்சலி

தோற்றம்: 05.09.1949



மறைவு: 01.02.1993

### அமரர் தம்பிப்பிள்ளை சுந்தரலிங்கம்

(இளையதம்பி) மருதங்கேணி

அன்புதனை அருவியாக்கி
பண்புதனை சிகரமாக்கி
பார்போற்ற வாழ்ந்திட்ட பாசமிகு தந்தையே!
ஆண்டு மூன்று சென்றிடினும்
மறைந்திடுமோ நின் மலர்ந்த முகம்
எம் வாழ்வின் ஒளிவிளக்கே!

உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்

மனைவி இராசலட்சுமி - பிள்ளைகள் சிறீவரதன், அச்சுதன், வாசுகி, சிறீகரன், மணிவண்ணன், அகிலன், நிமலன் - மருமகன் சாந்தகுமார் - தம்பிமார் தனபாலசிங்கம், இராசலிங்கம், யோகராசா, மற்றும் மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்

தகவல்: சு. சிறிவரதன் - ஜெனிவா

## 41-வது நாள் கண்ணீர் அஞ்சலி

தோற்றம்: 05.04.1972



மறைவு: 15.12.1996

### ஜெயராஜசிங்கம் கண்ணதாசன்

கரணவாய் வடக்கு நெல்லியடியைச் சேர்ந்தவர் ஜேர்மனி யில் அகாலமரணமானார்.

தம்பி உனது சகோதரர்கள் உன்னை நினைத்து நினைத்து வாடுகிறார்கள். உனது வாழ்க்கை என்ன கனவா தம்பி! உன் புன்னகை முகம் எங்கே காண்போம். நம்ப முடியவில்லையே உனது மறைவினை. அண்ணா என்று சொல்லுவாயே எப்படி எங்கள் எல்லோரையும் விட்டுவிட்டுப் போனாய்.

இனி எங்கே உன்னைக் காணப்போகின்றோம்.
உனது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
உன் பிரிவால் தவிக்கும் உனது ஐயா, அம்மா, அண்ணன், தம்பி.

J.Kanesalingam
Matteld Str-15, 9532 Ricenbach.
Tel: 071 9254389


### வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்கள்

* விருப்பத்திற்கேற்ப தெரிவுகள்
* விலையில் சிக்கனம்
* தைத்த ஆடைகளின் சுரங்கம்

இன்னும்

* புதிய பழைய CDக்கள்
* தரமான ஜங்கரன் பிரதிகள்
* அன்பளிப்புப் பொருட்கள்

அனைத்திற்கும்

**ரஜிந்தாஸ்**

TEXTILES

TEL: & FAX: 40 36 53 20
Métro: La Chapelle

9, Rue Perdonnet
75010 PARIS



500 FF இற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு ரஜிந்தாசின் பாடல் பிரதி (Video) ஒன்று அன்பளிப்பாக வழங்கப்படும்.

ஈழமுரசு
Eelamurasu Weekly

அனைத்துத் தொடர்புகளுக்கும்:
"EELAMURASU"
22, Rue Perdonnet
75010 Paris
Tél: 01 40 37 63 63
Fax: 01 40 37 64 64

WOODLANDS
AXS Card 100 பிராங்க் மட்டுமே!
Cabin இல் இருந்து தொடர்புகொள்ள 90Frs - 15Min
மிகமிகக் குறைந்த விலையில் கூடிய நேரம் தொடர்பு கொள்ளலாம்.
வர்த்தகர்களுக்கு விசேட விலையுண்டு
அட்டையில் பாவிக்கக் கூடிய நேர அளவு கணனி முறை பதிவில் உங்களுக்கு அறிவிக்கப்படும்
Australie........45 Min.
Canada......... 60 Min.
Inde..............20 Min.
Pakistan.......17 Min.
London .........70 Min.
Sri Lanka......17 Min.
USA ..............70 Min.
Germany........50 Min.
Denmark.........50 Min
Thailand .........20 Min
Singapore ......45 Min.
இன்னும் பல நாடுகள் மிகமிகக் குறைந்த விலையில்...
70, Rue Louis Blanc, 75010 Paris - Tel: 01 40 35 01 04 / 01 40 35 00 27

# வவுனியா - மன்னார் நோக்கிய புதிய இராணுவ நடவடிக்கை

வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கி புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கான முயற்சிகளில் இராணுவத் தரப்பு ஈடுபட்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மைக்காலமாக இராணுவத் தரப்புக்கு ஏற்பட்டு வரும் தொடர் தோல்விகளை சரிசெய்வதற்கான முயற்சியே இதுவென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். ஏற்கனவே பரந்தனில் இராணுவத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்புக்குப் பின்னர் ஏற்கனவே இராணுவத் தரப்பு திட்டமிட்டிருந்த கிளிநொச்சி - வவுனியா பாதைத் திறப்பிற்கான தாக்குதல் சாத்தியமில்லாத நிலையில் வவுனியா - மன்னார் நோக்கிய இராணுவ நடவடிக்கையை படையினர் மேற்கொள்ள இருப்பதாக நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுனியாப் பகுதியில் ஏராளமான இராணுவத்தினரும் ஆயுத தளபாடங்களும் கொண்டு வந்து குவிக்கப்படுவதாகவும் வவுனியாவில் படையினர் பரபரப்புடன் காணப்படுவதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. படையினரின் இந்த திடீர் முயற்சி கொழும்பில் இராணுவ ஆய்வாளர்களின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

## காரைநகர் இறங்குதுறையில் புலிகள் தாக்குதல் ஆறு சிப்பாய்கள் பலி

காரைநகரிலுள்ள கடற்படை இறங்குதுறைக்குள் ஊடுருவி விடுதலைப் புலிகள் மிகவும் துணிகரமான தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர். இத்தாக்குதலில் ஆறு கடற்படைச் சிப்பாய்கள் பலியாகி உள்ளதாகத் தெரியவருகின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு 10 மணியளவில் இடம்பெற்ற இத் தாக்குதல் கடற்படைக்கு அளிக்கப்பட்ட ஒரு அதிர்ச்சி வைத்தியம் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மிகவும் பாதுகாப்பான பகுதியாக இருக்கும் இந்த இறங்குதுறைக்குள் எவ்வாறு புலிகளின் தாக்குதல் அணி நுழைந்தது என்பதுகுறித்து கடற்படையினரிடையே மிகவும் குழப்பம் தோன்றியுள்ளது.

புலிகள் கடலால் வந்தார்களா? அல்லது தரைநகர்வு மூலம் வந்தார்களா? என்பது [illegible] என்பதை [illegible] கொண்ட கடற்படை அதிகாரி ஒருவர் தமது தரப்பில் மூவர் மட்டுமே கொல்லப்பட்டதாகவும் தெரிவித்தார். மோதல் முடிந்து புலிகள் சென்ற பின்னரும் அப் பகுதியில் தேடுதலை நடத்த படைச் சிப்பாய்கள் உடனடியாக முன்வரவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

Tamileelam Archive

## 'ஸ்கன்டிநேவிய' நாடுகளுக்குள் சட்டவிரோதமாகச் செல்லமுடியாது

'ஸ்கன்டிநேவிய' நாடுகளான டென்மார்க், சுவீடன், நோர்வே, பின்லாந்து ஆகியவற்றைச் சேர்ந்த உட்துறை அமைச்சர்கள் சட்டவிரோதமாக தமது நாடுகளுக்குள் நுழையும் இலங்கையர் உட்பட வெளிநாட்டவர்களை தடுக்க முடிவுசெய்துள்ளனர் எனத் தெரிய வருகின்றது. இதற்காகவென இலங்கையிலும் தமது விசேட அதிகாரி ஒருவரை நியமிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த அதிகாரி சட்டவிரோதமாக குடியேற எத்தனிப்பவர்கள் குறித்து தமது அரசுக்கு உரிய தகவல்களை வழங்குவார். அத்துடன் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டவர்களின் நிலையையும் இவர் கவனித்துக்கொள்வார் எனத் தெரியவருகிறது. டென்மார்க்கில் மட்டும் 150 தமிழர்கள் புகலிடம் கோருவதற்கான தகுதியற்றுக் காணப்படுகின்றனர். இவர்கள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

திருப்பி அனுப்பப்படும் இலங்கைத் தமிழர்கள் எவ்வித

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## சித்தாண்டியில் பொதுமக்கள் 10 பேர் படையினரால் கொலை

சித்தாண்டிப் பகுதியில் சிறீலங்கா இராணுவத்தினரின் வெறியாட்டத்திற்கு 10 அப்பாவிப் பொதுமக்கள் பலியாகியுள்ளனர். வீடுகளுக்குள் புகுந்தும் வயலில் வேலை செய்துகொண்டிருந்த அப்பாவிகளையும் இழுத்துக்கொண்டு வந்த இராணுவத்தினர் அவர்களைக் கதறக் கதற சுட்டுக்கொன்றனர். இதுவரை 10 வரையில் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்ட போதிலும், வயல்வெளிகளில் மேலும் பலரின் சடலங்கள் கிடக்கலாம் என அஞ்சப்படுகிறது. படையினரின் காட்டுமிராண்டித் தனத்தில் சித்தாண்டிப் பகுதி சூனியப் பிரதேசமாகக் காட்சியளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விடுதலைப் புலிகளின் 'சுப்பர் ரைகர்ஸ்' புதிய விசேட கொமாண்டோப் பிரிவு

விடுதலைப் புலிகள் தற்போது மிகச் சக்திவாய்ந்த புதிய விசேட கொமாண்டோப் பிரிவொன்றை உருவாக்கியுள்ளார்கள் என கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'சுப்பர் ரைகர்ஸ்' (Super Tigers) எனப்படும் இந்த விசேட கொமாண்டோப் பிரிவு 100 பேர்களைக் கொண்டுள்ளது எனவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனால் நேரடிப் பயிற்சி வழங்கப்பட்டவர்கள் இவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணி கடல், தரை மற்றும் ஆகாயத்தில் கூட எதிரிகளைச் சந்திக்கக்கூடிய வல்லமை படைத்த

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

## பா.ம.க. மகாநாட்டில் 'ஈழமுரசு'

பாட்டாளி மக்கள் கட்சி மகாநாட்டு மேடையில் வைத்து ஈழமுரசுப் பத்திரிகை அங்கு வந்திருந்த பல இலட்சக்கணக்கான மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டதாக தென்னகத்துச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இம் மகாநாட்டில் உரையாற்றிய கட்சித் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான தீரன், 'ஈழமுரசு' ஆசிரியர் அமரர் கஜேந்திரன் பற்றி எடுத்துச் சொன்னதுடன் ஈழமுரசுப் பத்

(தொடர்ச்சி 31ம் பக்கம்)

ஞானம் சென்ரரின் புதிய தொலைபேசி அட்டை
Gnanam Center Communication
இலங்கை ........... 17 நிமிடம்
இந்தியா ............ 20 நிமிடம்
கனடா ......... 62 நிமிடம்
ஜேர்மனி...... 50 நிமிடம்
100Frs மட்டுமே! (மிகக் குறைந்த விலையில்)
10 தொலைபேசி அட்டைகள் 900Frs

195, Rue du Faubourg Saint Denis. 75010 Paris. Tel: 01 46 07 09 36 - Fax: 01 46 07 00 14